355

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

தொகுதி–2 எண்–2

27.9.1991

வெளியீடு—10.4.1992

D
V211,31 N91
N91.2.2
58379

வெளியீடு 10-4-1992 Issued 10-4-1992

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 27, 1991 - தொகுதி 2 - எண் 2
Friday the 27th September, 1991 - Volume 2 · No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

158329

உள்ளடக்கம்

27–09–1991.

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 321—350

2. தகவல் கோரல்—

(அ) இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 24 மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்தல் குறித்து. 351—352

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் வடக்கு மங்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளி யாசிரியர் திரு. காசிலிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவதும் அதுகுறித்து எடுக்கப் பட்ட நடவடிக்கைகளும். 352—353

(இ) வேலூர் மத்திய சிறையிலிருந்து செங்கற் பட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப் படும்போது இரு கைதிகள் (இலங்கைத் தமிழர்கள்) தப்பித்தது குறித்து. 354—355

(ஈ) வடலூர் சேஷசாயி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் மூடப்பட்டிருப்ப தால் தொழிலாளர்கள் அவதியுறுவது குறித்து. 355—356

3. கவன ஈர்ப்பு—

(அ) பழனி வட்டம் பழைய ஆயக்குடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டட வசதி இல்லாதது குறித்து. 357—3[illegible]

(ஆ) வீராணம் ஏரி நீர் பாயும் வாய்க்கால்களில் வளர்ந்துள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடியினால் விவசாயிகள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகி இருப்பது குறித்து. 359—3[illegible]

4. மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். 361—4[illegible]

(ஆ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

1991 செப்டம்பர் 27 பக்கங்கள்


(இ) கோரிக்கை எண் 8—நீதி நிர்வாகம்.

(ஈ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

(உ) கோரிக்கை எண் 43—பல்வகை.

(ஊ) கோரிக்கை எண் 61—பல்வகை மூலதனச் செலவு.

(எ) கோரிக்கை எண் 62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

1. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 361—368, 406—419

2. *திரு. ஆர். சிங்காரம் 368—383, 405, 406, 407—415

3. திரு. வி. பி. சந்திரசேகர் 383—389

4. *திரு. ச. இராமச்சந்திரன் 389—392

5. திரு. என். பன்னீர்செல்வம் 393—399

6. *திரு. வே. தம்புசாமி 399—403

7. திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் 403—406

5. அறிவிப்புகள்—

(அ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1991. 424

(ஆ) தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல். 436—437

6. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1991. 424—425

7. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 424—425

(ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. 434—436

8 பேரவையின் வைக்கப்பெற்ற ஏடுகள். 437—438


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 11, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு, 2022
1991, செப்டம்பர் 27, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 88. திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், 88, 89 ஆகிய இரு வினாக்களும் ஒரே பொருள் பற்றியது. ஆகவே வினா எண் 89, செல்வி பி. நிர்மலா, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். இரண்டு வினாக்களும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பெண்ணாடம் நகரில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி.

88—

* 1288—திரு ச. புரட்சிமணி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் பெண்ணாடம் நகரில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

53—333—1

89—

அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்.

*1948 செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலக வளாகத்தில் இயங்கும் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்று அமைச்சரவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே எப்போது அந்த மேல்நிலைப் பள்ளி அறிவிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்க வேண்டுமானால் 8 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வேறு மேல்நிலைப் பள்ளிகள் இல்லாமல் இருக்குமேயானால், அதற்கு முன்னுரிமை தரப்படுகிறது. இந்த நிலையில் பெண்ணாடத்தில் மேல்நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்கிறபோது, தற்போதுள்ள பள்ளிக்கு அருகில் 2 கிலோ மீட்டர் தொலைவிலும், 5 கிலோ மீட்டர் தொலைவிலும் இப்போது மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே 8 கிலோமீட்டர் தொலைவிற்குள் எங்கெங்கே மேல்நிலைப் பள்ளிகள் இல்லையோ அங்கேயெல்லாம் அவைகளை நிறைவேற்றியதற்குப் பிறகுதான் இந்த இடத்திலே புதிய மேல்நிலைப் பள்ளி தொடங்குவதைப் பற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதியில் பெண்ணாடம் ஒரு முக்கிய நகரமாகும். இந்தப் பகுதியில் உள்ள மகளிர் தற்போது ஆண்களோடு கலந்து படிக்க வேண்டியுள்ளதால், பெண்கள் படிக்க விரும்பினாலும், பெற்றோர்கள் அவர்களைப் பள்ளி களுக்கு அனுப்ப தயங்குகின்றனர். பெண்களுக்குச் சம உரிமை



வழங்கும் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் பெண்ணாடம் நகரில் உள்ள பெண்கள் மேல்நிலைக் கல்வி பெற தனியாக பெண்களுக்கென ஒரு பள்ளி துவங்க வேண்டுமென வற்புறுத்துவதோடு, அடுத்த நிதி ஆண்டில் அதைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப் பதைப்போன்று பெண்ணாடம் பகுதியில், பெண்களுக்கென ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கான அவசியம் இருக்கிற தென்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நான் முன்னாலேயே சொன்னது போன்று 2 கிலோமீட்டர் 5 கிலோ மீட்டர் தொலைவில் 2 பள்ளிகள் இருக்கின்றன. அவை ஆண் களும், பெண்களும் சேர்ந்து படிக்கின்ற பள்ளிகள். எனவே இந்தப் பகுதியில் பெண்களுக்கென்று ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களேயானால், அவர்கள் அதற்கு முயற்சி எடுத்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற வசதியுள்ளவர்கள், கொடை யுள்ளம் கொண்டவர்கள், குறிப்பாக பொது மக்கள் இடத்திலே நிதி சேகரிக்கிற முயற்சியில் ஈடுபட்டு, பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு அடிப்படையாக நிதியைச் சேகரித்து, அரசுக்குத் தெரிவிப்பாரேயானால் அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த மேல்நிலைப் பள்ளியை சேர்க்க இயலுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9.35

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 2,500 மாணவர்கள் படிக்கக்கூடிய எனது திண்டுக்கல் அரசு உயர்நிலைப் பள்ளியை தயவு செய்து நமது புரட்சித் தலைவி ஆட்சியிலாவது மேல்நிலைப் பள்ளியாக மேம் படுத்தி ஏழை மாணவர்களின் பெற்றோர்களின் சிரமத்தைக் குறைக்க இயலுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பள்ளியில் படிக்கின்ற மொத்த மாணவர்கள் தொகையைச் சொல்லுகிறார்கள். மேல்நிலை பள்ளி அதிகமாக ஒன்று வேண்டு மானாலும், அல்லது உயர்நிலைப் பள்ளியை மேம்படுத்த வேண்டுமானாலும், பத்தாவது வகுப்பிலே இருக்கின்ற மாணவ, மாணவர்களின் எண்ணிக்கையை வைத்துத்தான் 11-வது வகுப்பு தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்கிறது. ஆகவே இந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில் 200 மாணவ மாணவியர்கள் பத்தாவது வகுப்பில் படிக்கிறார்கள் என்று இருக்கிறது. என்றாலும் திண்டுக்கல் நகரில் 9 மேல்நிலைப் பள்ளிகள் இருக் கின்றன. ஒரு பள்ளியில் 17 மாணவர்கள் இருக்கிற பள்ளியும்

இருக்கிறது. ஆகவே இப்படி வாய்ப்புகள், வசதிகள் நகரத்திலே இருக்கிற காரணத்தால், உடனடியாக அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான திட்டம் அரசிடத்திலே இல்லை.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கூறியது போல 9 மேல்நிலைப் பள்ளிகள் இருந்தாலும் உண்மையிலேயே சில குழந்தைகள் பக்கத்திலே உள்ள கிராமங்களுக்குச் சென்று படிக்கின்றனர். அரசாங்க மேல்நிலைப் பள்ளிகளில் நடுத்தர, ஏழை குடும்பத்து மாணவர்கள்தான் பயிலுகிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற செலவிலே பேருந்துக்கு வேறு செலவு செய்து கொண்டு அவர்கள் பத்துப் பதினைந்து கிலோமீட்டர் தள்ளிச் சென்று மேல்நிலைப் படிப்பு படிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும். அடுத்த நிதியாண்டிலாவது இதைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே இருக்கின்ற குறிப்பின்படி 9 மேல்நிலைப் பள்ளிகளும் திண்டுக்கல்லிலேயே இருப்பதாகத்தான் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. புனித மரியம்மை மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல், தட்லி மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல், எம்.வி.எம். மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல், எம்.எஸ்.பி. சோலை நாடார் மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல், செயின்ட் சோசப் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல், நேருஜி நினைவு நிதி நகர மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல், அண்ணாமலையார் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல், ஊர்து மகளிர் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல், ஆகிய 9 மேல்நிலைப் பள்ளிகளும் திண்டுக்கல் நகரத்திலேதான் இருக்கின்றன. ஆகவேதான் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுகிற திட்டம் அரசிடத்திலே இல்லை என்று குறிப்பிட்டேன். ஆகவே அந்த நகரத்திலே இந்தப் பிள்ளைகள் படிக்க வாய்ப்புகள் வசதிகள் இருக்கின்றன. நீண்டதூரம் போக வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். கிராமத்திலே உள்ள பிள்ளைகள் தான் நகரத்திலே வர வேண்டிய அவசியம் இருக்குமே தவிர நகரத்திலே உள்ள பிள்ளைகள் கிராமத்திலே போய் படிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும்போது சுமார் 8 கி. மீ. தொலைவிலே ஒரு பள்ளி



இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நிபந்தனையை விதித்திருக்கிறார்கள். ஆனால் இன்று சில இடங்களிலே பெண்களுக்கும், ஆண்களுக்கும் தனித்தனியாக பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பெண்களை பிளஸ்2 படிப்பதால் கொஞ்சம் பெரியவர்களாக இருப்பதால் ஆண்கள் பள்ளிக்கு அனுப்புவதற்கு கொஞ்சம் அச்சப்படுகிறார்கள். பெண்கள், ஆண்கள் பள்ளிக்குச் சென்றால் என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் அச்சப்படுகிற காரணத்தால் பெண்களுக்கென்று தனியாக பள்ளிகள் இருக்கும் இடத்திலே விதியைத் தளர்த்தி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று பெண்களை, ஆண்களும்–பெண்களும் படிக்கிற பள்ளிகளுக்கு அனுப்புவதற்கு அச்சப்படுகிறார்கள் என்று சொல்லுகிற கருத்து இந்தக் காலத்திற்கு ஏற்றதல்ல. ஆண்களும் பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ வேண்டுமென்று போராடுகிற இந்த காலத்திலே, ஆண்களோடு பெண்களும், பெண்களோடு ஆண்களும், சகோதர சகோதரிகளைப் போன்று படிக்க வேண்டிய ஒரு பருவத்தில் பயப்படுவதற்கு அவசியமில்லை என்றுதான் அரசு கருதுகிறது. இருந்தாலும் பெண்களுக்கு என்று ஒரு உரிமை வழங்கி, அவர்களுக்கு என்று தனி மேல்நிலைப்பள்ளிகள் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால் அல்லது அந்தப் பகுதி மக்கள் விரும்பினால், அதற்கு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்கி அதற்கு வேண்டிய நிதி உதவியை, இடத்தை மற்றும் பல்வேறு வசதிகளை வழங்குவதற்கு முன்வருவார்களேயானால் அத்தகைய பெண்களுக்கு என்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்குவதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பெ. பொன்னுசாமி.

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மேல்நிலைப்பள்ளியில் 2,500 மாணவ மாணவியர்கள் படிக்கிறார்கள். அதிலே 1,000 பேர் பெண்கள் படிக்கிறார்கள். அந்த பள்ளியை 'பைஃபர்கேட்' பண்ணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி என்று மாற்றுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா? அதே நேரத்தில் ஃபைனான்ஷியல் கமிட்மெண்ட் இல்லாமல் அதை பைஃபர்கேட் பண்ணுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்ன கருத்தைத் தான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்ற ஒரு வாய்ப்பை இந்தப்

பருவத்திலே ஏற்படுத்தி அவர்களிடத்திலே அப்படிப்பட்ட உணர்வுகளை வளர்க்கவில்லையானால், ஏதோ ஆண்களையும் பெண்களையும் வேறு வேறு ஜாதிகளாகப் பிரித்து வைப்பதைப் போல ஒரு உணர்வை நாமே வளர்க்கிறோம் என்றுதான் பொருள்படும். ஆகவே அப்படிப் பிரிப்பது என்பது அந்த அடிப்படையில் பிரிப்பது கூடாது. பெண்களுக்கு என்று தனியாக சில தொழிற் திட்டங்கள் 'வொக்கேஷனல் எஜுகேஷன்' அந்த மேல்நிலைப்பள்ளிகளிலே கற்பிக்கப்படுகின்ற காரணத்தினாலே அவர்களுக்கு என்று தனியாக தொழிற் கல்வி கற்றுத் தருவதற்கு வசதியாக பெண்களுக்கு என்று மேல்நிலைப் பள்ளிகள் அமைக்க வேண்டும் என்றுதான் நாம் எண்ண வேண்டுமே தவிர ஆண்களோடு சேர்ந்து படிக்கவே கூடாது என்கிற அந்த வைதீக மனப்பான்மையில் அந்த உணர்வைக் கொள்ளக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களை உங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த ஃபைனான்ஷியல் கமிட்மெண்ட் இல்லாமல் அப்படி பிரிக்கலாமா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அவசியம் என்று வருகிறபொழுது பெண்களுக்கு என்று தனியாக உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளையும் உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் பெண்களுக்கு என்று தனியாக பிரிகிறபோது ஃபைனான்ஷியல் கமிட்மெண்ட், பொருளாதார சுமை நமக்கு இல்லாமல் பிரிப்பது என்பது இயலாத காரியம். அதற்கு என்று தனியாக கட்டிடம் வேண்டும்; ஆசிரியர்கள் வேண்டும், பொருளாதார சுமை இல்லாமல் பிரிப்பது என்பது நடக்காத ஒன்று. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் முன்வந்து அரசுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது ஒரு பள்ளிக்கும் இன்னொரு பள்ளிக்கும் இடையே 8 கிலோ மீட்டராவது இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். பெண்களுக்கு என்று இருக்கின்ற மேல்நிலைப்பள்ளியிலே ஒரு வகுப்பிலே 60, 70, 80 பேர்கள் கூட படிக்கின்ற நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, 8 கிலோ மீட்டர் என்பதைக் குறைத்து ஒரு நகரத்திலே இன்னொரு பள்ளி இருந்தால் அந்தப் பள்ளியிலேயாவது உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப்பள்ளியாக ஆக்குகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 கிலோ மீட்டர் என்பது பொதுவாக வைக்கப்பட்டு இருக்கிற ஒரு வரைமுறை. அது, சில நேரத்திலே அதைத் தவிர்த்தும் மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப்





படுகின்றன. குறிப்பாக பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கிற கிராமப்பகுதிகளாக இருந்தால், இந்த 8 கிலோ மீட்டர் தொலைவு என்பதைக் குறைத்துக் கொள்கிற அந்த விதி விலக்கையும் அரசாங்கம் வைத்து இருக்கிறது. அதைப்போல நகரங்களிலே மிக அதிகமாக மாணவ மாணவிகள் படிக்கின்ற நேரத்திலே, இந்த 8 கிலோ மீட்டர் பார்ப்பது கிடையாது. நான் முதல் கேள்விக்குப் பதில் அளித்தபோது இதே கேள்விக்கு திண்டுக்கல் நகரத்திலே 9 பள்ளிச்கூடங்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கிற நேரத்தில் அந்த 8 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளே தான் அவ்வளவும் இருக்கின்றன என்பது தெரிகிறது. ஆகவே இது விலக்கு அளிக்கப்படும். ஆனால் தேவையான வசதிகள், நிதி ஆதாரங்கள் அரசுக்கு உதவியாக அந்தப் பகுதியிலே வாழ்கிற பெருமக்கள், அந்தப் பெற்றோர்கள் முன்வந்து வழங்குவார்களேயானால் அரசு அப்போது அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். ராஜு.

திரு. எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கிராமங்களில் படிக்கும் மாணவ மாணவிகள் 40 கிலோ மீட்டர் தூரம் அளவுக்கு மேல்நிலைப்பள்ளிக்குச் செல்வதை அரசு அறியுமா? அந்த மாதிரி கிராமங்களிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரம் வரை செல்வதற்கு, அந்த மாணவ மாணவிகளுக்கு ஸ்ரெங்த் வேண்டும் என்றால், இன்னும் ஒரு 10 வருடங்கள் ஆனாலும் கூட அந்தக் கிராமங்களில் அப்போது ஸ்ட்ரெங்த் கிடைக்காவிட்டால் ஸ்பெஷல் கேஸ் ஆக, சிறப்பு வழியிலே அந்த மாதிரி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு அங்கு மேல்நிலைப்பள்ளி ஒன்றை அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10வது வகுப்பிலே 60 மாணவர்களுக்குத் குறையாமல் இருந்தால், அவர்கள் படித்துத் தேருகிற போது அந்த மேல்நிலைப்பள்ளி அங்கு தொடங்க வேண்டும், அல்லது மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட வேண்டுமென்பது அரசினுடைய கொள்கை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது போன்று, குறிப்பாக அவர்கள் வாழ்கிற நீலகிரி போன்ற மலைப் பகுதியிலே அவர்கள் சொல்வது போன்று அதிக மாணவர்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. 10 மாணவர்களுக்கு 15 மாணவர்களுக்கு என்று ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்க முடியாது. ஒரு சில இடங்களிலே நாம் கொஞ்சம் கஷ்டத்தைப் பொறுத்துத்தான் ஆக வேண்டும். ஆகவே குறைந்த பட்சம் 50 அல்லது 60 மாணவர்கள் இருந்தால்தான் 7 அல்லது 8 லட்சம் ரூபாய் உதவி செய்து மேல்நிலைப் பள்ளியைத் தொடங்குவதற்கு அரசு முயலும்.

[1991 செப்டம்பர் 27

அல்லது 5 மாணவர்கள் 10 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால், எத்தனை மேல்நிலைப்பள்ளிகளைத்தான் தொடங்க முடியும்? ஆகவே நாம், வளருகிற காலம் வரை இன்றைக்கு போக்குவரத்து வசதிகள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்த சூழ்நிலையில் மாணவிகள் பக்கத்திலே போய் படிப்பதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆகவே குறைந்த மாணவிகள் இருந்தால் கொஞ்ச தூரம் பயணம் செய்து பள்ளிகளில் போய் படிப்பதுதான் சிறந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே புதிதாக மேல்நிலைப்பள்ளி ஆரம்பிப்பதற்கு எவ்வளவு நிதி வேண்டும்? எவ்வளவு இடம் வேண்டும்? முன்பு புரட்சித் தலைவர் ஆட்சியில் ரூ. 25,000 பொதுமக்களிடமிருந்து வசூல் பண்ணி கட்டி, நாங்களே மேல்நிலைப் பள்ளியை ஆரம்பித் திருக்கிறோம். தி.மு.க. ஆட்சியில் ஒரு லட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று போட்டிருப்பதாக அறிகிறோம். அது உண்மையா அது குறைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேல்நிலைப்பள்ளித் திட்டம் தொடங்குகிறபோது மத்திய அரசாங்கத்தினுடைய கல்விக் கொள்கையையொட்டி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுடைய காலத்திலே தொழில் கல்வியும் சேர்த்துப் பள்ளிக் கல்வியோடு படிக்க வேண்டுமென்று மிகச் சிறந்த திட்டம் மிக வெற்றிகரமாக தமிழகத்திலே அமல்படுத்தப்பட்டது. தொடக்க காலத்தில் ரூ. 25,000, அதற்குப் பிறகு உயர்த்திக் கொண்டு வந்தார்கள். இப்போது ஒரு லட்சம் ரூபாய் முன் பணமாகக் கட்ட வேண்டுமென்று விதி வகுக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு இருக்கிற பொருளாதார சூழ்நிலையில் ஆசிரியர்களுடைய ஊதியங்கள் எல்லாம் உயர்த்தப்பட்டிருக்கிற சூழ்நிலையில் ஒரு மேல்நிலைப்பள்ளி தொடங்க வேண்டுமானாலே சுமார் ரூ. 5.50 லட்சம் உடனடியாக செலவு செய்தாக வேண்டும். அதற்குப் பிறகு கட்டிடங்களுக்கு முதலீடு செய்தாக வேண்டும். ஆகவே அப் படிப்பட்ட நெருக்கடியெல்லாம் வளர்ந்து கொண்டிருக்கிற சூழ் நிலையில் ஒரு லட்சம் ரூபாய் முன்பணமாகக் கட்டுகிற பொறுப்பைக் கூட பெற்றோர்கள் அல்லது அந்தப் பகுதியிலே வாழ்கிறவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையானால் அரசாங்கம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை, செலவு செய்து, எவ்வளவு லட்சம் மாணவர்களுக்கு கல்வியைக் கற்றுத் தர முயற்சிக்கிறது என்பதையும் இதிலே நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆகவே ஒரு லட்சம் ரூபாய் முன் பணம் கட்டவேண்டுமென்று சொல்வது அவ்வளவு கஷ்டமான ஒரு காரியமாகத் தெரியவில்லை. காரணம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் 20 மேல்நிலைப் பள்ளிகளுக்கு



1991 செப்டம்பர் 27]

இந்த ஆண்டு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதில் கிருஷ்ண ராயபுரம் தொகுதியில், மிக சாதாரண குக்கிராமத்தில், அவர்கள் ஒரு லட்சம் ரூபாயை ஒரு வருடத்திற்கு முன்பே கட்டி அங்கே பள்ளி வேண்டுமென்று கேட்டு அது அனுமதிக்கப்பட் டிருக்கிறது. அப்படிப்பட்ட பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியில் எல்லாம் மக்கள் தாங்களே இந்தக் கல்விப் பணியில் தங்களை இணைத்துக் கொள்வதற்காக முன் வருகிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களை அன்போடு கேட்டுக் கொள்வேன், கொஞ்சம் முயற்சி செய்து பொது மக்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள், அவர்களை கொஞ்சம் தட்டினால் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப் படும் என்பதுபோல, இங்கேயே கேள்வியைக் கேட்டு, பள்ளி களைக் கேட்டுக் கொண்டிருப்பதை விட, அங்கே போய் அந்தப் பெற்றோர்களிடம் சொல்லி, நீங்கள் முயற்சியெடுத்து கொண்டால், நீங்கள் விரும்புகிற இந்த மேல்நிலைப் பள்ளிகள் அமைவதற்கு உதவியாக இருக்கும்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதில்ல் திண்டுக்கல்லில் ஒன்பது மேல்நிலைப் பள்ளிகள் இருக் கின்றன. அதிலே ஒரு பள்ளியில் 17 குழந்தைகள் தான் இருக்கிறார்கள். ஆகவே, கொடுப்பது சாத்தியமில்லை என்று சொன்னார்கள். அந்த 17 குழந்தைகள் இருக்கிற பள்ளியில், இன்னொரு பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு போகிற குழந்தைகளுக்கு அவர்கள் மீண்டும் பரிட்சை வைக்கிறார்கள். அந்தப் பரிட்சையில் மார்க் வாங்காவிட்டால் அவர்களைச் சேர்க்க மறுக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இந்தப் பள்ளியை இதையொன்றும் பெரியது என்று நான் நினைக்கவில்லை. ஆகவே, இந்தப் பள்ளியை மீண்டும் மேல்நிலைப் பள்ளியாக மாற்றி கொடுத்தால்தான், அங்கே படிக்கிற மாணவ மாணவியர் களுக்கு அந்தப் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து, அதற்கு தகுந்த நிலை அளிப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு அளவு வரை மக்களுக்கு இலவச கல்வியை, கட்டாய கல்வியை வழங்க வேண்டுமென்று அந்த உறுதியை மேற்கொண்டு இருக்கிறது. உயர்நிலைப்பள்ளி

கல்வி வரை எப்படியாவது, அரசாங்கம் எப்பாடுபட்டாகிலும், எவ்வளவு செலவு செய்தாலும், அந்தக் கல்வியை வழங்கு வதற்கு திட்டமிட்டு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு மேல் மேல்நிலைப்பள்ளி, அதற்கு மேல் கல்லூரிகள், தொழில் கல்வி என்று வருகிறபோது, அதிலே பொது மக்களுடைய பங்கும் இணைய வேண்டுமென்றுதான் அரசாங்கம் விரும்பு கிறது. இப்போது இங்கே இருக்கிற கேள்வி அரசு உயர் நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுகிறீர்களா என்பது. ஏற்கனவே அங்கே ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி இருக்கிறது. மற்றும், எட்டு தனியார் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நீங்கள் ஒரு மேல்நிலைப் பள்ளிக்குள்ளே நுழைகிறபோது அவர்கள் மெட்ரிகுலேஷன் என்ற அந்தத் திட்டத்திலே நடத்துகிற பள்ளியாக இருந்தால் இங்கேயிருந்து போகிற மாணவர்களுக்கு அவர்கள் பரிட்சை வைக்கிறார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை. அந்த மெட்ரிகுலேஷன் என்பது அவர்களுடைய சொந்த விருப்பத்தின் அடிப்படையில் நடத்தப்படுகிற திட்டம். அதைத் தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கல்விகொள்கையைப் பொறுத்தவரையில், பொதுவாக இந்த உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் பொறுத்த வரையில் இதை சீர்படுத்த வேண்டும், ஒருங்கிணைந்த கொள்கை வேண்டுமென்று அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே, ஒரு பள்ளி தன்னுடைய மாணவர்கள் கெட்டிக்காரர்களாக விளங்க வேண்டும் என்ற அடிப்படையில், வெளியில் படித்து விட்டு வருகிற மாணவர்களுக்கு டெஸ்ட் வைக்கிறார்கள். அப்படி டெஸ்டிலே தேற வேண்டுமென்பது இயற்கையாக நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிற நியதிதான். ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இதிலே பணச்செலவு ஏற்படுகிறது. நிதிநெருக்கடிகள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். 1,300 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம். என்றாலும் மேல்நிலைப் பள்ளிக்காக இவ்வளவு நேரம் வாதிட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவேதான் அரசாங்கம் இதிலே மிகுந்த கவலையோடு இந்தப் பிரச்சினைகளை கவனித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்த டெஸ்ட் வைக்கிறார்கள் என்று சொன்னால், எந்த நோக்கத்தில் வைக் கிறார்கள் என்பதைப் பரிசீலித்து, அப்படி ஒரு தடை இருக்கு மானால், அந்தத் தடையைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 90. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





## திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டிடம்.

* 503. திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத் தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருவத்தேவன் கிராமத்தில் வேறு பக்கா கட்டடங்கள் இல்லாத காரணத்தால் இந்த கூட்டுறவுச் சங்கம் இயங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ரெக்காடுகளைப் பராமரிப்பது பாதுகாப்பது போன்ற கஷ்டங்கள் இருக்கின்றன. இதிலே மாவட்டத்திலே பெரும்பகுதி எல்லா இடங்களுக்கும் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு மீண்டும் பரிசீலனை செய்து திருவத்தேவன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்ட அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடந்த 3, 4 ஆண்டுகளாக நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நிதியாதாரங்கள் தற்போது அந்த வங்கியில் எதுவும் இல்லை. ஆகவே, பொது நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுகிற நிலைமைகள் தற்போது இல்லை. நிதியாதாரங்கள் வளர்ந்த பிறகு அதுபற்றி யோசிக்க லாம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தைப் பொறுத்தவரையில் எனக்கு மிக நன்றாகத் தெரியும். உங்களுடைய கஷ்டங்களோடு நானும் பகிர்ந்து கொண்டு, வருகிற ஆண்டாவது இதைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டிற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லபடியாக அந்தச் சங்கத்தை இயங்க வைப்பார்களானால் முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 91. திரு. மா. சுந்தரதாஸ். டாக்டர் எம். கருப்புசாமி. மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர்.

தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்தல்.

* 1046. திரு. மா. சுந்தரதாஸ் :

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யவும், சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காப்பி, தேயிலை, ரப்பர் மற்றும் சின்கோனா ஆகிய தோட்ட நிறுவனங்கள் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் காலமுறைப்படி அரசால் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. அரசாணை எண் 1171 (தொழிலாளர் துறை) நாள் 11-6-1985-ல் மூலம் கடைசியாக இத்தொழிலுக்கு குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். அரசாணை எண் 1171 (தொழிலாளர் துறை), நாள் 11—6—1985-ல் குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

முற்பகல் 9-55

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படுகிறது? அவர்களுடைய ஊதியம் ரப்பர் தோட்டத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களைப் போல, தேயிலை தோட்டத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களைப் போல, சம்பளம் இணையாக இருக்கிறதா? எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய விவரங்கள் நிறைய இருக்கின்றன சேர்வராயன் மலை, சேர்வராயன் தலைநார் எஸ்டேட்டுகள், ஆனைமலை, பழனி மலையில் உள்ள இந்த எஸ்டேட்டுகள் தவிர, சின்கோனா தோட்டங்களிலே வேலை செய்கின்ற தேயிலை. காப்பித் தோட்டங்களிலே வேலை செய்கின்ற ஆண் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 6.35 ரூபாய் டி ஏ. 3.84 ரூபாய்



சிறுவர்களுக்கு 4.4 ரூபாய் அடிப்படைச் சம்பளம், டி.ஏ. 2.4' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. காப்பித் தோட்டங்களுக்கு பெரியவர்களுக்கு 5.7 பேசிக் வேஜஸ் டி.ஏ. 3.84. சிறுவர்களுக்கு 4 ரூபாய் அடிப்படைச் சம்பளம், டி.ஏ. 2.4 என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் டீ, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு, பெரியவர்களுக்கு 6.35, டி.ஏ. 4.8. சிறுவர்களுக்கு 4.4, டி.ஏ. 3 ரூபாய்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய மிக குறைந்த ஊதியம் கொடுத்தாலும் கூட, இன்று நம்முடைய டிமாண்ட் நாட்டிலே சின்கோனா 25-ஐச் சேர்க்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? 24 கழிந்தால், 26தான் வருகிறது. இதை அரசு செய்யுமா? இப்போது நாம் கொடுத்தால் கூட ஆளுநர் அவர்களுடைய ரெக்கமன்டேசன் இல்லாமல், இந்த டிமான்டிலே எந்த அளவிலே பணம் ஒதுக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன். தேயிலைத் தோட்டத்திலும், மற்றும் உள்ள தோட்டத்திலும் வேலை செய்கின்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரே யூனிபார்மாக ஊதியம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்தபட்சக் கூலி விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டு, 5, 6 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, இந்த குறைந்தபட்ச ஊதியங்களை மாற்றி அமைப்பது குறித்து ஆலோசனைக்குழு ஒன்றை அமைப்பது சம்பந்தமாக அரசு ஆலோசித்து வருகிறது. ஆகவே, அந்த நேரத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் பரிசீலித்து, முடிவு எடுக்கலாம்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த இமயமே இறங்கி வந்து தன், தாழ்வான நதிகளைத் தழுவிக் கொள்வதைப் போல, இத்தமிழினத்தின் தாய்க்குலத்தோடு ஒன்றிவிட்ட என் தாயே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, தேயிலைத் தோட்டங்களிலே 80 சதவீதம் பணிகளை தாய்மார்கள்தான் செய்கிறார்கள். என் தாயும் தோட்டத் தொழிலாளியாக இருந்தவர் என்பதால் இந்தத் தொழிலாளர்களின் சிரமங்களை அனுபவபூர்வமாக என் வாழ்க்கையில் உணர்ந்தவன். ஆகவே, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வை வளமாக்கும் வகையில். தினக்கூலி வாரக்கூலி என்ற முறையை மாற்றி, மில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போல, கூலியை உயர்த்தி, மாதச் சம்பளம் வழங்கினால். அவர்கள் வாழ்வு மேம்படும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருத்தி அமைக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அப்போது இதுபோன்ற கருத்துக்களை பரிசிலனை செய்யலாம்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களில் வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டுவது மிகவும் சிரமம். எல்லாவித உணவுப் பொருட்களும் கீழ்த் தேசத்திலிருந்துதான் வரவேண்டியிருப்பதால், கீழ்த் தேசத்தில் இருப்பதைவிட, கிட்டத்தட்ட 1½ மடங்கு. 2 மடங்கு அங்கே விலை அதிகமாக உள்ளது. ஆகவே, 2 மடங்கு, அதிக விலை கொடுத்து, உணவுப் பொருட்களை வாங்கி, 3 வேளை அவர்கள் சாப்பிடுவது என்பது மிகவும் கஷ்டம். ஆகவே. அடிப் படைச் சம்பளம் பிளஸ் டி.ஏ. என்று சேர்த்து, குறைந்தபட்சக் கூலியாக ரூ. 30 நிர்ணயத்தால்தான், அவர்கள் வாழ்கையில் ஓரளவாவது, உணவிற்குச் சமாளிக்க முடியும். ஆகவே. குறைந்த பட்சக் கூலியாக ரூ. 30 நிர்ணயிக்க ஆவன செய்யப்படுமா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அமைக்கப்பட இருக்கின்ற அந்தக் குழு இதையெல்லாம் ஆலோசித்து அவர்கள் முடிவுகளைச் சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பழனிசாமி.

திரு. க. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பதற்காக ஒரு கமிட்டி அமைத்து செயல்படுவதில் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால், இடையிலே அவர்களுக்கு தொழில் களில், தொழிலாளர்களுக்கும். நிர்வாகத்திற்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு, நிர்ணயிப்பதைக் காட்டிலும், அதிக சம்பளம் பெற்றுவிடுகிறார்கள். ஆகவே, காலதாமதமாக வருகின்ற அந்த குறைந்த பட்சக் கூலி நிர்ணயச் சட்டம் கட்டுப்படாமல் அதனால் அரசுக்கு பல்வேறு வேலைகள், பணிகள் முடக்கமாகி விடுகிறது. ஆகவே, குறைந்த பட்சக் கூலி என்று நிர்ணயிக்கிற அந்தக் கமிட்டியை மிகக் குறைந்த கால அளவில் நிர்ணயிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்று கேட்க உள்ளேன். ஆவலாக

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனத்திலே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.



டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்தில் ஒரு ஏக்கர் தேயிலைத் தோட்டத்தில் ரூ. 5 இலட்சம் நெட் பிராபிட் வருவதாகத் தெரிகிறது. அதாவது ஒரு செடிக்கு ரூ. 200 நெட் பிராபிட் வருவதாகத் தெரிகிறது. இது அனைத்தும் தொழிலாளர்களுடைய வேர்வையாலும், ரத்தத்நாலும்தான் கிடைக்கப்பெறுகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அங்கே ஏதும் மெஷினரியோ, டெக்னாலாஜியோ இல்லாத காரணத்தால் அனைத்து தேயிலைத் தோட்ட ஓனர்களையெல்லாம் அழைத்து. மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று நமது அரசு முயற்சி செய்தால் அதில் நல்ல ஒரு முடிவு ஏற்படும் என்று விரும்புகின்ற காரணத்தால் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதற்குஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத்து அதிபர்கள், தொழிலாளர் தலைவர்கள், அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் தெரிந்து ஆலோசித்துத்தான் இந்த குறைந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்கின்றோம். இதைவிட அதிகமான கூலியை தொழிலாளர்களும், அந்த நிறுவனங்களின் தொழிலதிபர்களும் சேர்ந்து ஒப்பந்தங்களைப் போடுவார்களானால், அது அமலுக்கு வரும். ஆகையால் அந்தத் தொழிலுக்கு இந்த குறைந்த பட்சக் கூலி கட்டுப்படுத்தாது. ஆகவே, தங்களுக்கு அதிகபட்சக் கூலி கிடைக்க வேண்டுமென்று கருதுபவர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92. திரு. வி. கே. சின்னசாமி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

92. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள்.

* 288. திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராம ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் அந்தக் கிராமங்களிலேயே தங்கி பணியாற்றாததால் பொதுமக்கள் அவதிக்குள்ளாவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் அங்கேயே தங்கி பணியாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1991 செப்டம்பர் 27

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராமங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களில் சிலர் அங்கு தங்கி பணியாற்றுவது இல்லை என அரசு அறியும். இவ்வாறு அங்கு தங்கி பணியாற்றாததற்கு காரணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடியிருப்புகள் இல்லாததுதான். எனவே, மருத்துவ அலுவலர்கள் தங்குவதற்கு குடியிருப்புவசதி இல்லாத கிராமங்களில் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது 120 இடங்களில் குடியிருப்பு கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த கிராமப்புறங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு மாதந்தோறும் கிராமப் புறபடியாக ரூபாய் 400-ம், குடியிருப்பு இல்லாத இடங்களில் ரூபாய் 500-ம் வழங்கப்படுகிறது.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதில் மக்களுக்கு-மிகமிகசாதாரண மக்கள் கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்கள் உடம்பு வலி, தலைவலி, காய்ச்சல் என்று வருகின்ற நேரத்தில் சாதாரண கூலி வேலை செய்பவர்கள்தான் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நம்முடைய கழகத்தின் காவல் தெய்வமாக இருக்கின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை தெய்வமாக நம்பி வாக்களிக்கின்ற அத்தனை மக்களுமே செல்லுகின்ற இடம், அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தான். ஆகவே, நான் பணிவான்பேடு தெரிவித்துக்கொள்வது, கிராமப்புறங்களிலே ஒரளவிற்கு வீட்டு வசதியும் இருக்கிறது. ரூ. 500 அவர்களுக்கு பணமும் தருகிறார்கள், வீட்டுவசதிக்காக. குவார்ட்டர்ஸ் இல்லாத இடங்களில். ஆகவே அவர்கள் அதைப் பயன்படுத்தி, அந்தந்த கிராமத்திலேயே தங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிவதோடு, இந்த டாக்டர்கள் தங்காத காரணத்தால் கிராமப்புறப் பகுதிகளிலே பிரசவம் என்பது எந்த நேரத்திலும் தாய்மார்களுக்கு, பெண் களுக்கு ஏற்படக் கூடிய ஒன்று. அப்படி பிரசவம் இரவு நேரங்களில்கூட சில பெண்களுக்கு ஏற்பட்டு மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். சில தாய்மார்கள் இறக்கின்ற நிலைமைகள்கூட ஏற்படுகின்ற நிலைமை உருவாகின்றது. ஆகவே இதை கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அனுமதி பெற்று, உடனடி நடவடிக்கை எடுத்து, அதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் செய்து, மருத்துவர்கள் தங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக இப்பேற்பட்ட குறைபாடு இந்தத் துறையிலே இருந்து கொண்டு வந்திருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு துறையாக ஆய்வு செய்த போது, இந்தத் துறையை ஆய்வு செய்த நேரத்திலே, கிராமப்புறங் களிலும் அந்த மருத்துவர்கள் தங்கி பணியாற்ற வேண்டும். அதற்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அவர்கள் அறிவுறுத்தினார்கள். அப்படி அறிவுறுத்தப்பட்டநேரத் திலே அவர்களை அதிகாரம் செய்து மட்டும் அங்கே பணியாற்றச் சொல்வது நியாயமில்லை. அவர்களுக்கு என்ன குறைபாடுகள் இருக்கிறது என்பதையும் தெரிந்துகொண்டு அதைத் தீர்ப்பதற் கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற கருத்தையும் இங்கே தெரிவித்தார்கள். அதற்கு ஏற்பதான் இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே அவர்களுக்கு கிராமப்புறபடியாக 400 ரூபாயும், வீடு இல்லாத இடத்திலே 500 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. அப்படி அங்கே அதையும் மீறி அவர்கள் பணியாற்றவில்லை என்று சொன்னால் நடவடிக்கை மூலமாக அவர்களை அங்கே பணியாற்றுவதற்கு இந்த அரசு நிச்சயம் கடுமையான நடவடிக்கையை மேற் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

திரு. வி. கே. சின்னசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு கிராமத்திலே இருக்கிற அத்தனை மக்களையும் ஒட்டு மொத்தமாக ஆய்வு செய்து, இலவச மருத்துவ பரிசோதனை செய்து, யார் யார் நோய்வாய்பட்டிருக்கிறார்கள் என்பதையும் ஆய்வு செய்து அவர்களுக்கு தகுந்தாற்போல் இலவசமாக சிகிச்சை அளிப்பதற்கு ஒரு பெரிய திட்டத்தை இந்திய துணைக் கண்டத்திலே எந்த ஒரு முதலமைச்சரும் எண்ணிப் பார்க்காத, நினைத்துக்கூட பார்க்காத ஒரு திட்டத்தை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமப்புறங் களிலே இருப்பவர்களுக்கு மருத்துவ பரிசோதனைக்கு செல்ல வேண்டுமென்றால் ஆரம்ப சுகாதார நிலையம்தான் அவர்களுக்கு பயன்படும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சரோடு கலந்து பேசி, எத்தனையோ நிதி ஆதாரங்களையும் பல சலுகைகளையும் கொடுத்து இருப்பதைப்போல, இந்த கிராம ஆரம்ப சுகாதார நிலையங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று பார்த்து உடனடி யாக தங்குவதற்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நீங்கள் பாட்டுக்கு பேசிக் கொண்டே இருந்தால் எப்படி, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி: அந்த இடத்தில் கட்டிடங்களை கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இந்த ஆண்டு 120 இடங்களிலே குடியிருப்பு வசதிகள் கட்டித் தருவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். நமக்கு இப்போது இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் 1,429. புதிதாக இந்த ஆண்டு 76 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். எனவே மொத்தமாக 1505 இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இந்த ஆண்டிலே முடிக்கப்பட இருக்கிறது. அதிலே குடியிருப்பு இருக்கிற இடம் 303 இடங்கள்தாம். பிறகு இப்போது 120 அனுமதித்திருக்கிறார்கள். எனவே மீதி இருப்பவைகளுக்கு படிப்படியாக கட்டிடங்களை கட்டி அவர்களுக்கு குடியிருப்பு வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகப் பெரிய அளவிலே ஒரு மருத்துவ முகாம் நடத்துவதற்கு கூட அது வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். மருத்துவர்கள் அங்கே போய் பணியாற்றுகிறார்களா என்று தொடர்ந்து பார்ப்பதற்குக்கூட அது வசதியாக இருக்கும். காரணம், யார் யார் எங்கெங்கே போய் மருத்துவமனைகளிலே தங்க வேண்டும் என்று குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் அங்கே மருத்துவ வசதிக்காக போகும்போது மருத்துவர்கள் கண்டிப்பாக அங்கே இருந்தாக வேண்டும். எனவே, எதிர்காலத்தில் இந்த நிலைமைகள் சரி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சிங்காரம்

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் கிராமங்களில் தங்க முடியாததற்கு காரணம் குடியிருப்பு வசதிகள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குடியிருப்பு வசதிகள் இருந்தாலும் கூட கிராமப்புற படியாக 400 ரூபாயும், வீட்டுக்கு அலவன்ஸ்ஸாக 500 ரூபாயும் மொத்தம் 900 ரூபாய் பெறுகிறார்கள். இவ்வளவு வசதிகள் செய்து கொடுத்தும் கூட கிராமப் புறங்களிலே தங்கி பணியாற்ற விரும்பவில்லை. நகர்ப்புறங்களிலேயே பணியாற்ற விரும்புகின்றனர், எனவே, கட்டாயமாக டாக்டர்கள் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்காலம் கிராமங்களில் பணியாற்ற வேண்டும் என்ற ஒரு ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு இப்போது கொடுக்கப்படுவது, கிராமங்களிலே பணியாற்றுபவர்களுக்கு வீடு இருந்தாலும் 400 ரூபாய் கொடுக்கப்படுகிறது. வீடு இல்லாத இடங்களில் 500 ரூபாய். மொத்தம் 900 இல்லை. 400 அல்லது 500 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு அங்கே வீட்டு வசதி இருந்தும் தங்கி பணியாற்றவில்லை என்று சொன்னால் கண்டிப்பாக நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





ஏற்கெனவே குறிப்பிட்ட காலம் அவர்கள் கிராமத்திலே பணியாற்ற வேண்டும் என்ற விதியை நாம் வைத்திருக்கிறோம். குறிப்பாக எம்.பி., பி.எஸ். படித்தவர்கள் குறைந்தபட்சம் 3 ஆண்டுக்காலம் பணியாற்ற வேண்டும் என்று இருக்கிறது. உயர் கல்வி படித்தவர்கள் என்றால் ஓராண்டுக்காலம் பணியாற்ற வேண்டும் என்ற விதி இருக்கிறது. இப்படி கிராமப்புறங்களிலே பணியாற்றுகிறவர்களுக்கு உயர் கல்விக்கு வரும்போது 1 மார்க் ஒரு ஆண்டுக்கு என்று கொடுக்கப்படுகிறது. அப்படியும் சில இடங்களில் சென்று பணியாற்ற மருத்துவர்கள் தயாராக இல்லை. எனவே அவையெல்லாம் ஆய்வு செய்து கடுமையான நடவடிக்கை மூலமாகவோ அல்லது அங்கேயிருக்கிற குறைபாடுகளை நீக்குவதன் மூலமாகவோ அவர்கள் அங்கே பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளும்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரைமரி ஹெல்த் சென்டரிலே பணியாற்றுகின்ற டாக்டர் களுக்கு வீட்டுப் படிக்கான அலவன்ஸ் எல்லாம் கொடுத்தும் கூட அங்கே இருக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அந்தந்த தாலுக்காவிலேயே படித்துக் கொண்டிருக்கின்ற அந்தத் தாலுக்காவை நேட்டிவ் ப்ளேஸாக கொண்ட அந்தந்த டாக்டர்களை போடுவீர்களே யானால், அவர்களுக்கு நிச்சயமாக அங்கு பணிபுரியக் கூடிய வாய்ப்பு ஏற்படும். வில்லிங்னஸ் கேட்டு, இந்த இந்த கிராமத்திலே இருக்கின்ற பிரைமரி ஹெல்த் சென்ட்டரிலே பணியாற்ற சம்மதமா என்று கேட்டு அப்படி கூட ஒரு ஆய்வு நடத்தி, அப்படிப்பட்டவர்களுக்கு அங்கே வேலை கொடுக்கலாம் அல்லது அவர்கள் தங்கவில்லை என்று சொன்னால் அதிலே பிரயோசனம் இல்லை. அந்த டாக்டர் பணி அங்கே இருப்பதிலே ஒரு பிரயோசனமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி; தலைவர் அவர்களே, கவர்ன் மெண்ட்டுக்கு செலவு தானே ஒழிய மக்களுக்குப் பயன் இல்லை. ஆகவே எப்படியும் அவர்கள் அங்கே தங்கி பணியாற்றுகின்ற ஒரு நிலையை உருவாக்கித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மானிய கோரிக்கையிலே ஒரு அறிவிப்பு செய்தது உங்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். ஒவ்வொரு துறையிலேயும் அல்லது ஒவ்வொரு மருத்துவ

மனையிலேயும் இருக்கின்றவர்களுக்கு என்ன குறைபாடு இருக்கிறது, அவர்களுக்கு என்ன விருப்பம் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்காக அவர்களிடத்திலே 10 நாள் கால அவகாசம் கொடுத்து மனு வாங்கப்படும். அதை நாங்கள் நேரடியாக தீர்த்து வைப்போம் என்று சொன்னோம். அதிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள், பெரும்பகுதியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும். இருந்தாலும்கூட அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்களையே நியமிக்க வேண்டும் என்பதிலே எங்களுக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அதற்குப் பின்னாலே சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் வந்து அவர் அந்த சொந்த ஊரையே சார்ந்தவர், அங்கே தவறாக நடந்து கொள்கிறார், வேறு தொகுதிக்குப் போய் விடுகிறார், அங்கே இருப்பதில்லை என்ற பிரச்சினைகள் எல்லாம் தொடர்ந்து வரத்தான் செய்கிறது. எனவே இவற்றை எல்லாம் தனித்தனியாகப் பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவோ அல்லது நான் ஏற்கனவே சொன்னபடி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதன் மூலமாகவோ, அங்கே மருத்துவர்கள் தங்குவதற்கான ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார நிலையங்களில் பணி புரிகின்ற டாக்டர்கள் அருகாமையில் உள்ள சிறு நகரங்களில் கூட குடியிருக்க மறுக்கிறார்கள். மாவட்ட தலைநகரங்களில் இருந்து தான் வந்து சென்று கொண்டிருக்கின்ற நிலை பல இடங்களிலே ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்த்து அருகாமையில் உள்ள சிறு நகரங்களிலாவது அவர்கள் குடியிருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகாமையில் இருக்கின்ற நகரம் என்பது அல்ல. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் எங்கே இருக்கிறதோ அங்கே குடியிருப்பு நாம் கொடுத்திருப்போமானால் கண்டிப்பாக அவர்கள் அங்கே இருக்க வேண்டும். அப்படி ஒரு வேளை அங்கே இருக்க முடியாத அளவுக்கு, வீடு நாம் கொடுக்கவில்லை என்று சொன்னால் அருகாமையில் எங்கே வீடு கிடைக்கிறதோ, மிக அருகாமையில் எங்கே கிடைக்கிறதோ அங்கே அவர்கள் இருந்தாக வேண்டும். எனவே அந்த நிலையினைத்தான் ஏற்கனவே சொன்னேன். அப்படி இல்லாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நிச்சயமாக நாங்கள் அங்கே அவர்கள் தங்கி பணியாற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்வோம் என்பதையும், இனிமேல் புதியதாக யாரை எல்லாம் நியமிக்கிறோமோ, அவர்கள் கண்டிப்பாக கிராமப்புறத்திலே பணியாற்றிவிட்டுத்தான் வர வேண்டும் என்பதன் மூலமாகவும், சித்தா டாக்டர்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவும் இந்தப் பிரச்சினைகளை நாம் தீர்த்துவிட முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 93. திரு. வ. மு. சுப்பிரமணியம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

93—

காணூர் கால்வாயின் குறுக்கே புதிய பாலம்.

*1456 திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருப்புவனம் ஒன்றியத்தில் வைகையில் இருந்து பிரிந்து செல்லும் காணூர் கால்வாயில் கே. பெத்தானேந்தலையும், கணக்கன்குடியையும் இணைக்க புதிய பாலம் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, 2,000 ஜனத்தொகை கொண்ட இந்த பெத்தானேந்தல் கிராமம் இரண்டு ஆறுகளுக்கிடையே அமைந்துள்ளது. மழைக்காலங்களில் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து போகின்றபோது பாலம் இல்லாத காரணத்தால் பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. கூலி விவசாயிகள் வேலைக்குச் செல்ல முடியவில்லை. ஆகையினால் இந்த அவல நிலையைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற பாலம் பசும்பொன் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காணூர் கணக்கன்குடியை இணைக்கின்ற பாலமாகும். அந்தப் பாலத்தை போடுவதற்கான மதிப்பீடு ஏறத்தாழ 12 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பார்ட் டு ஸ்கீமிலோ மற்ற திட்டங்களிலோ இல்லை என்பதனாலே அதை எடுத்துக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஆகவே வரும் ஆண்டுகளில் நிதி ஆதாரங்களைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மிகுந்த கவனத்தோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு புயல் வெள்ளம் வந்தபோது மழை பெருக்கெடுத்து அந்த ஊர் வெள்ளத்தால் சூழப்பட்டு 10 நாள் பட்டினி கிடந்தார்கள், தொடர்பு இல்லாததால். புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவின் பேரிலே, ஹெலிகாப்டர் மூலமாக உணவுப் பொட்டலம் வழங்கப்பட்டது. அதன் பிறகு புரட்சித் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டரில் வந்து ஊர் ஊராகப் பார்த்தார்கள். அந்த அவல நிலை எல்லாம் எதிர்காலத்தில் ஏற்படாத அளவுக்கு அவர்கள் அதைத் தீர்த்து வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கின்ற பிரச்சினைகளை எடுத்துக் சொன்னார்கள். நான் ஏற்கனவே தெரிவித்தைப் போல, இந்த ஆண்டு நிதி ஆதாரத்திலே இதற்கு என்று ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித் தேன். ஆகவே, உரிய நடவடிக்கைகள் எடுத்து உடனடியாக அந்தப் பகுதிக்கு அதிகாரிகளை அனுப்பி, நிலைமைகளை ஆராய்ந்து நான் ஏற்கனவே சொன்னது போல் வருகின்ற நிதி ஆண்டிலே, அதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. காஞ்சி பன்னீர்செல்வம் மற்றும் திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

94—

பர்கூர் தொகுதியில் மாதிரிக் குடியிருப்பு அமைத்தல்

*3967 திரு. காஞ்சி பன்னீர் செல்வம்:

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பர்கூர் தொகுதியில் மாதிரிக் குடியிருப்பு அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபோன்று மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்படுமா?





மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அமைக்கப்பட உள்ளது. 21-8-91 அன்று தர்மபுரி மாவட்டம் பர்கூர் தொகுதியில், சாதி, சமய வேறுபாடற்ற கிராமிய மாதிரி குடியிருப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களால்தான் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இதுபோன்ற மாதிரி குடியிருபபுத் திட்டத்திற்கான கருத்தினை வழங்கியவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள்தான் (மேசையை தட்டும் ஒலி) எனவே இந்த மாதிரி குடியிருப்பு திட்டத்திற்கு ''புரட்சித்தலைவி ஜெயலலிதா நகர்'' என்ற பெயரிடப்பட்டுள்ளது. (மேசையை தட்டும் ஒலி).

(ஆ) பர்கூரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டபின், அரசின் நிதி நிலைக்கு ஏற்ப, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களினும் இத்திட்டம் விரிவு படுத்தப்படும்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் என்னுடைய தொகுதி உத்திரமேரூர் தொகுதி இருக்கிறது. அந்தத் தொகுதியிலே அடுத்த ஆண்டிலாவது இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு என்னுடைய தொகுதிக்கு அவருடைய திருப் பெயரால் இப்படிப்பட்ட மாதிரி குடியிருப்பு அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா ஊர்களிலும் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களோடு கலந்து ஆலோசித்து இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைக் கொண்டு அமைக்கப்படவுள்ள இந்த நகரம் அமைக்கப்பட்ட அந்த நோக்கத்தையும், இந்தகுடியிருப்புகளுடைய சிறப்பு அம்சங்களையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் சமுதாயத்தில் குடியிருப்பு ஒரு முக்கிய தேவையாகும். சமதர்ம சமுதாயம் 21 ஆம்

நூற்றாண்டை நோக்கி விரைந்து முன்னேறும் சூழ்நிலையில் எல்லா மதத்தவரும், இனத்தவரும் இணைந்து வாழ வழி வகுப்பது இந்தத் திட்டம்.

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு சாதி, மத இன வேறுபாடு இன்றி வீட்டு வசதி அளிப்பதே இந்த புதிய அரசின் நோக்கமாகும். ஒரே குடியிருப்பு வளாகத்திற்குள் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளடக்கிய மாதிரிக் குடியிருப்பு வளாகம் அமைப்பதே இதன் குறிக்கோளாகும். புதுமைச் சமுதாய மறு மலர்ச்சிக்கு இத்திட்டம் வழிவகுக்கும்.

இந்த நகரில் இந்து இஸ்லாமியர் மற்றும் கிருத்துவர்களுக்காக தனித்தனியாக 3 வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

வீடுகள் 300; சமுதாயக் கூடம்-1; விளையாட்டு மைதானம் 1; தொடக்கப்பள்ளி-1; அங்காடி-1; பூங்கா-1; தாய் சேய் நல நிலையம்-1; நூலகம்-1 வழிபாட்டு இடங்கள்-3; சாலைகள்-3 கிலோ மீட்டர்; மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி1; தெரு விளக்குகள்-150; மொத்த மதிப்பீடு இந்த திட்டத்திற்காக 3 கோடி ரூபாய்.

இந்த புரட்சிமிகு குடியிருப்புத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளோட்ட முறையில் தர்மபுரி மாவட்டத்தில் செயல் படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் முழுமை அடைந்த பிறகு, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப மாநிலத்தின் மற்ற பகுதிகளில் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஜாதி, மதம், இனம் ஆகிய எல்லா வரையறைகளையும் கடந்து மக்கள் தொண்டே என் உயிர் மூச்சு என சூளுரைத்து பாடுபட்டு வரும் நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் ஒவ்வொரு ஊரிலும் இதய தெய்வத்தின் பெயரால் கோவில்கள் நிர்மாணிப்பது போல இத்தகைய குடியிருப்புகளை ஏற்படுத்த முனைகிறபோது, புவன கிரி தொகுதியிலும் ஒரு மாதிரி குடியிருப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும், எல்லா இடங் களிலும் நிதி ஆதாரத்தை முன்னிட்டு இது விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம் மாள். கேள்வியை மட்டும் கேளுங்கள்,

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே இது பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். இந்த 300 வீடுகள், 400 வீடுகள் என்று கட்டுவதிலே மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு வீட்டுக்கு எவ்வளவு எஸ்ட்டி மேட்? இதிலே அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்? அது எத்தனை சதவீதம் இணைக்கபபட்டிருக்கிறார்கள் என்பதை சொல்ல முடியுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வீட்டிற்கும் எத்தனை ரூபாய் என்பதைப்பற்றி அரசின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக பல்வேறு வீடு கட்டுகின்ற திட்டங்களில் ஆதி திராவிட சமுதாயத்தினர்தான், ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒதுக்கிவைக்கிற நிலைமையிலே இருந்துநீக்குவதற்கு தமிழகத்தைப் பொறுத்த அளவிலே ஆட்சி செய்திருக்கிற பல்வேறு முதலமைச் சர்கள் எல்லாம் முயன்று பார்த்து, தோல்வி கண்ட நிலையிலே இந்தத் திட்டம் ஆதிதிராவிட சமுதாயத்தினரை, ஒற்றுமையாக எல்லா மத, இன மக்களோடும் சேர்ந்து வாழ வேண்டுமென்ற உயர்ந்த லட்சியத்தை கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணத்திற்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆதி திரா விட சமுதாயத்தினர் எல்லாம் ஒரே சமுதாயமாக வளர வேண்டு மென்ற அடிப்படையிலேதான் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டி ருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95. திரு. க. அர்ச்சுனன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

95—

சேலம் மாவட்ட நெடுங்குளம் இராசிபுரம் குடிநீர்த் திட்டம்

*3971 திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்ட நெடுங்குளம்-இராசிபுரம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற முனைப்பு காட்டப்படாததற்குக் காரணம் என்ன?

(ஆ) இதற்காக இந்த நிதியாண்டில் ஒதுக்கியுள்ள நிதி எவ்வளவு?

[1991 செப்டம்பர் 27

(இ) இன்னும் ஒப்பந்தப்புள்ளிகூட இறுதியாக்கப்பட
வில்லை என்பதை அரசு அறியுமா?

(ஈ) திருத்திய மதிப்பீடு போடவேண்டிய நிலை ஏற்பட்
டுள்ளதா?

(உ) எந்த ஆண்டுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு
குடிநீர் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

(அ) இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஆணை
எண் 443, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை,
நாள் 26-4-1988-ல் தொழில் நுட்பக் குழுவால் பரிந்துரை
செய்யப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ. 1986.74 இலட்சங்
களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இக்கூட்டுக் குடிநீர்த்
திட்டத்தில் பயன்பெறும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின்
விகிதாச்சாரத் தொகை அரசு 18-7-1991 கடிதத்தில் தெரிவித்
துள்ளமையால் இத்திட்டத்திற்கென்று ஆயுள் காப்பீட்டுக் கழகத்
திடமிருந்து திட்ட செயலாக்கத்திற்குக் கடனுதவி பெற
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது,

(ஆ) இதற்காக இந்த நிதியாண்டில் ரூ. 280.00 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) பிரதானக் குழாய் பதித்தலுக்கான மதிப்பீடு ஒப்புதல்
வழங்கப்பட்டு செயலாக்கத்திற்கான ஒப்பந்தப்புள்ளி
கோரப்பட்டுள்ளன.

(ஈ) ஆம். தொழில் நுட்பக் குழுவால் பரிந்துரை செய்யப்
பட்ட குறிப்புரைகளுக்கேற்ப மதிப்பீடு தயாரிக்கப்பட
வேண்டியிருந்ததாலும் மற்றும் குழாய் இதர உபகரணங்
களின் விலை ஏற்றத்தினாலும் திருத்திய மதிப்பீடு
தயாரிக்க அவசியம் ஏற்பட்டது.

(உ) இத்திட்டத்தின் செயலாக்கப் பணிகளை 1993-94-ம்
ஆண்டில் முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்
பட்டு வருகிறது.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் வெள்ள
நிவாரணம் அளிக்கும் அளவிற்கு மழை பெய்திருந்தாலும்கூட
சேலம் மாவட்டத்தில் சராசரியாக பெய்யும் மழை அளவில் 70
சதவீதத்திற்கு குறைந்தே கடந்த 4, 5 ஆண்டுகளாக மழை
பெய்து வருவதால் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது.
இது எடப்பாடி, வீரபாண்டி, ராசிபுரம் போன்ற மூன்று
தொகுதிகளில் இந்தக் குடிநீர் வழங்கக்கூடிய திட்டத்தை



1991 செப்டம்பர் 27]

நிறைவேற்றக்கூடிய வகையில் தாய்க்குலத்திற்காக பாடுபடும்
தங்கத் தலைவியினுடைய ஆட்சியில் தாய்மார்களுடைய
கஷ்டத்தைப் போக்கக்கூடிய வகையில் அடுத்த நிதி ஆண்டிற்குள்
அரசு நிதியுதவி அளித்து, விரைவாக இந்தத் திட்டத்தை
முடித்து குடிநீர் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக்குடிநீர்த்
திட்டத்தில் பயன்பெறும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி
களின் விகிதாச்சார தொகை அரசு 18-7-91 கடிதத்தில்
தெரிவித்துள்ளமையால் இந்தத் திட்டத்திற்கென்று ஆயுள்
காப்பீட்டுக் கழகத்திடமிருந்து திட்ட செயலாக்கத்திற்கு
கடனுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
அந்த அடிப்படையிலே இந்தத் திட்டம், இந்தச் செயலாக்கப்
பணிகள் 1993-94 ஆம் ஆண்டில் முடிப்பதற்கான அனைத்து
நடவடிக்கைகளையும் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மேற்
கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். மேலும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை கிட்டத்
தட்ட 19,86,74,000 ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. அந்த
அடிப்படையிலே, சேலம் மாவட்டத்தில் எடப்பாடி, ராசிபுரம்
நகராட்சிகள் மற்றும் இளம்பிள்ளை, இடங்கண்ணசாலை,
மல்லசமுத்திரம், ஆட்டையாம்பட்டி, வெண்ணந்தூர், பிள்ளா
நல்லூர், அத்தனூர், மல்லூர், கொங்கனாபுரம் போன்ற
பேரூராட்சிகளும் மற்றும் 155 வழியோர கிராமங்களும் பயன்
பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள காரணத்தினால்,
இந்தத் திட்டம் வருகின்ற 1993-94 ஆம் ஆண்டில் முடிப்பதற்
கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மெயின் பைப் லைன் வருகின்ற இரண்டு
பக்கமும் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற குடியிருப்புப்
பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கக்கூடிய திட்டம் இருக்கிறதா என
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் குழுவால்
பரிந்துரைக்கப்பட்ட சுமார் 155 வழியோரக் கிராமங்கள் that
is wayside habitation, 2 கிலோமீட்டர் அளவிற்கு இந்த 155
வழியோரக் கிராமங்களுக்குப் பயன்பெறும் வண்ணம் இந்தத்
திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) வெ. சரோஜா.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்ட நெடுங்குளம்–இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மல்லசமுத்திரம் வரை நீட்டிக்கப் பட்டுள்ள இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சப்பையாபுரம் வரை நீட்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். காரணம், ஐந்து ஆழ் துளைக் கிணறுகள் போடப்பட்ட பிறகும் ஐந்து கிணறுகளும் வறண்டு கிடக்கின்றன. குடிநீருக்கு மிகவும் அழன்று உழன்று கொண்டிருக்கும் அந்தக் குடிமக்களுக்கு இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உதவுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை முறையான ஆய்வு செய்யப்படாமல் எந்த ஒரு திட்டமும் எடுத்துக்கொள்ள முடியாது; எடுத்துக் கொள்ளப் படவும் மாட்டாது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் சப்பையபுரம் வரையில் நீட்டிக்கப்படுமா என்ற கேள்விக்கு துணைக் கேள்விபோட்டால், அதற்குச் சம்பந்தப்பட்ட வாரியத்திடம் பதில் பெறப்பட்டு, பதில் அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போடுமாறு பணிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96. டாக்டர் வெ. புருஷோத்தமன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

96—

கிராமிய மகளிர் நூற்பு மையம்.

*1053 டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக பென்னாகரம் தொகுதியில் மகளிர் பயனடையும் கிராமிய நூற்பு மையம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?





மாண்புமிகு திரு. முகமது ஆசிப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமியப் பகுதிகளில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அவர்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்தவும், அவர்களுக்கு வாங்கும் சக்தியைக் கொடுக்கக்கூடிய உண்டாக்கக் கூடிய நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பாடுபடுகின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். ஏற்கனவே, என்னுடைய பகுதியில் இல்லை என்ற பதிலும் கிடைத்திருக்கிறது. இது சம்பந்தமாக, இந்தப் பகுதியிலே கணவனை இழந்த பெண்களும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் தொகுதியிலே அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அவசியம் இந்தத் தொகுதியில் இந்தக் கிராமிய நூற்பு மையம் தேவைப்படுகிறது. இந்த நிதியாண்டில் இல்லா விட்டாலும், அடுத்த நிதியாண்டிலாவது அவசியம் 30 கிராமப் பகுதிகளுக்கு ஒவ்வொரு நூற்பு மையத்திலேயும் சுமார் 20 பெண்கள் வேலைவாய்ப்பு பெறக் கூடிய வகையில் அமைச்சரவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**Hon, Thiru Mohammed Asif:** Honourable Speaker Sir, Pennagaram constituency falls in Dharmapuri District. In Dharmapuri District there are 23 Rural Textile centres functioning and in the rural textile centres about 25 to 30 spinners are working. In this district, about 500 spinners are engaged in the 23 Rural Textile Centres and all of them are women.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97 திரு. வே. பெரியசாமி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

97—

தாழ்த்தப்பட்ட இன மக்களுக்குப் பட்டா.

*593 திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், சங்கராபாளையத்தில் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு என தனிநபர் நிலத்தினை அரசு விலை கொடுத்து வாங்கி ஏழு பேர்களுக்கு மட்டும் பட்டா வழங்கிவிட்டு மீதம் உள்ளவர்களுக்கு ஆதிதிராவிடர் நல அலுவலர் பட்டா வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

[1991 செப்டம்பர் 27

(ஆ) அரசு உடன் நடவடிக்கை எடுத்துபட்டா வழங்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்; மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம், பவானி
வட்டம், சங்கரா பாளையம் கிராம மஜரா இந்திரா நகரில்
வசிக்கும் 24 ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க
மேற்படி கிராமம் க.ச. எண். 209 5பி—ல் 0.60.5 ஹெக்டேர்
நிலம் கையகப்படுத்தப்பட்டது. பயனடைவோர் பட்டியலில்
இருந்த 24 பேர்களில் தகுதிபடைந்த 8 பேர்களுக்கு 14—5—90ல்
பட்டா வழங்கப்பட்டது. மீதி காலியான இடத்தில் இருந்த
ஆக்கிரமிப்புகளை அகற்றி எஞ்சிய 16 மனைகளுக்கும் தகுதி
படைத்தோரைத் தேர்ந்தெடுத்து பட்டாக்கள் வழங்க மாவட்ட
ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி, ஒரு
நிமிடம்தான் இருக்கிறது. நேரடியாகக் கேள்வியை மட்டும்
கேளுங்கள்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பெரியார் மாவட்டம், பவானி வட்டம், சங்கரா
பாளையம் ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகரில், இரண்டாண்டு
களுக்கு முன்னாலேயே நிலத்தைக் கையகப்படுத்தி......
(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் தான்
கேட்கச் சொன்னேன்—நேரம் 10-30 ஆகிவிட்டது.

திரு. வே. பெரியசாமி: எனக்குக் கொஞ்சநேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இல்லை
உட்காருங்கள். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றன.

2. தகவல் கோரல்—

(அ.) இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற
24 மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில இன்றியமையாத
பிரச்சினைகள் பற்றி அவசர முக்கியத்துவம் வாய்ந்தவை என்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள்
என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்
பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]



1991 செப்டம்பர் 27]

முதலமைச்சர் அவர்களும், அதுபற்றி தங்களுடைய
விளக்கத்தை அவைக்கு அளிக்க வேண்டும் என கருத்துத்
தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அப்பிரச்சினைகளை எழுப்ப
அனுமதியளிக்கிறேன். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கழிந்த 19—ஆம் தேதி, இராமேஸ்வரம் பகுதியிலிருந்து
மீன் பிடிக்கச் சென்ற 24 மீனவர்களைக் காணவில்லை என்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு
வந்த நேரத்தில், அவர்களைத் தேடுவதற்கான முயற்சிகள்
செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் கண்டுபிடிக்கப்
பட்டார்களா? பத்திரமாக அவர்களுடைய இருப்பிடம் வந்து
சேர்ந்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பிரச்சினையைப் பற்றி,
திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் அவர்களும் ஏற்கெனவே
அன்றே பிரச்சினை எழுப்பியிருந்தார்கள். அவரும் இப்
பிரச்சினையை எழுப்பியதாகக் கருதப்படுகிறது. மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, காணாமல் போன 24 இராமேஸ்வரம்
மீனவர்களையும், 4 படகுகளையும் கண்டுபிடிக்கும் பணியில்,
பெருமுயற்சி மேற்கொண்டு, இராமேஸ்வரம் கடற்கரைப் பிரி
விலிருந்து தனி படகுக் குழுக்கள் அனுப்பப்பட்டு, பன்னாட்டுக்
கடல் எல்லைக்கோடு வரை, அவர்களைத் தேடும் ரோந்துப்
பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், 21-9-91லிருந்து இன்று
வரை, கடற்படை, விமான நிலைய அதிகாரிகள் 'ஹெலிகாப்டர்
மற்றும் தீவு விமானங்கள் மூலம் அவர்களைத் தீவிரமாகத்
தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வளவு முயற்சிக்குப்
பிறகும், மீனவர்களைப் பற்றிய எந்தவிதப் பயனுள்ள தகவ
லும் கிடைக்கவில்லை. ஆனால், 23-9-91 அன்று, ஆர். 366
என்ற எண்ணுள்ள படகு, கோடியக்கரை கடல் பகுதியில் காணப்
பட்டதாக ஒரு தகவல் கிடைத்தது. ஆனால், படகை சோதனை
யிட்டபோது, அதில் காணாமல் போன மீனவர்களான ராமு,
மூர்த்தி, சேஷையா மற்றும் அந்தோனி ஆகியோருடைய அடை
யாள அட்டைகள் மட்டும் கிடைத்தன. மற்ற விவரங்கள் ஏதும்
கிட்டவில்லை. எனவே, அனைவரையும் தேடுகிற முயற்சி
தொடர்ந்து நடைபெற்று வருகிறது, மேலும் அரசு இப்பிரச்
சினையை மத்திய அரசின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளது.
அதன்மூலம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதர், இலங்கை
அரசுடன் தொடர்பு கொண்டு, இலங்கைக் கடற்படையினரிடம்
நமது மீனவர்களும், படகுகளும் அவர்களால் கைப்பற்றப்பட்

டுள்ளனவா என்பது பற்றி அறிய முயற்சிகள் மேற்கொண்டு
வருகிறார். இதுகுறித்து, இலங்கை அரசிடமிருந்து பதில்
எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் வடக்கு மங்கலம் ஊராட்சி
ஒன்றியப் பள்ளியாசிரியர் திரு. காசிலிங்கம் தமிழீழ
விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவதும் அது குறித்து
எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி,

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மாதம் 20-ஆம் தேதி, புதுக்கோட்டை
வெற்றிடம், கொத்தமங்கலம் என்ற ஊரில் ஆசிரியராகப் பணி
யாற்றிக் கொண்டிருக்கக் கூடிய திரு. க. காசிலிங்கம் என்பவரை
அவர் ஏதோ மக்கள் முன்னிலையிலே தொடர்பு வைத்திருந்த
தாகவும், அதற்குப் பின்னாலே அவர் இலங்கையினுடைய
போராளிகளோடு தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின்
பேரிலேயும் கைது செய்யப்பட்டு, இன்றைய தினத்திலே
அவர்கள் ஜாமீனிலே வெளிவந்திருக்கிறார்கள். அவரைப்
பொறுத்தமட்டில், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்
கூட்டு இயக்கத்தில், 1987-ஆம் ஆண்டிலிருந்து அதன் மாநிலப்
பொருளாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். பொதுவாக
கலை இலக்கியப் பெருமன்றத்தினுடைய மெம்பராகவும்
தி.ப. ஜீவானந்தம் அவர்கள் உருவாக்கிய 'தாமரை' பத்திரிகை
யில், தொடர்ந்து பல்வேறு கட்டுரைகள், கவிதைகள் போன்ற
வற்றை எழுதியும் இதுபோன்ற முற்போக்கு இதழ்களில் சமூக
சேவைகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடியவர். அவரைப்
போன்றவர்களையெல்லாம், யாருடைய தூண்டுதலின் பேரிலோ
அந்த ஆசிரியரை இன்றைய தினத்திலே கைது செய்விக்கப்பட்டு,
அவரைச் சார்ந்திருக்கிற அந்த ஆசிரியர்கள் கூட்டு இயக்கம்
தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மற்றவர்களி
டத்திலேயேயும் வற்புறுத்தியும்கூட, விடாமல் வைத்திருக்
கிறார்கள். அப்படிப்பட்ட அவருடைய தீவிர இயக்கங்களுக்
காக அவருக்கும் இலங்கையிலே இருக்கக்கூடிய போராளிகளு
க்கும் எந்தவித தொடர்பும் இருக்க சாத்தியமே இல்லை.
இப்படிப்பட்ட ஆசிரியர் இயக்கங்கள் போன்ற இயக்கங்களில்
இருக்கக் கூடியவர்களைக் காவல் துறையினர் கைது செய்வதை
மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவ
தோடு, அவர் பேரில் போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப்
பெற வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று நம்முடைய ஆசிரியப்
பெருமக்களை கைது செய்வது. அச்சுறுத்துவது போன்ற
அணிற்குக் காவல்துறை ஈடுபடுவதை நீங்கள், உடனடியாகத்
தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.





முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் வடக்குமங்கலம்
ஊராட்சி ஒன்றியப் பள்ளியாசிரியர் திரு. காசிலிங்கம், தமிழீழ
விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்ததற்காகவும் அவர்கள்
மீது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டனம்
செய்ததற்காகவும் 20-9-1991 அன்று கைது செய்யப்பட்டார்.
இவருடன் சேர்ந்து வன்முறைச் செயலில் ஈடுபடா வண்ணம்
தடுத்துநிறுத்தும் நோக்கத்துடன், மேலும் 11பேர்புதுக்கோட்டைக்
காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர், இவர்கள்
12 பேரும் தலைமைக் குற்றவியல் நீதிபதி முன் ஆஜர்படுத்த
பட்டு பதினைந்து நாட்கள் காவலில் வைக்கப்பட்டனர்.

ஆசிரியர் திரு. காசிலிங்கம் 24-9-1991 அன்று ஜாமீனில்
விடப்பட்டார். திரு. காசிலிங்கம் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணியின் பொருளாளர் ஆவார். இவர் கைது
செய்யப்பட்டதைக் கண்டித்தும், இவர் மீதான வழக்கைத்
திரும்பப் பெறக்கோரியும் 23-9 1991 அன்று தமிழ்நாடு
தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் உறுப்பினர்கள் 101
பேர் கொத்தமங்கலத்தில் ஊர்வலம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், ஆசிரியர்
களைக் கைது செய்வதும், அச்சுறுத்துவதும், ஆகிய நடவடிக்கை
கள் நிறுத்தப்பட வேண்டும் என்று இங்கே கருத்துத் தெரி
வித்தார்கள். மேலும் ஆசிரியர் திரு. காசிலிங்கம் அவர்கள்
மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளும் திரும்பப் பெறப்பட
வேண்டும் என்றும் இங்கே கேட்டுக் கொண்டார்.

ஆசிரியர்களைப் பொதுவாக அச்சுறுத்த வேண்டும் என்ற
எண்ணம் காவல் துறையினருக்குக் கிடையாது. இந்த அரசு
க்கும் கிடையாது. ஆனால், விடுதலைப் புலிகளுக்கு எதிராக
இலங்கைத் தீவிரவாதிகளுக்கு எதிராக இன்று அரசு மிகவும்
கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே,
விடுதலைப் புலிகளுக்கும். தேசவிரோத சக்திகளுக்கும் ஆதர
வாகச் செயல்படுபவர்கள் ஆசிரியர்களாக இருந்தாலும் சரி,
அல்லது வேறு எந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும்
சரி, அதற்காக அவர்களை விட்டுவிட முடியாது என்பதைத்
திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும்
ஒலி). நடைமுறையில் சாதாரணமாக எல்லா வழக்குகளும்
எப்படி நடத்தப் படுகின்றனவோ அதைப்போலத்தான் இந்த
வழக்கும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

[illegible] (இ) வேலூர் மத்திய சிறையிலிருந்து செங்கற்பட்டு நீதிமன்றத்திற்குக் கொணடு வரப்படும்போது இரு கைதிகள் (இலங்கைத் தமிழர்கள்) தப்பித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற அரசு, போலியான அரசு என்றும், ஆயுதப் புரட்சிகள் தாரீர் என்றும், நக்சலைட்டுகள் என்றும் கோவையில் ஆங்காங்கே துண்டுப் பிரசுரங்களை வைத்து நிதி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போல், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் பல இடங்களில் இன்று விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நக்சலைட்டுகளுக்கு ஆதரவாக, 'மனஒசை' என்ற பத்திரிகையும், 'கேடயம்' என்ற பத்திரிகையும்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது கைதிகள் தப்பித்துப் போனது பற்றி. அதைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சிறையிலிருந்து நேற்று இரண்டு கைதிகளை செங்கல்பட்டுக்கு கோர்ட்டுக்கு அழைத்து வந்தபொழுது, கோர்ட்டிலே ஆஜர்படுத்திவிட்டு, மீண்டும் வேலூருக்கு அழைத்து செல்லுகிறபோது, இரண்டு மர்ம ஆசாமிகள் மோட்டார் சைக்கிளில் காத்திருந்து, அந்த இருவரையும் அப்படியே கடத்திச் சென்றதாக இங்கே பத்திரிகையில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இப்படி இலங்கைக் கைதிகள் தப்பி ஓடியிருக்கிற நிலை அண்மையிலேயே தமிழகத்தினுடைய காவல்துறைக்கு ஒரு சவாலாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை உடனடியாக நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பிரச்சினைப் பற்றி திரு. [illegible] அவர்களும் என்னுடைய கவனததிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதைப் பொருள் தடுப்பு வழக்கு ஒன்றில் தொடர்புடைய இலங்கைத் தமிழர்களான குணரத்தினம் என்கிற ராஜா, ஜெகதீசன், செல்வராயன், உதயகுமார் என்கிற நான்கு குற்றவாளிகள் காவல் நீட்டிப்பிற்காக வேலூர் மத்திய சிறைச் சாலையிலிருந்து 17.9.91 அன்று செங்கற்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டனர். அப்போது குற்றவாளிகளில் ஒருவரான சத்தியகுமார் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபரின் உதவியுடன் தப்பித்து விட்டார். இது தொடர்பாக காவல் பணியில் கவனக் குறைவாக இருந்த ஆயுதப்





படைப் போலீசார் நான்கு பேர் 18.9.91 அன்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதேபோன்று போதைப் பொருள் தடுப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறைச் சாலையிலிருந்து காவலில் இருந்த இலங்கைத் தமிழர் நந்தகுமார் என்பவரும், அவருடன் வேறு வழக்கில் சம்பந்தப் பட்ட விசாரணைக் கைதி கந்தசாமி என்பவரும் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டக் காவல் துறையினால் காவல் நீட்டிப்புக் காக 25-9-91 அன்று வேலூர் மத்திய சிறைச் சாலையிலிருந்து சென்னை 8 ஆம் எண் சிட்டி செசன்ஸ் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

முற்பகல் 10-40

நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்து மாலை 4.15 மணியளவில் வெளியே வரும்போது நந்தகுமார் அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறித் தப்பிவிட்டார். இது தொடர்பாக எஸ்பிளனேட் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டு விசாரணையில் உள்ளது. சம்பந்தப்பட்ட காவலர்களும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இரு சம்பவங் களையும் ஒட்டி தப்பி ஓடிய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சி தமிழ்நாடு எங்கும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க காவல் துறை இயக்குநருக்கு உத்தரவுகளை வழங்கியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) வடலூர் சேஷசாமி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் மூடப்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் அவதியுறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி, திரு. கு. சிவசுப்பிரமணியன் ஆகியோர் தென்னாற்காடு மாவட்டம் வடலூரில் மூடப்பட்டிருக்கிற ஒரு தொழிற்சாலைத் தொழிலாளர்கள் படும் அவதி குறித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்கம் பெற அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது; திரு. வே. தம்புசாமி.

* திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் வடலூரில் உள்ள சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொழிற்சாலை கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலமாக மூடிக் கிடக்கிறது. அதிலே பணியாற்றுகிற ஏறத்தாழ 1,600 தொழிலாளர்கள் வெளியே தள்ளப்பட்டு அந்தக் குடும்பங்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த முதலாளி, தொழிலாளர் சட்டங்களை எல்லாம் மீறிக் கொண் டிருக்கிறார். மூடப்பட்ட தொழிற்சாலையைத் திறக்கக் கோரி அந்தத் தொழிலாளர்கள் சங்கச் செயலாளர் தலைமையில் கடந்த

22-9-91 முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தைத் துவக்கி இருக்கிறார்கள். ஆகவே அவர்களைப் பாதுகாக்கத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடலூர் சேஷசாயி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தில் சுமார் 1,330 தொழிலாளர்களும் 291 பணியாளர்களும் பணிபுரிகின்றனர். இந்த நிறுவனத்தில் நிதி நெருக்கடி காரணமாக சுமார் 500 முதல் 600 தொழிலாளர்களை லே ஆஃப் செய்ய அனுமதி கோரி நிறுவனம் தொழிலாளர் நல இணை ஆணையருக்கு விண்ணப்பம் செய்திருந்தது. தொழிலாளர் நல இணை ஆணையர் லே ஆஃப் செய்ய அனுமதி வழங்கினார். ஆனால் 3 மாதங்களுக்கு மட்டுமே லே ஃ-ஆப் செய்ய வேண்டும் என ஆணை பிறப்பித்தார்.

லே ஆஃப் காலத்தை ஓராண்டுக்கு நீட்டிக்க வேண்டுமெனவும் தொழிலாளர் நல இணை ஆணையரின் ஆணையைத் தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும், நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் உரிமை மனு ஒன்றினைத் தாக்கல் செய்தது. இந்த உரிமை மனுவை அனுமதித்த உயர்நீதிமன்றம் தொழிலாளர் நல இணை ஆணையர் அவர்களை, புதிதாக ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. இதன் அடிப்படையில் ஆணையை மறுபரிசீலனை செய்த தொழிலாளர் நல இணை ஆணையர் நிர்வாகத்தின் கோரிக்கையை நிராகரித்து, மீண்டும் ஒரு ஆணையைப் பிறப் பித்தார். இந்த ஆணையினையும் எதிர்த்து நிர்வாகம் மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில் உரிமை மனுக்கள் தாக்கல் செய்துள்ளது. அவை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. நிறுவனத்தில் உள்ள நிதி நெருக்கடி காரணமாக மின்சாரக் கட்டணம் செலுத்த முடியாத காரணத்தால் 1990-ஆம் ஆண்டு மே மாதம் முதல் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு 1990-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஊதியம் வழங்கப்படவில்லை. தொழில் நிதி மற்றும் மறு கூட்டமைப்பு நிறுவனம் இந்த நிறுவனத்தை ஓர் நலிவுற்ற நிறுவனமாக அறிவித்துள்ளது. இதற்கிடையே நிர்வாகம் 12-4-91 முதல் கதவடைப்பு செய்துள்ளது. உயர்நீதிமன்றம் தொழில் நிதி மற்றும் மறு கூட்டமைப்பு நிறுவனம் ஆகியவற்றில் இந்நிறுவனத்தின் பிரச்சினை நிலுவையில் உள்ள சூழ்நிலையில் அரசு இப்பிரச்சினையில் தற்போது தலையிடுவதற்கில்லை. இருப்பினும், இந்நிறுவனத்தின் தாவா குறித்து கடலூர் தொழி லாளர் நல அலுவலர் இருதரப்பினரிடமும் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்.



3. கவன ஈர்ப்பு.

(அ) பழனி வட்டம் பழைய ஆயக்குடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டிட வசதி இல்லாதது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை மாண்புமிகு கல்வியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார், திரு. ஆ. சுப்புரத்தினம்.

முற்பகல் 10-45

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி வட்டம் பழைய ஆயக்குடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு போதிய கட்டட வசதி இல்லாதது குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழகத்தில் ஏறத்தாழ 2,700 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன. அவற்றுள் பாதிக்கு மேற்பட்ட பள்ளிகளுக்கு போதிய கட்டட வசதிகள் இல்லை. 600-க்கு மேற்பட்ட பள்ளிகள் 60 வருடங்களுக்கு மேலாக செயல்பட்டு வருகின்ற காரணத்தினால், அதன் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவைகளையும் அரசு புதுப்பிக்க வேண்டிய அவசிய நிலையில் உள்ளது.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், பழனி வட்டம், பழைய ஆயக்குடியில் அரசு உயர்நிலைப்பள்ளி 11-8-88-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. அப்பள்ளியில் 323 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அப்பள்ளிக்கென கட்டடக் குழுவும், பெற்றோர்-ஆசிரியர் சங்கமும் இணைந்து கூரைக் கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளார்கள். இப்பள்ளிக்கென சொந்த நிலமில்லாத காரணத்தினால் பஞ்சாயத்து யூனியன் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கென நிலம் கையகப்படுத்த திண்டுக்கல் அண்ணா மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் முயற்சி எடுத்து வருகிறார். எனவே நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட பிறகு கட்டடங்கள் கட்டுவது குறித்து அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலித்து ஆணையிடும்.

அரசு ஆண்டுதோறும் பள்ளிக் கட்டிடங்களுக்கு நிதிஒதுக்கம் செய்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் ரூ. 75 லட்சம் பள்ளிக் கட்டடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது,

மேலும் வீட்டு அபிவிருத்தி கழகத்திடமிருந்து ரூ. 175 லட்சம்
நிதியுதவி பெற்று பள்ளிக் கட்டடம் கட்டவும் முயற்சி மேற்
கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே தமிழகத்தில் உள்ள அரசு உயர்
நிலை/மேல்நிலை பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்ட அரசு
முதன்மை நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே,

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை''

என்ற குறள் ஆசானின் கருத்துக்கிணங்க, இந்த நிதிநிலை
ஒதுக்கீட்டில் சற்றொப்ப 1,330 கோடி ரூபாயை தமிழக
வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு நம்முடைய இதய தெய்வம்
புரட்சித் தலைவி அவர்கள் கல்வி இலாகாவுக்கு ஒதுக்கி
இருக்கிறார்கள். இந்த சூழ்நிலையிலே இந்த ஆயக்குடியிலே
உள்ள இந்த உயர்நிலைப் பள்ளியானது முதலிலே நடுநிலைப்
பள்ளியாகத்தான் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவர்
அவர்கள் முதல்வராக இருந்தபோது அது உயர்நிலைப்பள்ளி
யாக உயர்த்தர்பட்டது. பிறகு வந்த கருணாநிதி அரசு
அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஒரு நடவடிக்கையும்
எடுக்காமல் அது நடுநிலைப்பள்ளி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அது நடுநிலைப் பள்ளியாக இருந்தபோது
எந்த நிலையிலே இருந்ததோ அதே நிலையிலேதான்
இருக்கிறது, ஆயக்குடி பேரூராட்சியானது 75 சத
விகிதம் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்ட ஒரு பேரு
ராட்சி. அங்கே அது ஒரு கோ எஜுகேஷன் பள்ளி. அங்கே
கட்டிட வசதிகள் இல்லை; விளையாட்டு மைதானம் இல்லை.
'லேப்' வசதி இல்லை. மேலும் ஒரே ஒரு லேவட்டரிதான்
உள்ளது. அதைத்தான் இருபாலாரும் பயன்படுத்த வேண்டிய
ஒரு அவல நிலை உள்ளது. எனவே, ஏதாவது முன்னுரிமை
கொடுத்து இப்பேர்பட்ட நிலைமைகளையெல்லாம் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சரிசெய்ய முன்வருவார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஆ. சுப்புரத்தினம்
அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போன்று 1,300 கோடி
ரூபாய் இப்போது கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும்
கட்டடங்கள் கட்டுவதற்கு என்று 75 லட்சம் ரூபாய்தான்
ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே பார்த்திருப்பார்கள்.





இன்றைக்கு தமிழ்நாட்டில் சுமார் 600-க்கு மேற்பட்ட பள்ளிகள்
இப்படிப்பட்ட கட்டடங்கள் இல்லாத சூழ்நிலைக்கு உட்படுத்
தப்பட்டு மிக அவசரமாகப் பழுதுபார்க்க வேண்டிய சூழ்நிலை
யிலே கட்டடம் கட்ட வேண்டிய சூழ்நிலையிலே உயர்நிலைப்
பள்ளிகள் இருக்கின்றன. இதற்கு சுமார் குறைந்த மதிப்பீடு
போட்டாலும் 86 கோடி ரூபாய் வேண்டும் என்று
திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிதி
நிலைமையில் நெருக்கடி மாத்திரம் அல்ல வழக்கமாகவே அந்த
ஆண்டுதோறும் கல்வித் துறைக்கு கட்டடத்திற்காக சுமார்
1½ கோடி ரூபாய் அல்லது 2 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்
பட்டு வருகிறது. இந்த ஆண்டு இன்னும் 6 மாத காலத்
திற்கு 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர
வீடு அபிவிருத்திக் கழகத்திடமிருந்து ரூ. 175 லட்சம் பெறு
வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே இந்த
நிதி ஒதுக்கல் மசோதா நிறைவேறியவுடன் இந்த ஆண்டு
எந்தெந்த பள்ளிகளுக்கு முன் உரிமை வழங்கி கட்டடம் கட்டுவது
என்று அரசு ஆராய்ந்து முடிவெடுக்கிறபோது இந்த ஆயக்குடி
யில் அமைந்துள்ள இந்தப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவது
பற்றியும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

(ஆ) வீராணம் ஏரி நீர் பாயும் வாய்க்கால்களில் வளர்ந்துள்ள
நெய்வேலி காட்டாமணக்குச் செடியினால் விவசாயிகள் பெருமளவு
பாதிப்புக்குள்ளாகி இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு.

திரு. ச. அழகிரி அவர்கள் அவசரப் பொது முக்
கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு
வருவார். திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே
வீராணம் ஏரியிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் பாயும்
வாய்க்கால்களில் நெய்வேலி காட்டாமணக்கு என்ற செடி வளர்ந்
துள்ள காரணத்தால் தண்ணீர் பாய்வது குறைந்துள்ளதால்
விவசாயிகள் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பது
குறித்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன்
வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை.

வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் 34 வாய்க்கால்களில் 5 பொதுப்பணித்துறையைச் சார்ந்தவை. இவை பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் தலைப்பில் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 29 வாய்க்கால்கள் வருவாய்த்துறையைச் சார்ந்தவை. இவை கடந்த 25 ஆண்டுகளாக எந்தத் துறையாலும் பராமரிப்பின்றி தூர் நிறைந்தும் காட்டாமணக்குச் செடிகளுட னும் உள்ளன. இவற்றைப் பராமரிக்க ரூ. 8 இலட்சத்திற்கு ஒரு திட்டம் தனியாக அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதி நிலைக்கு ஏற்ப இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எங்களுடைய பகுதிகளில் அடிக்கடி சாதிய சண்டைகள் தான் நடைபெறும். ஆனால் விவசாயக் காலங்களில் ஒரு கிராமத் திற்கும், இன்னொரு கிராமத்திற்கும் சண்டை வந்துவிடுகிறது. வாய்க்கால்களில் இந்த காட்டாமணக்குச் செடிகள் அதிகமாக வளர்ந்து விடுகிற காரணத்தினால், ஏரிக்கு அடிக்கரையிலே இருக்கின்ற விவசாயிகள் தண்ணீரைத் திறந்து விட்டவுடன் போய் மூடி விடுகிறார்கள். எனவே கடைக்கோடியில் இருக்கின்ற விவசாயிகள் தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் கும்பலாக வந்து தண்ணீரைத் திறந்து விடுவதற்கு முயற்சி செய் கிறபோது அந்த கிராம மக்களுக்கும் இவர்களுக்கும் பெரிய சண்டை வந்து, பல்வேறு சண்டைகள் காவல்துறையிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-50

அடுத்ததாக 36 வாய்க்கால்களில் 5 வாய்க்கால்கள்தான் பொதுப்பணித்துறையின் கீழ் இருக்கின்றன. மற்ற வாய்க்கால்கள் எல்லாம் வருவாய்த் துறையின் கீழ் இருக்கின்றன. எனவே, மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டுஎல்லா வாய்க்கால்களையும் பொதுப்பணித்துறையின் கீழ் கொண்டு வந்து, காட்டாமணக்கு செடிகளை வேரோடு பிடுங்க வேண் டிய சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு முறையும் பொதுப் பணித் துறையிலே வெட்டுகிறார்கள். ஆனால் ராட்சச வேகத் தில் திரும்பவும் அவை வளருகின்றன. எனவே, அந்தச் செடி களை புல்டோசர்கள் வைத்து பிடுங்கி அழிக்க ஆவன செய் வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்இங்கே குறிப்பிட்டது போல இருக்கின்ற 34 வாய்க்கால்களில் 29 வாய்க்கால்கள் வருவாய்த் துறையினுடைய பொறுப்பில் இருக்கின்றன. இன் றைக்கு மீதம் இருக்கின்ற 5 வாய்க்கால்கள் மட்டும்தான் நம் முடைய பொதுப் பணித் துறையின் கீழ் இருக்கின்றது என்று



அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு பொதுவாக இந்தச் செடிகளை அகற்றுகின்ற நேரத்தில் சாதாரணமாக மெயின்டெனன்ஸ் கிராண்ட்ஸ் என்று சொல்லுகின்ற பராமரிப்பு நிதியிலிருந்துதான் அவ்வப்போது செலவு செய்யப்படுகிறது என் பதையும் இந்த ஆண்டு 8 லட்சம் ரூபாயை பொதுப்பணித் துறை ஒதுக்கி இருக்கிறது என்பதையும் அந்தத் திட்டத்திற்காக அவைகளை அகற்றுவதற்காக அரசு ஒரு முனைப்போடு நட வடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்றைக்கு வாய்க்கால்களைப் பொறுத்தவரையில 29 வாய்க் கால்களை பொதுப்பணித்துறைக்கு, வருவாய்த் துறையிலிருந்து மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரி வித்தார்கள். அது ஓரளவு நியாயம் என்பதையும் உணர்கிறேன். ஏன் என்றால் ஏரிகளைப் பராமரிக்கின்ற நேரத்திலே ஒரே துறை யின் கீழ் அனைத்து வாய்க்கால்களும் இருந்தால்தான் நிதி ஒதுக்கு கின்ற தலைப்பின் கீழ் அவைகளைப் பராமரிக்க ஏதுவாக இருக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினருடைய நியாயமான கோரிக்கை இதுபற்றி வருவாய்த்துறை உயர் அதிகாரிகளை யும் நம்முடைய பொதுப்பணித்துறை அதிகாரிகளையும் கலந்தாலோசித்து, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சருடைய ஒப்புதலையும் பெற்று, அதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

## 4. மானியக் கோரிக்கைகள், 1991-92. விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள். தலைமையிடப் பணியாளர்கள், மாண்புமிகு நிதியமைச்சர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 45,29,56,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 1151. திரு. மெ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர். அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,29,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1152, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 45,29,56,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் என் 1153. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் என் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 45,29,56,0(0-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மானியக் கோரிக்கை என் 7 மாநிலச் சட்டமன்றம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் என் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,89,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"
என்று கோருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 1168. திரு. மா, சுந்தரதாஸ். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1156. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,89,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வெட்டுத் தீர்மானம் எண். 1174. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை தொகுதியின் தலைநகரத்தில் பொதுமக்கள் சந்திக்கின்ற வலகையில் அரசு அலுவலகம் ஏற்படுத்தி தர வேண்டிய அவசியத்தைக் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்லகயின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,88,52,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மானியக் கோரிக்கை எண் 8. தேர்தல்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 11,98,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"
என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் என் 1190. திரு. ஆர். சிங்காரம்.

திரு, ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சித் தேர்தல்களில் கள்ள ஓட்டைத்

[திரு. ஆர். சிங்காரம்] [1991 செப்டம்பர் 27

தவிர்க்க வாக்காளர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கும் முறையைக் கொண்டு வருவதற்கான அவசியம் குறித்து விவாதிக்க நான்கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,98,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 1186. டாக்டர் தே. குமாரதாஸ்,

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,98,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1188, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்,

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,98,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஈ) மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 342,13,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று கோருகிறேன்.



1991 செப்டம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1201, திரு. சோ. இராசாராமன்.

Thiru. S. RAJARAMAN : Hon. Speaker, Sir To discuss the delay in granting pension and other retirement benefits and the need to avoid it I move that —

"The sum of Rs. 342,13,31,000under Demand No. 42—Pensions and other retirement benefits, be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1196, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வு ஊதியத் தொகையை உயர்த்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 342,13,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(உ) கோரிக்கை எண் 43—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை பற்றிய 43-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 183,24,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 43-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 183,24,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1203, டாக்டர் தே. குமாரதாஸ்,

[1991 செப்டம்பர் 27

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பல்வகை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 183,24,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 1204, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பல்வகை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 183,24,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஊ) கோரிக்கை எண் 61—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 61—பல்வகை மூலதனச் செலவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 22,43,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1207, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,43,60,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1208, திரு. ஜி. பழனிசாமி.



1991 செப்டம்பர் 27]

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,43,60,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(எ) கோரிக்கை எண் 62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 62, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்' மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 346,43,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1209, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 346,43,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1210, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 346,43,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

[1991 செப்டம்பர் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**முற்பகல் 11-00**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் 7 மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை பற்றிய கொள்கைக் குறிப்புகளும் விளக்கங்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தரப்பட்டிருக்கின்றன. தமிழிலே தரப்பட்ட விளக்கக் குறிப்புகளையும் விளக்கங்களையும் என்னுடைய முன்னுரையாக எடுத்துக்கொண்டு, பதிவேட்டில் பதிப்பிக்குமாறு* கேட்டுக்கொள் கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எல்லாம் வழங்க அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டு ஆலோசனை கூறுவார்களேயானால், எனக்கு இறுதியில் நேரம் தருவார்களே யானால் (சிரிப்பு) சில கருத்துக்களை மட்டும் கூறுகிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல, பேரவை விதிகளின்படி இன்று விவாதமும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையும் சரியாக பிற்பகல் 1 மணிக்கு முடிந்து ஒரு மணி அளவில் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று 'கில்லெட்டின்' நாள். எனவே ஒரு மணிக்குள் பேசி முடித்து, அவருக்கு எவ்வளவு கால அவகாசம் தருகிறீர்களோ, அதற்குத் தக்க அவருடைய பதிலுரையும் இருக்கும். சட்டமன்றமும் இன்று சேர்ந்து வருகிற காரணத்தால், உங்களுக்கு வழங்க வேண்டியதை வழங்குவார்கள். இல்லையேல் நான் ஒரு மணிக்கு சடாரென்று வாக்கெடுப்பு எடுத்து மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி வரும். எனவே எந்த அளவுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நேரம் தருகிறீர் களோ அந்த அளவுக்கு சட்டமன்றமும் சட்டமன்ற உறுப்பினர் களும் பயன் பெறலாம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள் கிறேன். இப்போது உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர், நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்களின் நன்னாள் இந்நாள். (சிரிப்பு) இந்நாளை பொன்னாளாக்கித் தரவேண்டிய பொறுப்பை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே நாங்கள் விட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட தங்களையும், ஆண்டவனின்

---

*119–165ஆம் பக்கங்களில் இணைப்புகள் 1 முதல் 7 வரை அச்சிடப்பெற்றுள்ளது.



1991 செப்டம்பர் 27] [திரு. ஆர். சிங்காரம்]

சக்தி பெற்ற, சர்வசக்தியாக விளங்கும் ஆதிபராசக்தி, எங்கள் வறட்சியைப் போக்க வந்த புரட்சித் தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இன்று நமக்கு நீதி—நிதி வழங்க இருக்கிற மதிமிகு நிதியமைச்சர் நமது மாண்புமிகு நாவலர் அவர் களையும் நான் வணங்கி, என்னுடைய பேச்சைத் தொடங்கு கிறேன்.

இதுவரையில், இங்கே இருக்கிற எல்லா சட்டமன்ற உறுப்பினர் களும் பல்வேறு மானியக் கோரிக்கைகளில் பொதுமக்களுடைய, ஏழை எளிய மக்களுடைய, ஆதி திராவிட மக்களுடைய எல்லா வித பிரச்சினைகளையும் பற்றி பேசி இருக்கிறார்கள். அந்தக் காரியங்களை எல்லாம் கூடியவரையில் நமது அமைச்சர் பெரு மக்களும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் கவனித்து பல்வேறு திட்டங்களை அறிவித்து ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைக்கான திட்டங்களைத் தீட்டுகின்ற அரசாக இந்த அரசு திகழ்வதில் நான் பெருமை அடைகிறேன். அந்த வகையில் இதுவரையில் எல்லாருக்காகவும் பேசிய நாங்கள் இன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்காக, பேசி, எங்களுடைய வறுமை யையும் உங்களிடத்தில் சொல்லி, இங்கே சில காரியங்களை நிறைவேற்றுவதற்காக தங்கள் முன் சில கோரிக்கைகளை வைக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற பேருதான் பெத்த பேரு. தாகத்திற்கு நீலு லேது என்றுதான் இருக்கிறது. பேரெல்லாம் பெரிதாகத்தான் இருக்கிறது. ஆனால் எந்தவித வசதியும், வாய்ப்பும் இல்லாமல் எந்தவித அதிகாரமும் இல்லாமல், மிக வறுமையில் வாடுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் நிலையைப் பாரீர்! பாரீர்!! என்று மாண்புமிகு, மதிமிகு நிதியமைச்சர் அவர்களை நான் வேண்டுகிறேன்.

நான் ஒரு ஏழை சட்டமன்ற உறுப்பினர் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். சென்ற சேர்மன் தேர்தலில் நான் மணியக்காரரிடத்தில் ஒரு சர்டிபிகேட் வாங்கி வரச் சொன்னேன். அந்த மணியக்காரர் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். எனக்கு, (திரு. ஆர். சிங்காரம் அவர்களுக்கு) வீடு இல்லை, வீட்டு வரி யில்லை; வண்டி இல்லை, வண்டி வரியில்லை: நிலமில்லை, நிலவரி இல்லை என்று கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு சாதாரண தொண்டனாக இருக்கிற என்னை ஏழை மக்கள் எல்லாம் சேர்ந்து சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். எனக்கு வீடும் இல்லை, வசதியுமில்லை. யோக்கிதாம்சம், நாணயம், லஞ்ச லாவண்யம் இல்லாத ஏழை தொண்டன் என்ற அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறேன். என்னைப் போல இந்தச் சட்ட மன்றத்திலே எல்லோரும் அப்படித்தான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் போல் மிகவும் ஏழ்மை நிலைமையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் பாதி பேர் இருக்கிறார்கள் இங்கே உள்ள தாய்மார்களைப் பார்த்தால் உண்மையிலேயே மிகவும் ஏழ்மை யானவர்களாக இருக்கிறார்கள். அதிலே நிரம்ப பட்டதாரிகள் இருக்கிறார்கள். ஆனால் பட்டாதாரர்கள் இல்லை. பட்டதாரிகள் பாதிக்கு மேல் இருந்தாலும் பட்டாதாரர்கள் இல்லை. அந்த அளவுக்கு எழ்மை நிலைமையிலே இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 11.05

இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால் ஏனைய மாநிலங் களில் ரூ. 4,000, ரூ. 5,000, ரூ. 7,500 என்று சம்பளம் வழங்கப் படுகிறது. இங்கே நம்முடைய அரசு தந்திருக்கிற விவரத்திலே கூட இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்கள், படி எவ்வளவு கொடுக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் இங்கே கொடுத்திருக்கிறார்கள். அது இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்த பட்டியல். 1989-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்தது. அதன் பிறகு பல மாறுதல்கள், சென்ற வருஷம் ஏற்பட்டிருக்கின்றன. இந்த வருஷம் ஏற்பட்டிருக் கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மைப் பொறுத்த வரையில் ஆயிரம் ரூபாய் வழங்குகிறார்கள். தயவுசெய்து இதை ரூ. 5,000ஆக உயர்த்தித் தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல டெலிபோன் சார்ஜ்க்கா 700 ரூபாய் கொடுக் கிறார்கள். இந்த 700 ரூபாய் போதாது. எஸ்.டி.டி. வைத்திருப்பவர்கள், மற்றும் என்னைப் போன்று சாதாரண ஃபோன் வைத்திருப்பவர்கள் ஆகியவர்களுக்கு மாதத்திற்கு ரூ, 1.500 ரூ. 2,000 என்ற அளவிற்கு 'பில்' வருகிறது. தினம் தினம் வருகிற மக்களுக்குக் காரியம் செய்து ஆக வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில், கலெக்டருக்குப் போன் செய்ய வேண்டும். அமைச்சருக்குப் ஃபோன் செய்ய வேண்டும், ஆர்.டி.ஓ.விற்குப் ஃபோன் செய்ய வேண்டும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஃபோன் செய்ய வேண்டும் என்ற சூழ்நிலையில் இருக்கிறோம். இதற்கெல்லாம் தொலைபேசி கட்டணத்தை யார் கொடுப்பது? இதற்கு 700 ரூபாய் கொடுப்பது போதாது. ஆகவே இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தற்போது 'காம்பென்சேட்டரி அலவன்ஸ்'— இதர படிகள் என்ற அளவில் ரூ. 800 கொடுக்கிறார்கள். இது நிச்சயமாக போதாது. இதை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அதே நேரத்தில் ஸ்டாம்பு செலவிற்கு ஒன்றும் தருவதில்லை இதற்கு ஆயிரம் ரூபாய் ஒதுக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கெல்லாம் நிறைய மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன, என்னைப் பொறுத்த வரையில் இது வரையில் 23,000 (இருபத்தி மூவாயிரம்) மனுக்கள் வந்திருக் கின்றன. சென்ற வருடமும், இந்த வருடமும், இத்தனை மனுக்களை டிஸ்போஸ் செய்ய வேண்டுமென்று சொன்னால், சம்பந்தப் பட்டவர்களுக்கு அதனுடைய நகலை அனுப்ப வேண்டும், கார்ட், தபால் அனுப்ப வேண்டும், இப்படிப்பட்ட வேலைகளை யெல்லாம் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே ஸ்டாம்ப் செலவிற்குக் கட்டாயம் ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும், ஸ்டாம்ப் செலவிற்காக ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் டைப் செய்வதற்காக டைப்பிஸ்ட்-கம்-பி.ஏ. என்ற ஒரு போஸ்ட் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் நாங்கள் டைப் செய்து கொள்வதற்குச் சௌகரியமாக இருக்கும். அதே நேரத்தில் எங்களுக்கு உதவி செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். உடனடியாக நாங்கள் அப்பாயின்மெண்ட் போட்டுக் கொள்கிறோம். நீங்கள் அதற்கு அனுமதியைக் கொடுங்கள். அவர்களுக்குரிய சம்பளத்தை நீங்கள் கொடுத்துவிடுங்கள். நிதி வசதி இல்லையென்றால், தாலுக்கா அலுவலகம், யூனியன் அலுவலகம் ஆகியவற்றில் உள்ள கிளார்க்குகளை எங்களுக்கு டெப்யுட் பண்ணுங்கள். பெர்மனென்ட்டாகக் கொடுங்கள். நாங்கள் பதவியில் இல்லையென்றால் எம்.எல்.ஏ.வாக வரக் கூடிய இன்னொருவருக்கு அவர்கள் போகட்டும். பஞ்சாயத்து யூனியன் சேர்மேனுக்கு, பஞ்சாயத்து யூனியன் கிளார்க்குகளைக் கொடுக்கிறார்கள். ஆனால் தொகுதி பூராவும் நாங்கள்தான் சுற்றுகிறோம், வேலைகளை நாங்கள்தான் பூராவும் பார்க் கிறோம். எல்லா வேலைகளையும் நாங்கள் செய்துகொண்டிருக் கிறோம். ஆகவே இது அவசியம். ஒரு கடிதத்தை டைப் செய்வதற்கு ஒரு பக்கத்திற்கு ரூ. 6 என்று ரேட் இருக்கிறது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலம் வரைக்கும் ஒரு பக்கத்திற்கு ரூ. 6 என்று இருந்தது. விலையேறவில்லை. இப்படிப்பட்ட நிலையில் நூற்றுக்கணக்கான மனுக்களை டைப் செய்ய நாங்கள் என்ன செய்வது? இப்படிப்பட்ட கஷ்டமான சூழ் நிலையை தயவு செய்து நீங்கள் பரிசீலித்து ஒரு டைப்பிஸ்ட்— கம்—பி.ஏ. என்ற அளவிலே ஒவ்வொருவருக்கும் நியமிக்க வேண்டும். அல்லது அதற்கான அலவன்சைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரயில்வே கட்டணத்திற்காக தற்போது ரூ. 7,000 கொடுத் திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இரயில்வே கட்டணத்தை 20 சதவீதம் உயர்த்தியிருக்கிறார்கள். அந்த ரேட்டிற்குத் தக்கவாறு நீங்களும் உயர்த்தித்தான் ஆகவேண்டும். அதே நேரத்தில் இந்த

[திரு. ஆர். சிங்காரம்.] [1991 செப்டம்பர் 27]

முற்பகல் 11.10 மணி

7 ஆயிரம் ரூபாய் என்பது மிகக் குறைவானது. உத்திரப்
பிரதேசத்தில் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். மற்ற
மாநிலங்களில் 20 ஆயிரம், 25 ஆயிரம், 30 ஆயிரம், 35 ஆயிரம்
என்று கொடுக்கிறார்கள். சமீபத்தில் 'ஃபிளைட் சார்ஜ்' கூட
கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு உத்திரப் பிரதேசம்,
ராஜஸ்தான் மாநிலங்களில் நடந்துகொண்டு இருக்கிறது. எனவே
அந்தத் தொகையை நீங்கள் உயர்த்தித் தர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர்களை ஐ.ஏ.எஸ் ஆபீசர்
களுக்கு ஈகுவல்—ஆக டீல் பண்ண வேண்டும். அந்த ஈகுவல்
ஸ்டேடஸ் உண்டு என்று சொல்கிறார்கள். ஒரு ஐ.ஏ.எஸ்.
ஆபீசர் மெட்ராஸிலிருந்து புறப்பட்டு தஞ்சாவூருக்குப் போகிறார்
என்றால், அவர் எப்படி போகிறார்? ஃபர்ஸ்ட் கிளாசில் போகிறார்.
அதற்குப் படி எல்லாம் கொடுக்கிறார்கள். அதுபோல் எங்களுக்
கும் கொடுக்க வேண்டும். நான் இங்கே இருந்து பேராவூரணி
போய்விட்டு வர வேண்டுமென்று சொன்னால், நான் இங்கிருந்து
போக ஃபர்ஸ்ட் கிளாஸ் ஃபேர் கொடுக்கிறார்கள். நான் போய்
விட்டு திரும்பி வர வேண்டும். நான் இடையிலே சாப்பிடுவது
இல்லையா? இறங்கி வீட்டுக்குப் போவது இல்லையா? நாங்கள்
என்ன நடந்தா போவது? அந்த அளவுக்கு நான் ஏன் சொல்கிறேன்
என்றால், என்னைப் போல ஏழைத் தொண்டர்கள் யோக்கியமான
நாணயமான தொண்டர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினராக
நிறைய பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் வழி
என்ன? நான் ஒன்று சொல்கிறேன்; அதைச் செய்யுங்கள்.
எங்களுடைய எல்லாச் செலவுகளையும் நீங்களே ஏற்றுக்
கொள்ளுங்கள். எங்களுக்குச் சம்பளமே வேண்டாம். எல்லாச்
செலவுகளையுமே கவர்ன்மென்டே ஏற்றுக்கொள்ளட்டும்.
எங்களை நீங்கள் 'அண்டர்-டேக்' பண்ணுங்கள். அந்த அளவுக்கு
நாங்கள் செயல்பட வேண்டும்; யோக்கியமாகச் செயல்பட
வேண்டும்; நாணயமாகச் செயல்பட வேண்டும். லஞ்ச
லாவண்யம் இல்லாத ஒரு சட்டமன்ற உறுப்பினராகவோ,
அமைச்சராகவோ செயல்பட வேண்டும். (எதிர் வரிசையில்
அமைச்சர்களைப் பார்த்து) உங்களையும் சேர்த்துத்தான்
சொல்கிறேன். அங்கேயும் அவர்களுக்கு ஒன்றும் இல்லை.
நம்மைவிட அவர்களுக்கு 500 ரூபாய் சம்பளம் கூட இருக்கிறது,
அவ்வளவுதான். நான் முதலிலேயே சொன்னேன். அவர்களுக்கு
ஸ்டேடஸ்தான் பெரிதாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு அந்த அளவுக்கு பொருளாதார ரீதியாக ஸ்டேடஸ்
உயர்த்தினால்தான், நாங்கள் மன நிறைவோடு செயல்படுவதற்
கும் சௌகரியமாக இருக்கும்.

பார்ட்டி வந்து தஞ்சாவூருக்கு அவசரமாக போகப் வேண்டும்
என்று சொல்கிறார்கள். உடனே அவர்களைப் பார்த்து
டாக்ஸி எடுங்கள் என்று சொல்ல முடியாது. பார்ட்டி ஏழையாக



1991 செப்டம்பர் 27] [திரு ஆர். சிங்காரம்]

இருப்பான். பணக்காரனோ, ஏழையோ அவர்களை டாக்ஸி
எடுக்கச் சொல்லக் கூடாது. டாக்ஸி இல்லாவிட்டால் பஸ்ஸில்தான்
போக வேண்டும். பஸ்ஸில் போவதற்குள் அந்த ஆபீசர் போய்
விடுவார். ஆகவே டாக்ஸியில் போக வேண்டும்.
அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் எங்களுக்கு ரொம்ப கஷ்டமாக
இருப்பதால் நீங்கள் எங்களுக்கு அந்த நிலையை மாற்றித் தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிரெயின் ஃபேர் ஃபர்ஸ்ட் கிளாஸ் ஃபேர் கொடுக்கிறார்கள்.
அதை டபுள் ரேட் ஆகக் கொடுக்க வேண்டும். ஃபர்ஸ்ட் கிளாஸ்
ஃபேர் 300 ரூபாய் கொடுக்கிறார்கள் என்றால் மேலும் 300
ரூபாய் செலவுக்கு கொடுக்க வேண்டும். அந்த அளவுக்குக்
கொடுத்தால்தான் எங்களுக்குக் கட்டுப்படி ஆகும். அதை அந்த
அளவிற்கு நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதுபோல், சிட்டிங் ஃபீஸ் 100 ரூபாய் கொடுக்கிறார்கள்.
அந்த 100 ரூபாய் பல ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது.
மற்ற மாநிலங்களில் 200, 250 ரூபாய் வரை கொடுக்கிறார்கள்.
அதையெல்லாம் கம்பேர் பண்ணி எங்களுக்கு சிட்டிங் ஃபீஸ் 250
ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்று பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நாங்கள் தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்ய வேண்டும்.
அப்படி நாங்கள் அங்கே சுற்றுப் பயணம் செய்ய வேண்டும்
என்றால், எங்களுக்கு கார் அவசியம் வேண்டும். எங்களுக்கு
கார் வாங்குவதற்கு வழி இல்லை. கார் வாங்க வழியே இல்லை
என்று சொன்னால், நாங்கள் எந்தத் தப்பும் பண்ண முடியாது;
தவறும் பண்ண முடியாது. நாங்கள் கார் வாங்குவதற்கு வழி
சொல்லுங்கள். ஒரு யூனியனில் ஜீப்புக்கு 50 லிட்டர் டீசல்
கொடுக்கிறார்கள். அதை பயன்படுத்திக் கொள்ளச்
சொல்கிறார்கள். நான் யூனியனுக்கு ஜீப்பை எடுக்கச் செல்ல
வேண்டும் என்றால், என்னோடு 10 பேரை அழைத்துப் போக
வேண்டும். ஏனென்றால், அதைத் தள்ளி எடுப்பதற்காகத்தான்.
அதைத் தள்ளி எடுப்பதற்குப் பதில், நடந்தே போய், பாத
யாத்திரையாகப் போய்விடலாம். அப்படி பல இடங்களில் ஜீப்
இருக்கிறது. ஒருவேளை நன்றாக இருக்கிற ஜீப்பைக் கேட்டால்,
இன்றைக்கு வேலை இருக்கிறது; நாளைக்கு வேலை இருக்கிறது,
சேர்மன் அங்கே போகிறார், பிடிஓ அங்கே போகிறார், பி.ஏ.
வருகிறார், கலெக்டர் வருகிறார், வருகிறார் என்று சொல்லி
தள்ளி விடுகிறார்கள். ஆனால், இப்போது ஒன்றும் பிரச்சினை
இல்லை. இப்போது சேர்மன் இல்லை; வேறு ஒருவரும் இல்லை.
நாம்தான் ராஜா; போய் ஜீப்பை எடுத்துக் கொள்ளலாம். ஆனால்
எலக்ஷன் நடத்திய பிறகு என்ன செய்வது? அப்போது அவர்கள்
வந்துவிடுவார்கள். அந்தச் சூழ்நிலையில் நாம் ஒத்துப்போக
முடியாது. எனவே அந்த அளவுக்கு நாங்கள் தொகுதியில் சுற்றுப்
பயணம் செய்வதற்கு கார் வாங்க வேண்டும். அதை நீங்களே

வாங்கிக் கொடுத்துவிடுங்கள் அல்லது கவர்ன்மென்ட் காரை
எங்களுக்கு கொடுத்து விடுங்கள். எங்களுக்கு பணம் வேண்டாம்.
அல்லது வட்டி இல்லாத கடன் 2 இலட்சம் ரூபாய் கொடுங்கள்;
வோங் கொடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அது மிக்க
அவசியமான ஒன்று. அதை எல்லோரும் கேட்கிற, விரும்புகிற
நிலைமை இருக்கிறது. ஏதோ ஒரு பத்திரிகையில் சில
எம்.எல்.ஏக்கள் கார் வாங்கிவிட்டார்கள் என்று போடுகிறார்கள்.
நாங்கள் அவரைப் பார்த்துக் கேட்டால், காரும் இல்லை,
மோரும் இல்லை. சும்மா பத்திரிகையில் தப்பாக செய்தி
போடுகிறார்கள் என்று சொல்கிறார் ஆக அந்த அளவிற்கு யாருமே
இல்லை. புரட்சித் தலைவியின் கோபத்துக்கு ஆளானால்
அப்புறம் தாங்கள் காலியாகி விடுவோம் என்ற பயத்தில்
எல்லோரும் பயந்து கொண்டு ரொம்ப ஜாக்கிரதையாக, ஒரு சிறு
தவறுகூட வராமல், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும்
சரி, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி செயல்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் நாணயம்
உள்ள சட்டமன்ற உறுபபினர்களாக செயல்பட்டுக் கொண்டிருக்
கிறார்கள். எனவே நாங்கள் கார் வாங்குவதற்கு 2 இலட்சம்
ரூபாய் தயவுசெய்து நீங்ᵒள் வட்டி இல்லாத கடன் கொடுக்க
வேண்டும். அப்படி மற்ற மாநிலங்களில் கொடுக்கிறார்கள்.
வட்டி இல்லாத கடன் கொடுக்கிறார்கள். அங்கு
பேங்கில் வேலை செய்கிற ஸ்டாஃப்புக்கு வீடு கட்டுவதற்குக் கடன்
கொடுக்கிறார்கள். நேஷனலைஸ்டு பேங்கில் வேலை செய்கிற
பேங்க் ஸ்டாஃப்புக்கு கடன் கொடுக்கிறார்கள். சாதாரணமாக
2% தான் வட்டி, எனவே எங்களுக்கு அந்த கார் வாங்குவதற்கு
நீங்கள் அவசியம் கடன் கொடுத்தே ஆக வேண்டுமென்று பணிவன்
போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். தொகுதியிலே
எனக்கு வீடு கிடையாது. நான் வாடகை வீட்டில்தான் குடியிருக்
கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கடனுக்கு

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும், முடித்து விடுங்கள்.
எல்லோரும் பேசி மாண்புமிகு நாவலர் அவர்கள் பதில் சொல்ல
வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா
பிரச்சினைகளையும் சொல்லி, ஒவ்வொன்றுக்கும் அவர் விளக்கம்
சொல்ல வேண்டும்.

திரு. ஜி. விசுவநாதன் : தலைவர் அவர்களே, எங்கள்
சார்பாக திரு. ஆர். சிங்காரம் திரு. என். பன்னீர்
செல்வம் ஆகிய இருவரும் பேசினால் போதும். (சிரிப்பு)

திரு. ஆர் சிங்காரம் : தலைவர் அவர்களே, எங்களுடைய
நிலைமையை இந்த ஏழைத் தொண்டன் சொன்னால்
உங்களுக்குப் புரியும். (சிரிப்பு) வருடா வருடம் நான்தான்



பேசுவேன். ஆகவே, தொகுதியில் வீடு கட்ட வேண்டும். எனக்கு
வீடு கிடையாது. எனக்கு என்ன வழி சொல்லுங்கள். இந்த
அரசை நான் கேட்கிறேன். நான் வீடு இல்லாமல் வாடகை
வீட்டில் குடியிருக்கிறேன். என்னைப் போன்ற பல சட்டமன்ற
உறுப்பினர்கள் வாடகை வீட்டில் குடியிருக்கிறார்கள். 45, 50
ஆதி திராவிட சட்டமன்ற உறுப்பினர்கள் வாடகை வீட்டில்
குடியிருக்கிறார்கள். சொந்த வீடு கிடையாது. மிக ஏழ்மை
யானவர்கள். இங்கே இருக்கிற தாய்மார்களும், நண்பர்களும்
வீடு இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு வீடு வேண்டும்.
சில அமைச்சர்கள் கூட வீடு இல்லாமல் இருக்கிறார்கள் என்று
கேள்விப்பட்டேன். அந்த அளவுக்கு இன்றைக்கு புரட்சித் தலைவி
அவர்கள் சாதாரண, மிக சாமானிய தொண்டர்களை, எங்கே
நிறுத்தினாலும் அவர்கள் வெற்றி பெறுகிற அளவுக்கு, சக்தி
படைத்த புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்துகிற இந்த
ஆட்சியில், இந்த சாதாரண தொண்டர்களுக்கு, சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற வகையில் நீங்கள் எங்களுக்கு
வீடு கட்டிக் கொடுப்பதற்கு கடன் வழங்க வேண்டுமென்று பணி
வோடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன், மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் தாராளமாக சிரித்துக் கொண்டே இதை
யெல்லாம் கேட்கலாம். (சிரிப்பு) ஆகவே, இந்த வீடு கொடுப்பது
மிக அவசியம். மூன்று இலட்சம் அல்லது இரண்டு இலட்சம்
ரூபாய் வட்டியில்லாத கடன் கொடுத்தால் போதும். சும்மா
கொடுக்க வேண்டாம். கார் கொடுத்தாலும், வீடு கொடுத்தாலும்
எங்கள் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளுங்கள். நாங்கள்
எக்ஸ் எம்.எல்.ஏ. ஆனால் கூட மாதா மாதம் எங்களுக்கு
பென்ஷன் வருகிறது. அதிலே பிடித்துக் கொள்ளுங்கள். அதற்கு
உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே, சம்பளத்தில்
பிடித்துக் கொள்ளலாம். வட்டியில்லாத கடன்
கொடுங்கள். அசலை மாதாமாதம் சம்பளத்தில் பிடித்துக்
கொள்ளலாம். அந்த அளவுக்கு நீங்கள் ஏற்பாட்டைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு தொகுதியிலும், ஹெட் குவார்ட்டர்சில் சட்டமன்ற
உறுப்பினர் இல்லம் என்று ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்.
(மேசையைத் தட்டும் ஒலி) அந்த இல்லம் அதாவது ரெசிடன்ஸ்-
கம்-ஆபீஸ் மாதிரி இருக்க வேண்டும். என்னை எடுத்துக்கொண்
டால் ரெசிடன்ஸ்-கம்-ஆபீஸ் பேராவூரணியில் கட்டிக் கொடுத்து
விடுகிறீர்கள் என்றால், ஒவ்வொரு தொகுதியிலும் ஹெட்
குவார்ட்டர்சில் கட்டிக் கொடுத்து விடுகிறீர்கள் என்றால், எந்த
எம்.எல்.ஏ. வந்தாலும் அந்த வீட்டில் இருக்கட்டும். அந்த வீடு
சட்டமன்ற உறுப்பினருடைய வீடு. இப்போது ஆர்.டி.ஓ. வீடு
தாசில்தார் வீடு என்று இருப்பதைப்போல, அமைச்சர்களுடைய
வீடு இருப்பதைப்போல, எந்த அமைச்சர் வந்தாலும் அந்த
வீட்டிலே இருப்பதைப்போல எங்களுக்கும் எங்கள் தொகுதியில்
சட்டமன்ற உறுப்பினர்கள் வீடு என்று ஒரு வீடு கட்டிக் கொடுக்க
வேண்டுமென்று பணிவோடு வேண்டி விரும்பி கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போல ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஜீப் கொடுக் கிறீர்கள். அது எங்களுக்கு வேண்டாம். 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கிறீர்கள். அதுவும் எங்களுக்கு வேண்டாம். அதை 100 லிட்டராக்கி பணமாகக் கொடுத்து விடுங்கள். நான் அவர்களிடம் ஜீப் கேட்க வேண்டாம். நாங்கள் நடந்தே பாதயாத்திரை போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் தேவை யில்லாமல் சண்டை வருகிறது. அவர்கள் எங்களை மதிப்பது இல்லை. ஆகவே அது வேண்டாம். நான் நடந்தே ஒரு மாதம் பாதயாத்திரை போனேன். எனவே, 100 லிட்டராக்கி பணமாக கொடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எம்.எல்.ஏ. ஹாஸ்டல் இருக்கிறது. அந்த எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் ஒரு ரூம் இருக்கிறது. இந்த ரூம் எப்படி இருக்கிறது என்றால் ராஜஸ்தான், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசத்தில் ஒவ்வொரு எம்.எல்.ஏ.க்களுக்கும் வீடு கொடுத்திருக்கிறார்கள். அந்த எம்.எல்.ஏ. வீட்டில் இருக்கிற லெட்ரீன்-கக்கூஸ் தான் இங்கேயிருக்கிற எங்களுடைய ரூம். (சிரிப்பு) அந்த கக்கூஸ் கூட நீட்டாக மார்பிள் ஸ்டோன் போட்டு, வழுக்கி விழுந்தால் சாகிற மாதிரி இருக்கும். (சிரிப்பு) ஆனால் இங்கேயிருக்கிற ரூம் இருக் கிறதே அது மிகவும் மோசமாக இருக்கிறது. நீங்கள் கட்டவில்லை இதையெல்லாம். எப்போதோ கட்டியது. இப்போது புரட்சித் தலைவி ஆட்சியில் எல்லாம் மாடர்ன் என்கிற வகையில், எல்லோருக்கும் எல்லாம் செய்கிற இந்தக் காலத்தில், அந்த இரண்டு ரூமை ஒரு ரூமாக செய்து, இடையில் ஒரு கதவு போட்டு கொடுத்தால் போதும் காரணம் ஊரிலிருந்து குடும்பம் வருகிறது என்றால் எங்கே தங்குவது? என்னுடைய பேமிலி-சம்சாரம் வருகிறார்கள் என்றால் எங்கே தங்குவது? அது முடியாது. ஆகவே, நீங்கள் நடுவில் ஒரு போஸ்ட் கொடுத்திருக்கிறீர்கள். அதில் ஸ்கிரீன் போட்டு வேஷ்டி, சட்டையெல்லாம் அங்கே தான் மாற்றிக் கொள்கிறோம். நாங்கள் செய்கிறோம் என்றால், லேடீஸும் அப்படித்தான். ஆனால் ஊரிலிருந்து, தொகுதி யிலிருந்து வருகிறார்களே ஆட்கள் அந்த ஸ்கிரீனை தூக்கிக் கொண்டு பார்க்கிறான். (சிரிப்பு) உள்ளே எம்.எல்.ஏ. என்ன பண்ணுகிறார் என்று. அந்த ரூமில் நிற்கவும் முடியாது. எழுந் திருக்கவும் முடியாது. தொகுதியிலிருந்து 10, 15 பேர்கள் வருவார்கள். நிற்கக்கூட இடம் கிடையாது. அங்கே படுப்பதற்கு ஒரு மெத்தை இருக்கிறது. நம்முடைய திருவிடைமருதூர் எம்.எல்.ஏ. பன்னீர்செல்வம் இருக்கிறார் பாருங்கள், அவர்தான் அதிலே படுக்கலாம். அவர் படுத்து, புரளக்கூட முடியாது. கீழே விழுந்துவிடுவார். அந்த அளவிற்கு சிறியதான ஒரு மெத்தை இருக்கிறது. இது எல்லாம் எம்.எல்.ஏ.க்கள்ஸ்டேடசுக்குத் தகுந்த



மாதிரி ஒரு படுக்கையா அல்லது ரூமா என்றால் இல்லை அந்த அளவிற்கு மோசமாக இருக்கிறது. தயவுசெய்து பரிசீலனை செய்து, எங்களுடைய நிலையைப் பாரீர், அள்ளித் தாரீர் என்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அடுத்து, படியைப் பொறுத்தவரையில், சென்னையில், மெட்ராஸ் சிட்டி, அதன் பக்கத்திலே உள்ள எம்.எல்.ஏக்கள் எல்லாம் இருக்கிறார்கள். எங்களுக்கு எல்லாம் ரயில்வே பேர் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும், அதே நேரத்தில் காம்பன்சேட்டரி அலவன்ஸ் மாதிரி ஒரு அலவன்சை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் ஒரு சாப்பாடு ஹோட்டல் இருக்கிறது. பிரமாதமான ஒரு ஹோட்டல். உலகத்திலே அந்த ஹோட்டல் மாதிரி எங்கும் கிடையாது. பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு வந்து மத்தியானம், மத்தியானம் சாப்பிட்டாலும் சரி, அல்லது சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வரச் சொல்லி, வீட்டிலே சாப்பிட்டுப் பார்த்து எங்களுக்கு ஒரு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக பேரவைத் தலைவர் அவர்கள் பல்வேறு வகையிலே முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சரியான சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. ஆகவே அதற்கு ஒரு சரியான முடிவு செய்து கொடுக்க வேண்டும். பார்லிமெண்டிலே நீங்கள் எல்லாம் இருந்து இருக் கிறீர்கள். பார்லிமெண்டிலே போடுகிறார்கள், சாப்பாடு, மெனக் கெட்டுப் போய் அங்கே சாப்பிடலாம். அந்த அளவிற்கு சாப்பாடு சிறப்பான முறையிலே இருக்கிறது. அதுவும் மானியத் திலேதான் கொடுக்கிறார்கள். பாதி ரேட்டில்தான் கொடுக் கிறார்கள். அந்த அளவிற்கு சிறப்பான சாப்பாடு போடுகிறார்கள். அதுமாதிரி செய்யவேண்டும்.

அடுத்து, எம்.எல்.ஏ.க்களுக்கு ஐடென்டிபிகேஷன் கார்டு கொடுத்து இருக்கிறார்கள். அதேபோல் நாங்கள் காரிலே இங்கே வருகிறோம். அதேபோல் காரிலே நாங்கள் போகிறோம். யார் என்று நிறுத்திக் கேட்கிறார்கள். நான் சத்தியமா எம்.எல்.ஏ. என்று சொல்கிறேன். நான் எம்.எல்.ஏ. என்று சொன்னால், நம்பமாட்டார்கள் என்னை. அதுவும் மொட்டை அடித்திருக் கிறேனா (சிரிப்பு) நம்பமாட்டார்கள். நான் இறங்கி, சத்தியமா எம்.எல்.ஏ., விடப்பா என்று சொன்னால்தான் விடுவார்கள். எனவே ஐடென்டிபிகேஷன் கார்டு மாதிரி ஒரு ஸ்லிப்பைக் கொடுத்துவிட்டால், அதை அந்தக் காரிலே ஒட்டிக் கொள்கிறோம். இல்லை என்றால், பிளேட்டைக் கொடுங்கள், அதை முன்னாலே வைத்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே தாங்கள் வாங்கவில்லையா? கார் இல்லாததால், வாங்காமல் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். கார் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை, கொடுக்கவில்லை. எம்.எல்.ஏ. என்று கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எம்.எல்.ஏ.க்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு இருக்கிற அட்டை, அதிலே எம்.எல்.ஏ. என்று போடவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : அந்தப் போலீஸ்காரர்களுக்கு அது தெரியாது. எம்.எல்.ஏ. என்று போட்டால்தான் அவர்கள் நம்புவார்கள். இல்லை என்றால் நம்பமாட்டார்கள். எனவே எம்.எல்,ஏ. என்று போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அட்டையினுடைய மாதிரி காவலர்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 82 உறுப்பினர்கள் அந்த அட்டையை வாங்கியிருக்கிறார்கள்.

திரு. ஆர். சிங்காரம்: என்னிடம் ஒரு கார் இருக்கிறது. [illegible] கொடுத்த கார் இருக்கிறது. எனக்கு யாரும் கொடுக்கவில்லை. ஆகவே அசெம்பளி வரும்போதுதான் கொடுக்கிறார்கள். ஊர்த் தொகுதியிலே உள்ள நிலைமையைச் சொல்கிறேன். தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்கிறபோது வாடகைக்குக் கார் எடுத்துப் போகிறோம், அதிலே ஒட்டிக்கொள்வோம். அதிலே பிக்ஸ் பண்ணிக் கொள்வோம். அந்த மாதிரி, ஐடெண்டிபிகேசன் கார்டு மாதிரி செய்து கொடுக்கவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால், பணி செய்கின்ற காலத்தில் இறந்தால், 50 ஆயிரம் ரூபாய் பணம் தர வேண்டும் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் பேசி, அதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டேன். சென்ற தி.மு.க. ஆட்சியிலே, இங்கே நான்தான் பேசினேன். பேசி, அனுமதியைப் பெற்றுவிட்டேன். தி.மு.க. ஆட்சியைப் பற்றி நாங்கள் எல்லாம் சொல்கிறோம், மாண்புமிகு நாவலர் அவர்கள் தவறாக நினைத்துவிடக்கூடாது. தி.மு.க. பற்றி நாங்கள் எல்லாம் சொல்கிறோம். அது தப்பா ரைட்டா என்பதற்கு ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன். நான் கேட்கும்போது, கலைஞர் அவர்கள் அன்றைக்கு இல்லை. மறுநாள் வந்தார். என்ன சார் நீங்கள் வராமல் போய்விட்டீர்களே என்று சொன்னேன். நீங்கள் இன்றைக்குக்கேளுங்கள், நான்சொல்கிறேன் என்றார். நான் கேட்டேன் அவர்கள் 50ஆயிரம் ரூபாய் சாங்ஷன் பண்ணிவிட்டார்கள். நான் 1 லட்சம் ரூபாய் கேட்டேன் ஏன் தெரியுமா, ஒரு வாரத்திற்கு முன்னால், அந்த



பேரணமல்லூர் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் இறந்துபோய் விட்டார். அதனாலே அந்த எபக்டை அதிலேயிருந்து கொடுத்து, அவருக்கு அந்தப் பலன் கிடைக்கிற அளவிற்கு சாங்ஷன் பண்ணி விட்டார்கள். ஆகவே எதைச் செய்தாலும் சுயலாபத்திற்குச் செய்தார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். இருந்தாலும், நம்மைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால், 50 ஆயிரம் ரூபாய் சாங்ஷன் பண்ணியிருக்கிறார்கள். நான் அன்றைக்கே நன்றி சொல்லிவிட்டேன். இன்றைக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைக்கூட நீங்கள் இனாமாகத் தரவேண்டாம். எங்களிடம் இன்சூரன்ஸ் ஸ்கீம் போல, 25 ரூபாய், 50 ரூபாய் மாதத்திற்குப் பிடித்துக் கொள்ளுங்கள், சம்பளத்திலே பிடித்துக்கொள்ளுங்கள், 2 லட்சம் ரூபாய் சாங்ஷன் பண்ணிக்கொடுங்கள். நீங்கள் நினைக்கலாம், ஏன் இப்படி எல்லாம் கேட்கிறார்கள என்று. நான் இப்போது செத்துப் போய்விட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு). உதாரணத்திற்காக. நான் செத்துப்போய்விட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். என் பெண்டாட்டி, பிள்ளைகளை யார் காபந்து பண்ணுவது? என்னிடம் ஒன்றும் வழியில்லை, சொத்தில்லை, சுகமில்லை, வீடில்லை, வாசலில்லை, ஒன்றும்வசதி கிடையாது. நான் செத்துப் போகிறேன். என் பெண்டாட்டி, பிள்ளையை யார் காபந்து பண்ணுவது? எனக்கு 3 பெண்கள், 1 பையன் இருக்கிறான். யார் காபந்து பண்ணுவது? இந்த கவர்ன் மென்ட் தானே காபந்து பண்ணவேண்டும். இந்த கவர்ன்மென்ட் காபந்து பண்ணுவதற்காக நான் சொல்கிறேன். ஒரு இன்சூரன்ஸ் ஸ்கீம் மாதிரிக் கொண்டு வாருங்கள். மாதாமாதம் சம்பளத்திலே பிடித்துக்கொள்ளுங்கள். சம்பளத்திலே பிடித்துக்கொண்டு, அந்தத் தொகையைக் கொடுங்கள். அந்த அளவிற்கு ஒரு இன்சூரன்ஸ் ஸ்கீம் போல், ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பிக்கேட்டுக்கொள்கிறேன்.

பழைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ் வேண்டும் என்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் பஸ் பாஸ் வழங்க வேண்டும். அவர்களுடைய பென்ஷன் தொகையை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த மரியாதையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 11-25

சேலத்திலே 17 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ், அண்ணா தி.மு.க.-விலே இருக்கிறார்கள். அங்கே ஒரு பாங்கில் ஒரு அதிகாரி இருக்கிறார். நான் அன்றைக்கே சொன்னேன். அந்த அதிகாரி 12 ஆண்டுக்காலம் டிஸ்மிஸ் செய்யப்பட்டவர். டிஸ்மிஸ் செய்யப்பட்ட அந்த அதிகாரியை மீண்டும்

தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்து சேர்த்து. அந்த 12 ஆண்டுக்
காலத்திற்கு அரியர்ஸ் கொடுத்து (குறுக்கீடு) ரூ.6 இலட்சம் பணம்
கொடுத்து, இன்றைக்கு அந்த உத்தியோகத்தில் வைத்திருக்
கிறார்கள். அவர்தான் அதிகாரத்தில் இருக்கிறார். அவர் எப்படி
காங்கிரஸ், அண்ணா தி.மு.க -விற்கு சேவை செய்வார்? ஆக சட்ட
மன்ற உறுப்பினர்கள் பலமுறை சொல்லியும்கூட, எடுபடவில்லை.
இதை தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும்.

திருச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவர் இருக்கிறார்.
அங்கே காங்கிரஸ், அண்ணா தி.மு.க.வினர் சொன்னால் கேட்ப
தில்லை. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், தி. மு. க.
உள்ளே நுழைவதற்கு வழியைச் சொல்கிறேன் நான். அந்த
அதிகாரிகள் மூலமாக உள்ளே நுழைந்து விடுகிறார்கள். **
அதை எல்லாம் தயவுசெய்து நீங்கள் பரிசீலனை செய்து சட்ட
மன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு
பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று இருப்பது அவைக்
குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அது வேண்டாம்.
அதற்கு ஆதாரம், இவைகள் எல்லாம் வரும், அது வேண்டாம்.
மற்றபடி சரி.

திரு. ஆர். சிங்காரம்: மேலும் ஒரு ஹாஸ்டல் செலக்ஷன்
நடந்தது. சென்ற மாதம். நாங்கள் இங்கே உட்கார்ந்து
கொண்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினராக நானிருக்கிறேன்.
இன்னொருவர் தி மு.க. இருக்கிறார். இன்னொரு ஆதி திராவிட
வகுப்பைச்சேர்ந்த தி.மு.க இருக்கிறார். ஆனால் அதிலே அண்ணா
தி.மு.க. இல்லை. ஏன் அண்ணா தி. மு. க. இல்லை என்று
கேட்டால், இல்லை சார் என்கிறார். நான் மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சரிடம் சொன்னேன். தந்தி கொடுத்தோம்.
எல்லாம் சொன்னோம். ஆனால் அவர்கள் அதற்குள்ளே முடித்து
விட்டார்.

இதுபோல் அந்த அதிகாரிகள் இன்னும் சிலபேர் மாற்றப்
படாமல் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தயவு
செய்து நீங்கள் அதையெல்லாம் மாற்றுவதற்கான முயற்சிகள்
மேற்கொள்ளவேண்டும்.

---

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப்பெற்றன.



இங்கே சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், பல
பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே தற்
காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற பணியாளர்கள்
எல்லாம் அவர்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்று நீண்ட பல
வருடங்களாகப் போராடி, ஏற்கெனவே புரட்சித் தலைவர்
அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு ஜி. ஓ. போடப்பட்டு,
அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொண்டார்கள். அதன்படி அப்போதிருந்த சபாநாயகர் அவர்கள்
அவர்களுக்கு வேண்டியவர்களை மட்டும் நிரந்தரம் செய்து
மற்றவர்களை விட்டுவிட்டார்கள். பாவம். இங்கே ஒரு 'ஷார்ட்
மேன்' குள்ளமாக ஒருவர் போய்க் கொண்டிருப்பார். அவர்
காமராஜர் காலத்திலிருந்து தற்காலிகம்தான். அதேபோல்
நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரம்
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தில்லை நடராசர் ஒற்றைக் காலில் நிற்பதைப்போல் காலை
யில் 7 மணிக்கு வந்து இரவில் சட்டமன்றம் முடியும் வரைக்கும்
காவலர்கள் எல்லாம் இங்கே ஒற்றைக்காலில் நின்று கொண்டிருக்
கிறார்கள். 10 மணிக்குப் பேரவைக் கூட்டம் முடிகிற வரையில்
இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 6 தான் படி. அதை
உயர்த்த வேண்டுமென்று சென்ற தி.மு.க, ஆட்சிக்காலத்தில் நான்
தான் பேசினேன். அவர்களுக்கு எல்லாம் ரூ. 12 என்று உயர்த்தி
னார்கள். அறிவித்தார்கள். 'சொன்னதைச் செய்வோம், செய்
வதைத்தான் சொல்வோம்' என்ற சொன்ன தி. மு. க. அந்த
உயர்வை அறிவித்ததோடு சரி, ஆனால் ஏட்டில் இல்லை.
உத்தரவு போடவில்லை. ஆனால் இன்று புரட்சித் தலைவி ஆட்சி
நடத்துகின்ற நேரத்தில் காவலர்களுக்கெல்லாம் நிறைய சம்பளம்
நிரம்ப வசதி வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டு
கருணை கூர்ந்து அவர்களுக்கு ரூ. 20 ஆக உயர்த்திக் கொடுக்க
வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பணி செய்கின்ற பணியாளர்கள் பஸ் பாஸ் வேண்டு
மென்று நீண்ட பல வருடங்களாக முயற்சித்துக் கொண்டிருக்
கிறார்கள். அவர்களுக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் எல்லாம் பணி
யாளர்களானாலும் சரி, காவலர்களானாலும் சரி, காலையில் 7
மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட வேண்டுமென்று சொன்னால்.
6 மணிக்கே புறப்பட்டு வந்தால்தான் வந்துசேர முடியும்.
இரவு 10.00 மணிக்கு முடிந்தால் 11 மணிக்குத்தான்
வீட்டிற்குப் போய் சேரமுடியும். ஆகவே இப்படிப்பட்ட சூழ்
நிலையில் கஷ்டப்படுகிற அந்தப் பணியாளர்களையெல்லாம்
நீங்கள் தயவுசெய்து கவனிக்க வேண்டுமென்று பணிவன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய எதிர்க்கட்சித்தலைவர் இருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவருக்கு கேபினெட் மந்திரி அந்தஸ்து என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நான் பார்க்கிறேன். இவர் என்னை மாதிரிதான் வந்து போய்க்கொண்டிருக்கிறார். ஒரு மந்திரி மாதிரி ஸ்டேடஸ் அவருக்கு வந்த மாதிரி எனக்குத் தெரியவில்லை. அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லையா? அல்லது கவர்ன்மென்ட் அவருக்கு அதைக் கொடுக்கவில்லையா? இது எனக்குத் தெரியவில்லை. ஆக கேபினெட் அந்தஸ்து என்று சொல்லப்பட்ட அந்த அந்தஸ்தை அவருக்குக் கொடுத்தாக வேண்டும். அந்த மரியாதையை அவருக்குக் கொடுத்தாக வேண்டும். இன்றைக்கு எஸ்.ஆர்.பி. என்பதற்காக நான் சொல்ல வில்லை. இன்றைக்கு எஸ்.ஆர்.பி. இருக்கலாம். நாளைக்கு நான் கூட எதிர்க்கட்சித் தலைவராக வரலாம். அல்லது இன்னொருவர் வரலாம். அதைப் பற்றி பிரச்சினை இல்லை. எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கப்படுகின்ற கேபினட் அந்தஸ்தை, முழு மரியாதையை நீங்கள் தரவேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், இதை கேட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களையும் நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்மையெல்லாம் இந்த அளவிற்கு உட்கார வைத்து சுதந்திர மாகப் பேச வைத்த தியாகச் செம்மல், தியாகிகளுடைய நலனுக்காக சில கோரிக்கைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு மத்திய பென்ஷன் வாங்கினால் தமிழகத்திலே யிருந்து ரூ. 100 தான் பென்ஷன் கொடுக்கிறோம்.

முற்பகல் 11.30

மத்திய அரசு பென்ஷன் கொடுக்கிற அதே அளவுக்கு அல்லது தமிழ்நாட்டிலே கொடுக்கிற பென்ஷன் முழுவதையும் வழங்க வேண்டும். அதைப்போல சுமார் 7 ஆயிரம் பேர் பென்ஷன் வாங்க முடியாமல் காத்து இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அவர்களுக்கும் நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இன்னும் பல பிரச்சினைகள் இருந்தாலும் அதையெல் லாம் சொல்வதற்கு நேரம் இல்லை. எல்லாப் பிரச்சினைகளையும் சொல்ல முடியாததனால், ஏனைய பிரச்சினைகளை நான் உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களை பேசச் சொல்லியிருக் கிறேன். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நான் தமாஷாகச் சொல்லவில்லை. ஆந்திர மாநிலத்தில் எல்.எல்.ஏ.க்கள் வாங்குகிற மாத சம்பளம் 4,250. இது 2 வருடத்திற்கு முன்பு. இப்போது 2 ஆயிரம் ஏறி இருக்கும். அவர்கள் போக்குவரத்துப்படி கொடுக்கிறார்கள். தொகுதிப்படி கொடுக்கிறார்கள். இதர படிகள் கொடுக்கிறார்கள். கேரளாவிலே மொத்தபடி ரூ. 400 கொடுக்கிறார்கள். தொலைபேசிப்படி கொடுக்கிறார்கள், மருத்துவப்படி கொடுக்கிறார்கள். அங்கே



சம்பளம் ரூ. 5,050 அதேபோல உத்திரப் பிரதேசத்திலே கொடுக்கிறார்கள். மருத்துவப்படி ரூ. 600 கேஷாகக் கொடுத்து விடுகிறார்கள். மகாராஷ்டிரத்திலே ரூ. 4,350 சம்பளம். இதுவும் 2 ஆண்டுகளுக்கு முன்பு. இப்போது 2 ஆயிரம் ஏறியிருக்கிறது. அப்படி எல்லா சட்டசபைகளிலும் கிட்டதட்ட 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாய் வாங்குகிறார்கள். இந்த அளவுக்கு இருப்பதனாலே எல்லாவற்றையும் கூட்டி கழித்துப் பார்த்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் மாதத்திற்கு எங்களுக்கு கட்டுப்படியாகும் போல் இருக்கிறது. அத்தோடு நான் சொன்ன அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தந்தை பெரியார் அவர்கள் இந்த நேரத்தில் இருந்தால், நான் ஒரு கற்பனையில் ஆழ்ந்து இருக்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் இந்த நேரத்தில் இருந்தால் அவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் ''இந்த வெங்காயங்கள் பாப்பாத்தி பாப்பாத்தி என்று புரட்சித் தலைவி ஜெயலலிதாவை சொன் னார்கள். அந்த அம்மா எல்லோரையும் ஒப்பேத்தி சப்பாத்தி தட்டி மூலையிலே உட்கார வைத்து விட்டார்கள். இந்த புரட்சித் தலைவி ஆட்சி தான் உண்மையான தமிழர் ஆட்சி'' என்று அவர் சொல்லியிருப்பார். அப்படி தந்தை பெரியாரே பாராட்டு கின்ற சூழ்நிலையில் புரட்சித்தலைவி ஆட்சியில் (மேசையை தட்டும் ஒலி) இந்த ஏழை சட்டமன்ற உறுப்பினர்களையும் பாரீர், பாரீர், அள்ளித் தாரீர் தாரீர் என்று கேட்டுக் கொண்டு, இந்தக் காவலர்களையும் இங்கே வேலை செய்கிற பணியாளர்களையும் சட்டமன்றத்திலே ஹாஸ்டலிலே இருக்கிற அத்தனை தாய்மார் களையும், இங்கே தற்காலிகமாக டைப்பிஸ்டாக இருக்கிற அத்தனை பேர்களையும் நிரந்தரம் செய்வதற்கு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே உத்திரவு போடப்பட்டது. அந்த உத்திரவை திரும்ப இட்டு அவர்களையெல்லாம் நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதே நேரத்தில் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் தற்காலிகமாக வேலைக்கு வந்தவர்கள் தற்காலிக மாகவே இருக்கிறார்கள். தி.மு.க. காலத்தில் திடீரென்று பத்து பேரை எடுத்தார்கள். அவர்களெல்லாம் நிரந்தரம் செய்யப் பட்டிருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் நிரந்தரம் செய்யப்பட வில்லை. இந்த அநியாயத்தைப் பார்க்க வேண்டும். களை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு வணக்கத்தை தெரிவித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு

வரப்பட்டிருக்கிற-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர், தலைமை யிடப் பணியாளர்கள், மாநிலச் சட்டமன்றம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நான் இங்கே பேசு வதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் இங்கே என்னென்ன பேச வேண்டுமோ அத்தனையும் ஒட்டு மொத்தமாகப் பேசியதற்குப் பின்னாலும், மீண்டும் அதே கருத்துக் களை வலியுறுத்துகின்ற விதத்திலே கோரிக்கைகளை கோர முற்படுகிறேன். இன்றைக்கு மாவட்டத் தலைநகரிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றத்தை கூட்டுகிறபோது அதைக் கண்டிப்பாக மாதம் ஒரு முறை கூட்ட வேண்டும் என்ற ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படி மாவட்ட வளர்ச்சி மன்றத்தை அவர்கள் கூட்டுகின்றபோது அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் எல்லாம் கூட்டத்திற்குச் சென்று அங்கே எங்களுடைய கோரிக்கைகளைத் தீர்மான மாக வைத்து அந்தத் தீர்மானம் அரசுக்கு அனுப்பப்படுகிறது. அப்படி அனுப்பப்படுகின்ற தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா அல்லது நடவடிக்கைக்கு உட்படவில்லையா என்பதை எங்களுக்கு உடனடியாக இந்த அரசு மூலமாகத் தெரிவித்தால், நாங்கள் கொடுக்கின்ற கோரிக்கைகள் என்ன நிலையிலே இருக்கின்றன என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும். அதே போல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாதம் ஒரு முறையாவது தாலுக்கா தலைமை யிடத்திலே சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அங்கே அதிகாரிகளை வைத்து ஒரு கூட்டம் நடத்துவார் களேயானால், அவர்கள் செய்கின்ற அந்தச் செயல் முறைகள் என்ன, அது மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் அமைந்திருக்கிறதா என்பதை சட்டமன்ற உறுப்பினர்களும் தெரிந்துகொள்கின்ற வகையிலே அமைந்து இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.35

அதே போல அமைச்சர்களுக்குக் கொடுக்கின்ற விண்ணப் பங்கள் அதிகாரிகளுக்கு கொடுக்கின்ற விண்ணப்பங்கள், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா என்பதை அமைச்சர் அவர்கள் கண்காணித்து, அதிகாரிகளிடமிருந்து நாம் கொடுக்கின்ற விண்ணப்பங்களுக்கு பதிலை வரவழைக்கவேண்டும், இன்றைக்கு அன்றாடம் மக்களுடைய தேவை அதிகமாயிருக்கிறது. இன்றைக்குப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே மக்கள் நம்மிடமிருந்து பல்வேறு வகையான காரியங்களை எதிர்பார்க் கிறார்கள். மக்களுடைய பிரச்சினைகளை எல்லாம் விண்ணப்பங் களாக அமைச்சர்களுக்குக் கொடுக்கின்றோம்.



இங்கே நான் சொல்லக் கடமைப்படுவது அமைச்சர்கள் அந்த விண்ணப்பங்களை வாங்கி எங்களுக்கு காரியங்கள் செய்கிறார்களா இல்லையா என்பது எங்களுக்கு முக்கியம் அல்ல.** காரியங்களை செய்து கொடுத்ததாக நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** பல சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற கோரிக்கைகள் அனைத்தையும் அமைச்சர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை சட்டமன்றத்திலே இருக் கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். ஆகவே அவர் சொன்னதை குறிப்பேட்டிலிருந்து எடுக்க வேண்டும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் இதிலே வராது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசும்போது பேசுங்கள். நேரம் இல்லை. திரு. வி. பி. சந்திரசேகர் சுருக்க மாக முடியுங்கள்.

திரு. வி. பி. சந்திரசேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். **அமைச்சர்கள் எங்களிடம் சிரித்த முகத்தோடு விண்ணப்பத்தை@ வாங்கவேண்டு மென்று வேண்டுகோள் விடுக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் அமைச்சருடைய பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம், அந்தரிமார்க்கோடு முடியுங்கள்.

திரு. வி. பி. சந்திரசேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே நாங்கள் கொடுக்கின்ற விண்ணப்பங்களுக்கு அமைச்சர்கள் காரியங்கள் செய்கிறார்களா இல்லையா என்பதை அதிகாரிகள் மூலமாக எங்களுக்குப் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

கொள்கிறேன். இன்றைக்கு நகராட்சியிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று அறைகள் ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்கும்கூட என்னுடைய பொள்ளாச்சி நகராட்சியிலே சட்டமன்ற உறுப்பினருடைய அறை என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே செல்கின்றபோது, அங்கே இருக்கின்ற தொலைபேசியை நாங்கள் உபயோகிக்க அவர்கள் மறுக்கிறார்கள். அதற்குக்காரணம் இதற்கு முன்னால் இருந்த அரசு ஒரு அரசு ஆணையைப் பிறப்பித்து இருக்கிறது. அறையை உபயோகப்படுத்துகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே தொலைபேசியை உபயோகிக்கக் கூடாது என்ற ஒரு ஆணையைப் பிறப்பித்து இருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

இன்றைக்கு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் தொலை பேசிக் கட்டணம் எவ்வளவு அதிகமாக இருக்கிறது; அதலால் எவ்வளவு சிரமமாக இருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். நான் உங்கள் மூலம் அரசுக்குச் சொல்லிக்கொள்ளுவது எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நிலையிலே தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நகராட்சியின் அறைகளிலே சென்று அமர்கின்ற போது முழுக்க முழுக்க அவர்கள் மக்களின் பணிகளை ஆற்றுவதற்காகத்தான் அங்கே செல்கிறார்களே ஒழிய வேறல்ல. அப்படிப்பட்ட நிலையிலே அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தொலைபேசி வசதிக்கு ஏற்பாடு செய்து மக்கள் குறைகளைக் கேட்பதற்கு அந்த தொலைபேசியைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நகராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் போக்குவரத்திற்காக ஜீப்கள், கார்கள் போன்றவற்றை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குறைந்தது ஒரு வாரத்தில் 2 நாட்களுக்காவது அந்த ஜீப்பை பயன்படுத்திக் கொள்ள அனுமதி தர வேண்டும். அப்படிப் பயன்படுத்துவதற்கு 2 நாட்கள் நகர சபையிலிருந்தும், 2 நாட்கள் பஞ்சாயத்து யூனியனிலிருந்தும் அந்த வாகனங்களைக் கொடுப்பார்களானால் மக்கள் பணி ஆற்றுவதற்கு எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது மிகவும் வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு அமைச்சர்களிடம் கொடுக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு பதில் வேண்டும் என்று கேட்டேன். கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு பக்கத்து மாநிலமாக இருக்கின்ற கேரளாவில் ஒரு போக்குவரத்து விபத்தின் காரணமாக மரணம் ஏற்பட்டு விட்டது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்னிடம் வந்து அதுபற்றிச் சொன்னார்கள். நான் இங்கே இருந்து கேரளாவில் இருக்கின்ற



போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அந்தக் குடும்பம் இந்த நிலையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தக் குடும்பத்திற்கு நீங்கள் உதவ வேண்டுமென்று நான் கேட்டு அனுப்பிய கடிதத்திற்கு 20 நாட்களுக்குள்ளாக எனக்கு கேரள அரசிடமிருந்து, அந்த அமைச்சரிடமிருந்து பதில் வந்தது. அப்படி கேரளாவில் அமைந்து இருப்பதைப் போல இங்கே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களும் எங்களுக்கு அந்த பதில்களைத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகப்படியான சம்பளம் வேண்டும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே பொது வாழ்வில் ஈடுபடக்கூடியவர்கள் தங்களுடைய தொழிலை விட்டுவிட்டு சட்டமன்ற உறுப்பினர்களாக வருவதற்கு போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினர்களாக ஆன பிறகு பின்னால் முழுக்க முழுக்க அவர்களுடைய கவனம், செயல், அத்தனையும் மக்களுக்கு நன்மை செய்கின்ற காரணமாக இருப்பதன் காரணமாக அவர்கள் எந்தத் தொழிலும் செய்ய முடியாத நிலையில் இங்கே கொடுக்கப்படுகின்ற சம்பளம் 2,500 ரூபாயை வைத்துக்கொண்டு அவர்களுடைய குடும்பத்தையும் கவனிக்க முடியாமல் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள், ஆகவே, இன்றைக்கு மற்ற மாநிலங்களை எடுத்துக் கொண்டால் ஆந்திரபிரதேசத்தில் 4,250 ரூபாய் கொடுக்கிறார்கள்; கர்நாடகாவில்3.000 ரூபாய் கொடுக்கிறார்கள்; உத்திரப்பிரதேசத்தில் 4.000 ரூபாய் கொடுக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் [illegible],050 ரூபாய் கொடுக்கிறார்கள்; அரியானாவில் 4,000 ரூபாய் கொடுக்கிறார்கள்; ராஜஸ்தானில் 5,750 ரூபாய் கொடுக்கிறார்கள். இது எல்லாம் 2 வருடத்திற்கு முன்பாக கொடுக்கப்பட்ட சம்பளத் தொகை. ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பளத்தை ஏற்றிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல் எங்களுடைய விடுதியைப் பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு சில நிமிடங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றக் கூட்டம் தொடங்குகிற நாட்களிலே வெளியூர்களிலிருந்து வருகின்றபோது முன்பு எல்லாம் எங்களுக்கு ரயில்வே ஸ்டேஷனுக்கு பஸ்களை அனுப்பிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் இந்த 3 மாத காலத்தில் அப்படிப்பட்ட பஸ்களை எங்களுக்கு இரயில்வே ஸ்டேஷன்களுக்கு அனுப்புவது கிடையாது. அதேபோல் கவர்னருடைய பார்ட்டிக்குச் செல்கின்ற போதும், திரும்பி வருகின்ற போதும் அப்படிப்பட்ட பஸ் வசதியை செய்து கொடுப்பதில்லை. ஆகவே நீண்ட தூரத்தில்

இருக்கிற கவர்னர் மாளிகைக்குச் செல்லுகின்ற போதும் திரும்பி
வருகின்ற போதும் எங்களுக்கு பல இடையூறுகள் ஏற்படுகின்றன
என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எங்களுக்கு அப்படிப்
பட்ட பஸ் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[முற்பகல் 11.45]

அதேபோல இன்றைக்கு இருக்கின்ற நாகரிகச் சூழ்நிலைகளில்
ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் செய்திகளைத் தெரிந்து
கொள்வதற்காக, குறைந்தது கருப்பு வெள்ளை தொலைக்காட்சி
பெட்டியை அதுவும் இன்றைக்கு குறைந்த விலையில்தான்
இருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய அறையிலும்
வாங்கி வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் செய்திகளைத்
தெரிந்து கொள்வதற்கு உதவவேண்டுமென்று இந்த நேரத்திலே
நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைவிட ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால்,—
அதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே
கூடத்தெரிவித்து இருக்கிறேன் — எங்களுடைய விடுதியிலே
இன்றைக்கு எலித்தொல்லை அதிகமாக இருந்து கொண்டிருக்
கிறது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக என்னையும்கூட ஒரு எலி
கடித்து விட்டது. என்னுடைய பக்கத்து அறையிலே இருக்கின்ற
டாக்டர் ஸ்ரீதரன் அவர்களிடம் இதை நான் கூறி, இதற்கு என்ன
வைத்தியம் என்று கேட்கின்றபோது, அவர், வெறிநாய்க்கடிக்கு
போடுகின்ற ஊசியைத்தான் போடவேண்டுமென்று சொன்னார்
கள். எனக்கு உண்மையிலேயே பயமாக இருக்கிறது. நான் ஆளை
வைத்து அந்த எலியை அடிக்கின்றபோது, அதுபுதுவிதமான எலி
யாக இருக்கிறது. அதனுடைய தலைப்பாகம் சிவப்பாகவும், வால்
பாகம் கருப்பாகவும் இருந்தது. அதை 'விசை எலி' என்று சொல்
கிறார்கள். இன்றைக்கு நம்முடைய சட்டமன்ற விடுதியிலே முன்
வழியாக வரமுடியாத அந்த எலிகள், ஜன்னல்கள் வழியாக
வருகின்றன. அப்படிப்பட்ட எலிகளிலிருந்து எங்களைக் காப்
பாற்றுவதற்காக எங்களுடைய அறையிலே இருக்கின்ற ஜன்னல்
களுக்கு வலைகள் அடித்துக்கொடுக்கவேண்டுமாய் இங்கே பணி
வன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நாங்கள் அங்கே குடிக்கின்ற நீர்—
இதை சொல்வதற்கே கஷ்டமாக இருக்கிறது.
குப்பைக் கூளங்களோடு அசுத்தமாக வருவ
நாங்கள் பார்க்கிறோம். இதை அங்கேயிருக்கிற அதிகாரிகளுக்
தெரிவித்ததற்குப் பின்னால், நேற்று இரவு தண்ணீர் வருகின்
பைப்புகளிலே ஒரு பில்டரை மாட்டி இருக்கின்றார்கள். இ
எதற்கு என்று கேட்டால் தொட்டியிலே அசுத்தமாக இருக்கிற
என்று சொல்கிறார்கள். அந்தத் தொட்டியைச் சுத்தம் செ
யுங்கள் என்று சொன்னால், அந்த அசுத்த நீர் வருகின்றபோ



அதை வடிப்பதற்கு அந்த பில்டரை மாட்டிக் கொடுத்து இருக்கின்றார்கள். ஆகவே, அந்தத் தொட்டியைச் சுத்தம் செய்து எங்களுக்கு நல்ல குடிநீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சட்டமன்ற விடுதியிலே 10, 20 ஆண்டுகளாகப்பணியாற்றுகின்ற பெண்கள், இன்றைக்கு பெண் முதல் அமைச்சர் அவர்கள் வீற்றிருக்கின்ற நேரத்திலே வேலைநிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே பல்வேறு விதமான கோரிக்கைகள் எங்கள் மத்தியிலே இருந்தாலும்கூட இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கோரிக்கைகளையும் பகிர்ந்துகொண்டு, ஒவ்வொருவரும் இதை வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நினைவுபடுத்தி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ** என்று கூறியிருக்கிற கருத்து பத்திரிகைகளிலே வருகிறபோது தவறுதலாக வரும். அப்படி இருப்பது நல்லது அல்ல. நாங்கள் கொடுக்கின்ற பெட்டிஷன்களை சிரித்துக் கொண்டே வாங்குங்கள் என்று மட்டும் ஒரு வேண்டுகோள் போல் அது இருக்கட்டும். எனவே அவ்வாறு பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இது குறித்து ஏற்கெனவே டிஸ்கஷனுக்கு வந்து விட்டது; அதனால்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சிரித்துக் கொண்டிருக்கிறபோது கொண்டு வந்து கொடுத்து விட்டால் இந்தப் பிரச்சினையே வராது. (சிரிப்பு) மூன்று மணிக்குப் பின்னாலே கொண்டுவந்து கொடுத்தால் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவே அவர் சொன்னபடி வந்த வாசகம் இல்லாமல், சிரித்துக்கொண்டே வாங்குங்கள் என்று வேண்டுக்கோள்போல இருப்பதாக அது அவைக்குறிப்பில் மாற்றப்படுகிறது. திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 11-50

*திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தேர்தல்கள்'' என்கிற மானியத்தில், குறிப்பாக மாநகராட்சிப்பகுதிகளில் ஆள் மாறாட்டம் செய்து தவறான வாக்குப் பதிவு நடப்பதனால் அடையாளச் சீட்டு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் கள்ள வாக்குகள் போடுவதைத் தவிர்ப்பதற்கு இம்முயற்சியினை அரசு முதல் கட்டமாக மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதான் தேர்தல்கள் நேர்மையாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, பரிசுச் சீட்டுத் திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்தினாலும் கூட, அதனால் எதிர்பார்த்த வருவாய் கிடைக்கவில்லை. அப்பொழுதே மூதறிஞர் இராஜாஜி அவர்கள், அரசே பரிசுச் சீட்டுத் திட்டத்தை நடத்துவது தவறு, வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள், அதன் மூலம் வருகிற நிதியைச் சீரணி செய்கின்ற வேலைகளுக்கும், குடிநீர்த் திட்டங்களுக்கும், தாழ்த்தப்பட்டோர் நலனுக்கும் என்று தனி ஒதுக்கீடாக வைக்கலாம், சமுதாயத்திற்கு அது நன்மை பயக்கும் என்று பதில் சொன்னார்.

ஆனால் இங்கே ஆய்வுரையைப் பார்க்கிறபொழுது, அறிஞர் அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்திய 1968-ஆம் ஆண்டிலிருந்து 1989-90-ஆம் ஆண்டு வரை சுமார் 21 ஆண்டுகள் வெறும் 47.35 கோடி ரூபாய்தான் நிகர வருவாய் கிடைத்திருக்கிறது. "சுண்டைக்காய் கால் பணம், சுமைக் கூலி முக்கால் பணம்" என்று சொல்வார்களே, அதைப் போல எதிர்பார்த்த பலனை இது தரவில்லை.

மேலும், பரிசுச் சீட்டுக்கு அரசு அங்கீகாரம் இருக்கிறது என்கிற தவறான கருத்தை நாட்டு மக்களிடையே அது பரப்புகிறது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஒப்ப பல மாநில அரசுகளின் பரிசுச் சீட்டும் தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்களைச் சுரண்டுகிறது. ஆகவே, அறவே பரிசுச் சீட்டுத் திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என்றும், வெளி மாநில அரசுகளின் பரிசுச் சீட்டுகள் இங்கே வருவதை, அதன் மூலம் சட்டப்படி தடுக்க முடியுமா என்றும் அரசு பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தாயகத்திற்கு வருகிற இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில் சுமார் 1,72,000 பேர் இன்னும் வர வேண்டியிருக்கிறது. இலங்கையிலிருந்து சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தின்படி அவர்கள் தாயகம் திரும்ப வேண்டியுள்ளது. அவர்கள் இன்னும் இலங்கையிலே இருக்கின்றார்கள். ஏற்கனவே, இந்திய அரசு ஒரு கொள்கை நிலையை எடுத்தது. அங்கே உள்ள இனக் கலவரத்தினால் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கின்ற அகதிகள் இலங்கைக்குத் திரும்பிப் போகிறவரை நாம் சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தின்படி தாயகம் திரும்ப வர வேண்டியோரை எடுக்க



முடியாது என்று இந்திய அரசு அறிவித்தது. அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதையும், அதைத் தொடர்ந்து இந்த அரசு இந்திய அரசை வற்புறுத்துகிறதா என்பதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

இங்கே அகதிகளாக வந்தவர்களையும், தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களையும் அந்தமான்-நிகோபார் பகுதியில் குடியமர்த்துவது இல்லை. இந்திய அரசு வேண்டுமென்றே அந்தமான்-நிகோபார் தீவுகளில் தமிழர்கள் அதிகப் பெரும்பான்மை வந்து விடக் கூடாது என்று திட்டமிட்டுச் செய்வதாக ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே, மலையகத் தோட்டத் தொழிலாளர்களாகப் பணியாற்றி அனுபவம் பெற்ற அவர்களை அந்தமான்-நிகோபார் தீவுகளில் குடியமர்த்துவதில் இந்திய அரசு தயக்கம் காட்டுவதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஒன்றினை இந்த அரசு அமைக்கிறது. சுமார் ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் அந்தப் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைய இருக்கிறது. இந்த நேரத்தில் இந்திய அரசும், "தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிதி வளர்ச்சிக் கழகம்" (National Backward Classes Finance and Development Corporation) என்று ஒன்றை அமைக்க இருக்கின்றார்கள். அதற்கான உத்தரவு நேற்றையதினம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 500 கோடி ரூபாய் அதனுடைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம். 100 கோடி ரூபாயை தற்பொழுது முதல் கட்டமாக அதில் முதலீடு போட்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் கழகத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருடைய நலனுக்கு அரசின் மூலம் இப்பொழுது என்னென்ன பணிகள் ஆற்றப்படுகின்றனவோ அவற்றை இந்தப் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஆற்றுகிறபொழுது அரசுக்கும் நிதிச் சுமை குறையும். அந்த வகையில் அதைப் பயன்படுத்திக் கொள்ள அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

மாநில சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே கருத்தோடு இருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைத் தவிர, வாக்கெடுப்பு நடத்தினால், எல்லோரும் ஒருமுகமாக இருந்தேகூட, வாக்களித்து விடுவார்களோ என்கிற அளவுக்கு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் ஆமோதித்த கருத்தோடு இருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்
காட்டியதைப் போல, ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்பு
கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதோ
தங்களுடைய நிதி ஆதாயத்திற்காக சம்பளத்தையும், மற்ற
வற்றையும் கூட்டிக் கேட்கிறார்கள் என்று கருதக்கூடாது,
நேர்மையாக அவர்கள், தேர்ந்தெடுத்த மக்களுக்குத் தொண்
டாற்றுகிற வகையில், எல்லா வழிவகைகளையும் அரசு மேற்
கொள்வது நல்லது. நல்லவர்களாக வருகிறவர்கள், நல்லவர்
களாகவே தொடர்ந்து இருப்பதற்கு வழிவகைகளை அரசு மேற்
கொள்ள வேண்டும். குறிப்பாக, ஒரு தொகுதியில் சட்டமன்ற
உறுப்பினருக்கென்று ஒரு கட்டிடம்; அதிலே ஒரு தொலைபேசி;
இவையெல்லாம் அரசின் செலவிலே இருக்கிறபோது, அந்தச் சுமை
குறைகிறது. சட்டமன்ற உறுப்பினரைப் பார்க்க வருகின்ற
தொகுதி மக்களுக்கும் அதிலே வசதி ஏற்படுகிறது. அந்தக்
கட்டிடமும் அரசாங்கத்தின் சொத்தாக இருக்கிறது. ஆகை
யினாலே, இந்த யோசனையை அரசு பரிசீலிக்க வேண்டும். மேலும்
இங்கே மற்ற வசதிகளெல்லாம் கேட்கப்பட்டன. அண்டை நாடான
சுமார் 1½ கோடி மக்களைக் கொண்ட இலங்கை அரசாங்கத்திலே
கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கார் தருகிறார்கள்.
கார் டிரைவர் தருகிறார்கள். அதேபோல் ஒரு 'பெர்சனல்
செக்ரட்டிரி' தருகிறார்கள். அதற்குப்பிறகு, 'டிராவலிங்அலவன்ஸ்'
தருகிறார்கள். ஏனென்றால். ஜனநாயகத்திலே வருகிற பிரதி
நிதிகள், சாதாரண குடும்பத்திலே இருந்து வருகிறவர்கள், மற்ற
வர்களின் கையை எதிர்பார்த்து காரியம் ஆற்ற வேண்டும் என்ற
நிலைமை வரக்கூடாது; பணக்காரர்களுக்கு அவர்கள் அடிமையாகி
விடக்கூடாது என்கிற காரணத்தினாலே அவையெல்லாம் அங்கே
தரப்படுகின்றன. கார் தரமுடியாவிட்டாலுங்கூட, கார் டிரைவர்
தரமுடியாவிட்டாலுங்கூட, அவர்களுக்கு உதவியாளர் ஒருவர்
நிச்சயமாகத் தேவை. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்
காட்டியதைப் போல, அவர்கள் தொண்டாற்றுவதற்கு,
தொகுதியில் பணியாற்றுவதற்கு, யாரையும் எதிர்பார்க்காமல்
காரியங்கள் ஆற்றுதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவது
நிச்சயமாகத் தவறாகாது என்று அவை முன்னவர் அவர்களுக்கு
நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர்களுக்கு மனுக்கள் தருகிறபோது, எல்லா
மனுக்களுக்கும் அவர்கள் பதில்கள் அனுப்புவது கடினமாக இருக்க
லாம். ஆனால், சில மனுக்கள் அவசரக் காரியமாக, முறையீடாக
வரலாம். அதாவது அரசாங்க இயந்திரத்தின் மூலமாக தவறுகள்
இழைக்கப்படுகிறபோது, அநீதிகள் இழைக்கப்படுகிறபோது, அதை
எதிர்த்து முறையீடு செய்வார்கள். அதை சட்டமன்ற உறுப்பினர்
கள் அனுப்புகிறபோது, அதற்கான பதில் கிடைத்தால், மிகப்பெரிய
ஆறுதலாக இருக்கும். நான் சொல்வது 'ஃபேவரிடிஸம்' அல்ல;
'இன்ஜஸ்டிஸ்'. சலுகை கேட்டு மனு கொடுத்தால். அது தவறு;
அது தேவையில்லை. ஆனால், ஒரு அநீதி இழைக்கப்படுகிறபோது





அதை சட்டமன்ற உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறபோது, அதைச் செப்பனிட்டு அதற்கான பதில் கொடுக்கிற
போது, அந்த ஆறுதல் கிடைக்கிறது. அதோடு மட்டுமல்ல; சட்ட
மன்ற உறுப்பினர்கள் அடிக்கடி வந்து அமைச்சர்களைப் பார்க்க
வேண்டிய, தொல்லை தர வேண்டிய அவசியம் அதன் மூலம்
குறைகிறது. ஆகையினால், மனுக்கள் பலவாக வரலாம்; எந்த
மனுக்கள் நீதிகேட்டு, முறைகேட்டு வருகிறதோ, அந்த மனுக்களை
எடுத்துப்பார்த்து, அரசின் மூலம் அதற்கு பரிகாரம் கண்டு,
அவற்றிற்கான பதிலை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பு
வதற்கு அரசு உரிய உடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இந்த சட்ட மாமன்றத்தைப் பொறுத்தவரையில்
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த அடிப்படையிலே
ஒரே கருத்தோடு இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு நிதி
யமைச்சர் அவர்கள் நல்ல முடிவை அறிவிப்பார் என்று எதிர்
பார்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என்
பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு சட்டப்பேரவையின்
அரும்பெரும் தலைவர், துணைப் பேரவைத் தலைவர் அவர்களே,

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் துணைத்
தலைவர் என்று அழைத்தாலே போதும்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கடந்த 1990 ஆம் ஆண்டில் 25
மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிற
சலுகைகளின் அடிப்படையில், இந்தப் புத்தகத்தின் வாயிலாக
நான் ஒரு கணக்கு எடுத்து வைத்திருக்கிறேன். அந்தக் கணக்கை
நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரிடையாகச் சமர்ப்
பிக்கின்றேன். மற்ற மாநிலங்களில் கொடுக்கப்படுகின்ற சம்பள
விகிதாச்சாரத்தின் அடிப்படையில் எங்களுக்கு அனைத்துச்
சலுகைகளை அளிக்க வேண்டுமென்று சக சட்டமன்ற உறுப்பினர்
களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

''எனதருமை தமிழக எழில் மிக்க மக்களே;

நாற்றம் எடுத்த சமுதாயத்தில் நறுமணம்
கமழ்விக்க ஓடி வாருங்கள்''

என்று நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும்
காவேரியின் ததாநாயகன் திரு. வாழப்பாடியார் அவர்களும்
அழைத்த பொழுது மக்கள் அதற்குச் செவிசாய்த்து, புரட்சிம்

தலைவி அவர்களை அரியணையில் அமரச் செய்தார்கள். நமது முதல்வர் நீண்ட ஆயுளையும் நிரம்பப் புகழையும் பெற்று, ஆண்டுகள் பல நீண்டு வாழ்ந்து மக்களுக்கும், எங்களுக்கும் பல நல்ல காரியங்களைச் செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கிறேன்.

அன்புள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு, எதையும் உடனுக்குடன் சட்டமன்றத்தில் தெரிவிப்பது போல் இதையும் உடன் தெரிவிக்க வேண்டுமாய் சக உறுப்பினர்கள் சார்பாக மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, என் தொகுதியில் எனக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் கடந்த 20 ஆண்டு களாகப் பகையாக உள்ளது. நான் ஒரு பரம்பரை காங்கிரஸ்காரன். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுதாபி. புரட்சித் தலைவர் பிரிந்த பின்னர் என் ஊரில் கொடி'ஏற்ற வந்த தொண்டர்கள் தாக்கப்பட்டு விரட்டப் பட்டனர். நான் சென்று அந்தக் கொடியை அன்று ஏற்றி வைத்தேன். எனக்கு அரசியல் நோய் ஏற்பட்டால் அ.தி.மு.க. என்ற குளுக்கோஸ்தான் ஏற்றப்படும் என்பதை இந்தச் சட்டப் மன்றப்பேரவையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணத் திற்கு என்னுடைய காரில் அ.தி.மு.க. காங்கிரஸ் ஆகிய இரண்டு கொடிகள் தான் பறந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் வேண்டு மானாலும் இப்போது அதைப் பார்த்துக் கொள்ளலாம். என் ஊரில் உள்ள முன்னாள் தி.மு.க.மந்திரி மீது 1983ல் கும்பகோணம் கூட்டுறவு வங்கியில் 10 இலட்சம் களவாடியதாக வழக்குப் போடப் பட்டது. அதில் அனைத்துச் சாட்சிகளும் விசாரிக்கப்பட்டு, ஆர்க்யூமெண்ட், முடிந்து ஜட்ஜ்மெண்ட் என்ற நிலை இருந்த நேரத்தில் தி.மு.க. ஆட்சி வந்த பின்னர் வழக்கை அரசு வாபஸ் வாங்கிக்கொண்டது. அதனுடன் சம்பந்தப்பட்ட கோ.சி.மணிமீது நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள் கிறேன். 1971-லே கருணாநிதி வளைவு உடைக்கப்பட்டபோது வழக்குப் பதிவு' செய்யப்பட்டது. 1972-லே தி.மு.க. வைச் சேர்ந்த ஒருவரை காலை 10 மணிக்கு கடை வீதியிலே கை கால்களை வெட்டியதாக இ.பி.கோ. 307-வது பிரிவின்கீழ் வழக்கு என் மீது போடப்பட்டது. மாண்புமிகு நம்முடைய இராஜிவ்காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது முன்னாள் தி.மு.க. மந்திரி மணி வீடு காலை 4 மணிக்கும் இரவு 10 மணிக்கும் நொறுக்கப்பட்டதாகவும் ரூ. 2 இலட்சம் சேதம் என்று என்னுடைய மகன்கள் மீதும், தொண்டர்கள் மீதும் வழக்குத் தொடரப் பட்டது. இதுபோன்ற சூழ்நிலைகள் உள்ளதால் எனக்கு உடன் பாதுகாப்புக் கருதி ஒரு கைத்துப்பாக்கி வழங்க வேண்டுமென்று அம்மையார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று



நம்முடைய சக உறுப்பினர்களுக்கும் கைத்துப்பாக்கியோ, அம்மையார் அவர்கள் ஆசைப்பட்டால் ஏ. கே. 47 கொடுத்தால் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராஜிவ் காந்தி கொலையுண்டபோது தொண்டர்கள் மீது போடப்பட்ட வழக்குகளைத் தள்ளுபடி செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் வேட்பாளராக அறிமுகம் செய்யப்படும் முன்னரே எனது தொகுதி திருவிடைமருதூர் வந்த போது தாங்கள் வேட்பாளரை அறிவிக்கும் முன்னரே மேடைக்கு வர மறுத்தீர்கள். நான் தங்களை மேடைக்கு வரவேண்டும் என்று அழைத்த பொழுது எனது அழைப்பை ஏற்று மேடையில் தாங்கள் பேசிய காட்சி நான் சாகும்வரை எனது மனதை விட்டு நீங்காது. (கரவொலி).

மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பொதி சுமக்கும் கழுதையாக இருப்போம் எனக் கூறினார்கள். நாங்கள் கழுதையாக இருக்க விரும்பவில்லை. காரணம் கழுதை முன்னால் சென்றால் கடிக்கும்; பின்னால் சென்றால் உதைக்கும்; ஆகவே, நாங்கள் இந்த அரசுக்கு கோட்டை. அரண்களாக, ஏ. கே. 47 ஏந்திய சிவப்புச் சிங்கங்களாக இந்த அரசைக் காப்போம் எனச் சூளுரைக்கிறேன். (கரவொலி).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நம்முடைய அமைச்சர் பெருமகனார் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கின்ற நல்ல முறையான காரியங்களை உடனுக்குடன் போர்க்கால அடிப்படையில் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொகுதி மக்களின் நன்மை கருதி தேவையான பணிமாற்றம், பணி மாறுதல், தொழில் துறை கடன்கள் ஆகியவற்றைச் செய்து சட்டமன்ற உறுப்பினர் களின் கௌரவத்தைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

பிற்பகல் 12.05

நமது முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சொல்கின்ற உத்வேகத்தின் அடிப்படையில் தலைமையிடப் பணியாளர்கள், வெற்றி பெறுகின்ற போர்க்கால அடிப்படையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் காலங்களில் வாக்குச் சாவடிகளில் மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக மிக அருகிலேயே சாவடிகளை அமைத்து பாதுகாப்பினை அதிகரித்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒய்வூதியங்களை ஓரளவுக்கு நல்ல முறையில் குடும்பம் நடத்துகிற அளவுக்கு வழங்கவேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். அரசு மூலதனச் செலவுகளை செய்யும்போது மாநில அரசு வழங்கும்

[திரு. என்.பன்னீர்செல்வம்] [1991 செப்டம்பர் 27]

கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகியவற்றை வழங்கும்போது
அவை மக்களுக்குச் சரியாகச் சென்றடைகிறதா என்பதைக் கண்
காணிக்க தனி அதிகாரம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).

நாட்டுக்காக மிகவும் உழைக்கிற எங்களுக்கு, தாய், தந்தை,
மனைவி, குழந்தைகள் ஆகியோரை மறந்து உங்களையே நம்பி
வந்திருக்கும் எங்களுக்கு கீழ்க்கண்ட கோரிக்கைகளைப் போர்க்
கால அடிப்படையில் செய்து தரவேண்டும் என்று தங்களைக்
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி, வணங்கி வேண்டி விரும்பிக் கேட்டுக்
கொள்கிறேன்.

தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இங்கே சம்பளம்
மட்டும் ரூபாய் ஆயிரம் அளிக்கப்படுகிறது. ஆனால் மேகாலயா
வில் உறுப்பினர்களுக்கு மாதம் 2,000 ரூபாய் அளிக்கப்பட்டு
கிறது. தினப்படி இங்கே 100 ரூபாய்தான் அளிக்கப்படுகிறது.
ஆனால் மேகாலயாவில் 150 ரூபாய் வழங்கப்படுகிறது. இரயில்
பயணப்படியாக இங்கே ஒரு முதல் வகுப்பு டிக்கட் மட்டும்தான்
கொடுக்கப்படுகிறது. ஆனால் கர்நாடகா மாநிலத்தில்
போவதற்கு இரண்டும், வருவதற்கு இரண்டுமாக 4 கொடுக்கப்
படுகிறது. இங்கே பயணப்படியாக அதாவது சாலைப் பயணத்
திற்காக கிலோ மீட்டருக்கு 12 காசுதான் கொடுக்கப்படுகிறது.
ஆனால் பீகாரில் சாலைப் பயணத்திற்காக கிலோ மீட்டருக்கு
200 காசுகள் வீதம் கொடுக்கப்படுகின்றன. 12 காசு எங்கே,
200 காசு எங்கே?

தமிழகம் 25 மாநிலங்களிலே மிகவும் பெருமை வாய்ந்த
மாநிலமாக அம்மையார் அவர்கள் காலத்தில் ஆக வேண்டும்
என்று நினைக்கிறோம் நாம். ஆனால் அவர்களுடைய பிள்ளை
களாகிய சட்டமன்ற உறுப்பினர்கள் 12 காசுகளை வாங்கிக்
கொண்டு வேலை செய்தால் அவர்கள் எப்படி முன்னுக்கு வர
முடியும். மீண்டும் அவர்கள் எப்படி சட்டமன்ற உறுப்பினர்
களாக வர முடியும் என்பதை நீங்கள் எல்லாம் தெரிந்துகொள்ள
வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் நம்மை ஏதாவது
செய்யவேண்டுமென்ற அடிப்படையைச் செய்து கொண்டிருக்
கிறார்கள். அம்மையார் அவர்களிடத்திலே ஒன்று சொல்ல
ஆசைப்படுகிறேன். மகாபாரதத்தில் ஒன்று சொன்னார்கள்.
பீமனும் துரியோதனனும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிற
நேரத்திலே பீமன் அடித்து நொறுக்கும்போது அவன் எழுந்து,
எழுந்து வந்து சண்டை போடுவான். அப்போது ஒரு
ஆலோசனை கூறுவார் கிருஷ்ணர். உடனே பீமன் என்ன
செய்வான்? அவனை இரண்டாகக் கிழித்து தலைப்பு மாற்றிப்



[திரு. என். பன்னீர்செல்வம்] [1991 செப்டம்பர் 27[

போட்டுவிடுவார். தலைப்பு மாற்றிப் போட்ட பிறகு அவன்
எழுந்து வரவே மாட்டான். ஆக, இப்போது அவர்கள் அடிக்கடி
மீண்டும் மீண்டும் திருப்பியும் வராமல் இருக்க வேண்டுமானால்
அம்மையார் அவர்கள், அவர்களை இரண்டாகக் கிழித்து
தலைப்பு மாற்றிப் போடும்படி தான் உங்கள் சார்பிலே கேட்டுக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதர படிகள் இங்கே ரூ. 800 வழங்கப்படுகிறது. ஆனால்
மிசோரம் மாநிலத்தில் 2,500 ரூபாய் வழங்கப்படுகிறது. இரயில்
பயண வசதிக்காக ஆண்டுக்கு 7,000 ரூபாய் இரண்டு தவணைகளில்
கொடுக்கப்படுகிறது. ஆனால் உத்திரப்பிரதேச மாநிலத்தில் 38,000
ரூபாய்க்குக் கூப்பனும், ராஜஸ்தானில் ரூபாய் 20,000-மும்
கொடுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொலைபேசி
வசதிக்காக இங்கே மாதம் 700 ரூபாய் கொடுக்கப்படுகிறது
ஆனால் ஹரியானா மாநிலத்தில் ரூபாய் ஆயிரமும் மத்தியப் பிர
தேச மாநிலத்தில் ரூபாய் 1,200-ம் வழங்கப்படுகிறது.

இங்கே அஞ்சல் வசதி என்பதற்காக காசே கொடுக்கப்படு
வதில்லை, ஆனால் ராஜஸ்தானில் ரூபாய் 500 கொடுக்கப்படுகிறது.
இங்கே உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அறை
மட்டும் தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆந்திரா, அருணாச்சல
பிரதேச மாநிலத்தில் வீடுகள் கொடுக்கப்படுகின்றன. ராஜஸ்தானில்
வீட்டு வாடகைப்படியாக மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கப்படுகிறது
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இங்கே தனியாக உதவியாளர்கள்
கிடையாது. ஆனால் மஹாராஷ்டிரா, ஜம்மு காஷ்மீர் போன்ற
மாநிலங்களில் ரூபாய் ஆயிரம் சம்பளத்தில் ஒரு உதவியாளர்
அமைத்துக் கொள்ள வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.
(மேசையைத் தட்டும் ஒலி) மாத ஓய்வூதியம் இங்கே 500 ரூபாய்
தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் உத்தரப்பிரதேச மாநிலத்தில்
1200-ம் மத்தியப்பிரதேசத்திலும் திரிபுரா போன்ற மாநிலங்
களிலும் ரூபாய் ஆயிரம் கொடுக்கப்படுகிறது.

இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இட வசதி ஏதும்
கிடையாது. ஆனால் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம்
போன்ற மாநிலத்தில் வீடு கட்டுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய்
வரை கடனாகவும், கார் வாங்குவதற்குஒரு இலட்சம் ரூபாய் வரை
முன்பணமும் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12.10

இராஜஸ்தான் அரசு வீடுகளிலோ, சொந்த வீடுகளிலோ அல்லது
வாடகை வீடுகளிலோ வசிக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ.
20ஆயிரம் மதிப்புள்ள பர்னிச்சர்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.
(பலத்த மேசையைத் தட்டும் ஒலி). இந்த குறிப்புகளை எல்லாம்
ஒரிஜினலாகவே வைத்திருக்கிறேன். அந்தப் புத்தகத்தையும்
வைத்திருக்கிறேன். அதை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன்.
இதைப் பார்த்து அவசியம் ஆவன செய்யும்படி கேட்டுக்
கொள்கிறேன். நாகாலாந்தில் மாதம் ரூ. 450 சம்பளத்தில்....

[1991 செப்டம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பன்னீர்செல்வம் அவர்கள் அவர் கையிலே இருக்கின்ற கத்தை பூராவையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்துவிடலாம்.

திரு என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்துவிடுகிறேன். கொடுத்துவிடுகிறேன். நாகாலாந்திலே மாதம் ரூபாய் 450 சம்பளத்தில் இரண்டு உதவியாளர்கள் அமர்த்தி கொள்ள வசதி செய்து தரப்பட்டுள்ளது

மணிப்பூர் மாநிலத்தில் ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளத்தில் ஓட்டுநராக உள்ள ஒருவரை உதவியாளராக அமர்த்திக்கொள்ள வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இங்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உணவருந்துவதற்கு என்று சரியான உணவு அருந்தகம் கிடையாது. சட்டமன்ற விடுதியிலே அமைந்துள்ள உணவகத்தில் எப்போதும் 'ஈ' மொய்த்துக்கொண்டு இருக்கிறது. அது எப்போதும் 'ஈ' ஓட்டலாகத்தான் காட்சியளிக்கிறது. (பலத்த சிரிப்பு) சட்டமன்ற விடுதியிலே உள்ள தொலைபேசிகளும் சரியாக இயங்குவதில்லை. பலமுறை புகார் செய்தும் கவனிக்கப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களை பார்க்க வருகின்றவர்களுக்கு வசதியாக ஒரு பொதுக் கழிப்பிடம் சட்டமன்ற விடுதியிலே அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன். பொது எஸ்.டி டி. போன் செய்வதற்கு சட்டமன்ற விடுதியிலே ஒரு பூத்து அமைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்றம் நடக்கின்ற நாட்களிலே தரமான மதிய உணவு தாங்களே அளிக்க ஆவண செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் பாராளுமன்றத்தில், நான் டெல்லிக்கு இரண்டு தடவை போய் வந்த போது, பாராளுமன்றத்திலே மிகவும் குறைந்த விலையிலே மிகவும் நல்ல உணவாகக் கொடுக்கிறார்கள். அதே போன்று எங்களுடைய சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்களுக்கு வெளியிலே உள்ள ஓட்டல்களில் நல்ல உணவு சாப்பிட முடிவது இல்லை. ஒரு நாளைக்கு இங்கே வந்தால், ஒரு நல்ல உணவு சாப்பிடுகிற மாதிரி ஏற்பாடு பண்ணிக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்றத்தில் ஓசியாக கிடைக்காது.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காசு கொடுத்துத்தான், ஒரு சாப்பாடு 5 ரூபாய்தான் அங்கே. இங்கே காசு கொடுத்து விடுகிறோம் நாங்களும் (பலத்த சிரிப்பு) தரமான மதிய உணவு அளிக்க தாங்களே ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டுகிறேன்.



[திரு.என்.பன்னீர்செல்வம்] (1991 செப்டம்பர் 27)

சட்டமன்ற உறுப்பினர்களுடைய வாகனங்களுக்கு, அரசு கார் பாஸ்கள் வழங்க வேண்டும். கார் பாஸ் கொடுத்திருப்பதாக சொல்கிறார்கள். அந்த கார் பாஸ் கையிலே எடுத்துக் கொண்டு போனால் இரண்டாகக் கிழிந்து போகிறது. அவ்வளவு மோசமாக ஆகிறது. நல்ல முறையிலே, இப்போது எம்பளம் போட்டிருக்கிறார்கள். நல்லமுறையிலே எம்பளம் போட்டு கொடுத்தீர்கள் என்றால் நம் கார் எங்காவது போய். நின்றது என்றால் —என்! கார் பற்றி ஒன்றுமில்லை—எம்.பி.எஸ், எம் எல்.ஏ. கார் பின்னாடியும் எழுதிவிட்டேன், முன்னாடியும் எழுதிவிட்டேன். ஆனால் நான் போனால் எம்.எல் ஏ. என்று ஒத்துக்கொள்கிறான் எழுந்து நிற்கிறான் கதவு வரைக்கும் அவன் சாத்துகிறான். ஆனால் திரு சிங்காரம் போனால் உண்மையிலேயே ஒத்துக்கொள்ள மாட்டேன் எனகிறான். (சிரிப்பு) அதனாலே உதாரணத்திற்கு சொல்கிறேன் நேற்று ஒரு செக்அப்-க்கு போய் இருந்தோம். திரு. பன்னீர்செல்வமும் நானும் போய் இருந்தோம் அவரை எம்.எல்.ஏ. என்று ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறான் நீங்கள் உட்காருங்கள் அப்படி என்கிறான். என்னை உள்ளே விடுகிறான். (சிரிப்பு) சட்டமன்ற உறுப்பினர்களுடைய வாகனங்களுக்கு கார் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிற்றுண்டி சாப்பிட மேல் சபை இடத்தை எங்களுக்கு ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அந்த லெட்ரின் பாத்ரூம், லேடீஸ் போகிற இடத்திலே தான் போய் சாப்பிட வேண்டியதாக இருக்கிறது. அதற்காக இந்த இடத்தை பார்த்து ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அங்கே தான் இப்போது சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம் நாங்கள். எவ்வளவு சொல்லியும் விடமாட்டேன் என்கிறார்கள். அந்த ஆபிசரிடம் மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன் அதனாலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு.. (குறுக்கீடு) மேல் சபை வந்தால் நாங்கள் விட்டுவிட்டு வந்து விடுகிறோம். (சிரிப்பு) மேல்சபை வரவில்லை. ஆமாம் வரவில்லை, ஆகையால் அந்த இடத்தை எங்களுக்கு ஒதுக்க வேண்டும்.

முன்பே நான் குறிப்பிட்டபடி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதுபோல் சம்பளம், தினப்படி, பயணப்படி மற்றும் இதர படிகளையும், ரெயில் பயண வசதி, தொலைபேசி வசதி, அஞ்சல் வசதி, வீட்டு வசதி, அலுவலக வசதி ஓய்வு ஊதியம், வீடு கட்ட, கார் வாங்க கடன் வசதி, வீட்டிற்குப் பர்னிச்சர் வசதி, உதவியாளர்கள் வசதி, உணவு வசதி, விடுதி வசதி, எஸ்.டி.டி. வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென கேட் இதற்குண்டான மனுக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 'ஆம்' என்ற குரலில் மேசையை தட்டி ஒப்புதல் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம். ஜெய்ஹிந்த். (பலத்த சிரிப்பு)

(1991 செப்டம்பர் 27

12-15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற விவாதத்தின் அடிப்படையில் மாவட்டங்களில் நடைபெறுகின்ற வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் தவறாமல் மாதம் ஒரு முறை நடத்தப்பட வேண்டும். அந்த வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் அரசுக்கு அனுப்பப்படுகிறது. ஆனால் என்னென்ன தீர்மானங்களை அரசு ஏற்றுக்கொண்டது, அது செயல்படுத்தப் படுகிறதா என்று எந்தவிதமான விவரங்களும் மாவட்டத்திலே உள்ள எங்களுக்கு இங்கே இருந்து வருவது கிடையாது. தெரிந்து கொள்ளவும் முடியாது என்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே ஏறத்தாழ ஒரு தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சனைகளை விரிவாக வளர்ச்சி மன்ற கூட்டங்களிலே தான் எடுத்துரைக்க முடியும். வளர்ச்சி மன்றக்கூட்டங்களிலும் என்னென்ன பொருள்கள் அந்தத் தொகுதியிலே இருக்கிறது என்று கொடுக்கப்பட்டு அந்த, பொருள்கள் எல்லாம் வளர்ச்சி மன்ற கூட்டத்திலே விவாதிக்கப் பட்டு அரசுக்கு அனுப்பப்படுகின்ற அந்தப் பொருள்கள் எல்லாம் முழுமையும் செயலாற்றப்படுகின்றன. எனவே இனிமேல் அந்த மாதிரி குறைபாடுகள் வராமல் ஒவ்வொரு வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் இருந்து வருகின்ற தீர்மானங்களைப் பரிசீலித்து அடுத்த வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் எதை முன்னால் எடுத்துக் கொள்வது, எதை பின்னால் எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றி அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுதி முழுமையும் உறுப்பினர் பணியாற்றக் கூடிய சூழ்நிலையில் ஒவ்வொரு ஒன்றியங்களிலும் சட்டமன்ற உறுப்பினருக்கு என்று ஓர் அறை ஒதுக்கித் தர வேண்டும். ஒரு தொகுதியில் இரண்டு. மூன்று ஒன்றியங்கள் கூட இருக்கலாம். அந்த ஒன்றியங்களுக்கு ஒரு தேதி குறிப்பிட்டு சென்று அங்குள்ள மக்களோடு தொடர்பு கொள்ள வாய்ப்பு உள்ளதால் அதற்கு வழிவகை செய்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். அதற்கு ஒரு தொலைபேசியும், உதவி செய்ய ஒரு எழுத்தாளரும் அவசியம் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் செய்து தர வேண்டுகிறேன். பொதுவாக, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஓர் எழுத்தாளர் உதவி செய்வது மிக மிக இன்றைக்கு அவசியம் தேவை. காரணம், வருகின்ற மனுக்கள் மீது முழுமையாக நாம் ஒரு தீர்வு காண முடியாவிட்டாலும்கூட அதை அரசுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையையாவது எடுக்க முடியும். அதுவே இன்றைக்கு ஒரு பெரிய வேலையாக அமைகிறது. ஆகவே அந்த உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



158379

அதோடு ஒன்றியங்களில் குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒரு முறை செல்லும் வகையில் ஒன்றியங்களினுடைய வாகனம் சட்ட மன்ற உறுப்பினருடைய அந்தத் தொகுதிக்கு அனுப்புவதற்கு உதவி செய்யும் வகையில் வாகனம் வழங்கப்பட வேண்டும்.

தனிப்பட்ட இடத்தில் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் ஒரு புதிய சட்டமன்றத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த சட்டமன்ற வளாகம் முழுமையும் தலைமைச் செயலகம், ஆணையாளர் அலுவலகங்கள், அதுபோன்ற அரசு தலைமை அலுவலகங்கள் முழுமையும் அந்த சட்ட மன்றத்தைச் சுற்றியுள்ள இடங்களில் இருக்க வேண்டும். அதே போல சட்டமன்றத்தைச் சுற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு போன்ற அறைகள் ஒரிஸாவில் அளிக்கப்படுகிறது. அதுபோன்ற வீடுகள் சட்டமன்றத்திற்கு அருகிலேயே இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுபோன்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படக்கூடிய மருத்துவ வசதி கூடுதலாக அளிக்கப்பட வேண்டும். அதுபோல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோன்று சட்டமன்றத்திலே நீண்ட காலமாகப் பணியாற்றக்கூடிய ஊழியர்களை எல்லாம் நிரந்தரமாக அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்களுக்கு அளிக்கப்படக் கூடிய ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த ஊதியத்தை உயர்த்துவது குறித்தும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

சட்டமன்ற வளாகங்களிலே பணியாற்றக் கூடிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும். அதேநேரத்தில் அவர்களுக்கு வீட்டு வாடகைப் படியும், மக்களவையில் பணியாற்றக் கூடிய ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்திற்கு இணையான வகையில் ஊதியம் வழங்குவது பற்றியும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அதுபோல அவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்தல் என்று வரும்போது, அனைத்து வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை அவசியம் வழங்கப்பட வேண்டும். அதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் இன்றையதினம் கிராமப் புறங்களில் அமைந்திருக்கிற வாக்குச் சாவடிகள் ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் அமைந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நீண்ட தூரத்திலே இருக்கிற காரணத்தினால், பெரும்பாலான கிராமங்களில் வாக்காளர்கள் வாக்களிக்க வருவதில்லை. வயதானவர்கள், பெண்கள் மற்றும் வருவ



V211,31'N91
N91.2.2

வசதியற்றவர்கள் எல்லாம் இம்மாதிரி நிலைமையில் வந்து வாக்களிப்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே, எவ்வளவு தூரம் வாக்குச் சாவடிகளுடைய தூரத்தைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த தேர்தலின்போது கூட, பெரும்பாலான கிராமங்களில், வாக்குச் சாவடி நீண்ட தூரத்தில் இருக்கிறது, ஆகவே, நாங்கள் வாக்களிக்க வர முடியாது என்று கூறியதை எல்லாம் பல சட்ட மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அந்த வகையிலே குறுகிய தூரத்திலே, மக்கள் எளிதாக வந்து வாக்கு அளிக்கக்கூடிய விதத்திலே அந்த வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-20 மணி

அதேபோன்று பல்வகை மூலதனச் செலவு என்கின்றபோது தஞ்சை மாவட்டத்திலே இன்றைய தினம் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விதைப்பு விவசாயம்கூட காய்ந்து, கருகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூடுதலாகத் தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன என்பதை எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால் ஒரு தாழ்மையான வேண்டுகோள். மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்கும் சாலை நிதிபோல தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்குவது பொருத்தமாக இராது. காரணம், தஞ்சை மாவட்டச்சாலைகள் ஏறத்தாழ 7, 8 மாதங்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் சாலைகளாகும். அப்படி இருக்கும் காரணத்தால் சிரழிந்து இருக்கின்றன. மேலும் அங்கே அதிகமான போக்கு வரத்து நடைபெறுகிறது. இப்போது ஓ.என்.ஜி.சி. கன ரக வாகனங்கள் ரோட்டிலே இரவும் பகலும் சுற்றிச் சுற்றி வருகின்றன. இதனால் சாலைகள் மிகவும் சீரழிந்து இருக்கின்றன. அந்தச் சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்றால் பல கோடி ரூபாய் தஞ்சை மாவட்டத்திற்குச் செலவிட வேண்டியிருக்கும். எனவே மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்குவதுபோல் அல்லாமல் கூடுதலாக நிதி ஒதுக்கி நல்லவிதமாக சாலைகளை அமைக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காவிரி மற்றும் வெண்ணாறு பாசனப் பகுதிகளைக் கொண்ட மாவட்டமாக இருக்கிறது. அதனுடைய வடிகால்கள் சிராக்கப்படாததால், குறைந்த தண்ணீர் வெண்ணார், காவிரியில் வந்தால்கூட, முழுமையாக அந்தக் கிராமங்களுக்குச் செல்வதில்லை. உதாரணத்திற்கு தரங்கம்பாடி தாலுக்காவிற்கு தண்ணீர் செல்லவில்லை என்று அனைத்து விவசாயிகளும் 21 ஆம் தேதி லை மறியல் செய்யப் போவதாக நோட்டீஸ் பார்த்தேன்



கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்லாததற்குக் காரணம், வாய்க்கால் சீராக இல்லை. அதனால் அந்தக் கிராமங்களுக்குத் தண்ணீர் செல்லாமல் இருக்கிறது. அந்த வாய்க்கால்கள் சீரழிந்து இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆற்றின் கரைகள் பலமிழந்திருக்கின்றன. பலவீனமாக இருக்கின்றன. கடுமையான மழை பெய்து, வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால், அனைத்து இடங்களிலும் உடைப்பு ஏற்படும் அபாயம் இருக்கிறது. எனவே கரைகளைப் பலப்படுத்துவதற்கு, ஆறுகளில் உள்ள மேடுகளை சமப்படுத்துவதற்கு, வாய்க்கால்களை சீரமைப்பதற்கு, வடிகால்களை சீரமைப்பதற்கு, வெள்ளக் காலங்களில் தண்ணீர் வேகமாக வடிவதற்கு, பழைய காலத்தில் அமைக்கப்பட்ட கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. காரணம், அதன்மூலம் உற்பத்தியை அதிகப்படுத்தி, வெளி மாநிலங்களில் வாங்குகின்ற உணவு தானியத்தினால் ஏற்படும் செலவைக் குறைக்க முடியும். இதனால் அதிக விலை கொடுத்து வாங்குவதையும் குறைத்துக் கொள்ள முடியும். தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக உற்பத்தி செய்யும்போது மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறை தன்னிறைவு பெறும் சூழ்நிலையை உருவாக்க முடியும். அந்த வகையில் தஞ்சை மாவட்டத்தில் குடிமராமத்து வேலைகள் இந்த ஆண்டு செய்யப்பட வேண்டும். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் அனைவரையும் அழைத்து ஒரு விவசாயிகள் மாநாடு நடத்த வேண்டும். முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, கும்பகோணத்தில் விவசாயிகள் மாநாடு நடத்தி, விவசாயிகளின் கருத்துக்களைக் கேட்டு, அதன்மீது சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், பொறியாளர்கள் அவ்வளவு பேர்களையும் அழைத்து, ஒரு முடிவெடுக்கப்பட்டு, அந்த முடிவின் அடிப்படையிலேதான் ஏறத்தாழ 1989–90-லே 6, 7 புல்டோசர்களை உபயோகித்து, வடிகால் முழுமையும் சீரமைக்கப்பட்டது. இப்படிப்பட்ட விவசாயிகள் மாநாடு நடத்தி, அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு, அதன்மூலம் அபிவிருத்தி செய்யும் வேலைகளை திட்டமிட்டுச் செய்யும்போது பணிகள் சிறப்பாக இருக்கும். அனுபவரீதியாகவும் எந்தெந்த வகையில் துரிதமாக அந்த வேலைகளைச் செய்ய அரசுக்கு உதவிகரமாக இருக்குமென்பதைப் புரிந்துகொள்ள முடியும். அந்த வகையிலே எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பு தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-25.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.கே.ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்காக மாநில அரசும், மத்திய அரசும் 2 பிரிவுகளாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு வழங்கப்படக் கூடிய தொகையில், மாநில அரசு வழங்கினால் மத்திய அரசு வழங்குவதில்லை, மத்திய அரசு வழங்கினால் மாநில அரசு வழங்குவதில்லை என்ற நிலைமை இருக்கிறது. மாநில அரசு வழங்கினாலும் மத்திய அரசும் கொடுக்க வேண்டும். அதேபோல மத்திய அரசு வழங்கினால் மாநில அரசும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயக் கடன்கள் ரத்து செய்யப்படும் என்று விவசாயிகள் மிக ஆர்வத்துடன் எதிர்பார்த்தார்கள். இதுவரையில் நாம் அதைப்பற்றி இங்கே சொல்லவில்லை. அதை நீங்கள் பரிசிலனை செய்து அனைத்து விவசாய கூட்டுறவுக் கடனையும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு சட்டப்பேரவையின் தொகுதி பரப்பு சில நேரங்களில் சில இடங்களில் 2 மாவட்டங்களில் அமைந்துள்ளது. அவ்வாறு இருக்கும்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சங்கடம் ஏற்படுகிறது. அரசின் உத்தரவுப்படி ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்தான் பங்கேற்க முடியும் என்று இருக்கிறது. எனது தொகுதி 2 மாவட்ட எல்லைகளில் வருகிறது. இதற்கு முன்பாக சென்ற அரசு இருக்கும்போது அந்த அரசின் கவனத்திற்கு நான் இதைக் கொண்டு சென்றேன். அப்போது இருந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இரண்டு மாவட்டங்களின் வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கப்படாமல் கிடப்பில் இருக்கிறது. குறிப்பாக எனது தொகுதி 2 மாவட்ட எல்லையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியின் பாதி மக்களுடைய பிரதிநிதியாக ஒரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்தான் கலந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் சம்பந்தப்பட்ட



அதிகாரிகளிடமும் இதுகுறித்து கோரிக்கை மனு கொடுத்திருந்தேன். அதற்குப் பிறகு இப்போது சிறப்பு அழைப்பாளர் என்று இன்னொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம் என்று அனுமதியளித்திருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய கோரிக்கைகளை அந்த மாவட்ட மன்றக் கூட்டத்தில் முழுமையாகச் சொல்வதற்கும் உரிமை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மாவட்டப் பிரிவினை நடக்கிறபோது, இரண்டு மாவட்டத்திலும் தொகுதிகள் அமைந்திருப்பதை மாற்றி, ஒரு தொகுதி ஒரே மாவட்டத்திற்குள் இருக்கும்படி பார்த்துக் கொண்டால்தான் அந்த சட்டமன்ற உறுப்பினர் சிறப்பாகச் செயல்பட முடியும்.

அதைப்போலவே, மங்கலக்குடி என்ற ஃபிர்க்காவும், சருகுணி என்ற ஃபிர்க்காவும் ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டத்திற்கு மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில், நம்புதாளை என்ற கிராமத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு கடலில் மீன் பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் இறந்து விட்டார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டஈடும், உதவியும் இன்னும் வழங்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் அந்தத் துறை அமைச்சர் அவர்களிடமும் இதைப் பற்றி கூறியிருக்கிறேன். அந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு அரசு உதவித் தொகையும் சலுகையும் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நமது சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இருக்கக்கூடிய பல ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பணியில் நிரந்தரமாக்கச் செய்ய வேண்டும். இப்போது இருக்கக் கூடியவர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்கும்படியும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் நேரங்களில் பூத்-கள் அமைக்கப்படும் போது, அதிகதூரமான இடங்களில் பூத்-கள் அமைக்கப்படுவதைத் தவிர்த்து, மக்கள் சுலபமாக வந்து ஓட்டுப் போடும் வகையில் பூத்-களை அருகிலேயே அமைத்துத் தரவும் நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த அரசு மக்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டுமென்று விரும்புகிறேன். சிறிய உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதை அரசும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் எவ்வாறு எண்ணுகிறார்கள் என்று தெரியாது. குறிப்பாக நமது மாநிலத்தில் சாராயத்தை நமது அரசு 90 சதவீதம் அளவுக்கு இன்றிருந்து நீக்கியிருக்கிறார்கள். ஆனால் மக்கள் முழுமையாக நம்பவேண்டுமென்றால், என்னுடைய ஒரு யோசனை

[திரு. ஆர், சிங்காரம்] [1991 செப்டம்பர் 27

என்னவென்றால், முதல் கட்டமாக அமைச்சர்கள், இரண்டாவது கட்டமாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள்,' பெரிய அதிகாரிகள் மட்டத்தில் யாரும் மது அருந்துவது இல்லை, மது அருந்தக்கூடாது என்ற நிலைமையை வகுத்துக் கொடுத்தால் மக்கள் மத்தியில் நமக்கு........

பிற்பகல் 12-30 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல் கின்றார் என்பதைத் தெளிவாக விளக்கினால் எல்லோரும் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று நினைக்கிறேன். முதலமைச்சரும், அமைச்சர்களும் குடிப்பதில்லை என்று சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறாரா? முதலமைச்சர் நிச்சயமாகக் குடிப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர்களும் யாரும் குடிப்பதில்லை என்றே நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர்கள் பற்றி எனக்குத் தெரியாது. (மேசையை தட்டும் ஒலி) அவர்களாகவே முன் வந்து தங்களைப் பற்றி தன்னிலை விளக்கம் அளிப்பார்களேயானால், இந்த அவையின் மதிப்பிற்கும், கண்ணியத்திற்கும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.'' (குறுக்கீடுகள்)''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் புரட்சித் தலைவியினுடைய கொள்கையை ஏற்று, ஆணையை ஏற்று, நூற்றுக்கு நூறு யாரும் குடிக்கக்கூடாது என்று செயல்படுத்துகிற திட்டத்திலே நாங்கள் முழுமையாக இருக்கிறோம். நாங்கள் யாரும் குடிப்பதில்லை; பாரே கூட நாங்கள் பார்த்ததில்லை என்று உறுதி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த சபதத்தை அனைத்து உறுப்பினர்களும் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : நன்றி. இது போன்ற ஒரு பதில் எனக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேனே ஒழிய, யாரையும் புண்படுத்தும் நோக்கத்திலே நான் இதை இங்கே எழுப்பவில்லை. இதுபோன்று நாம் அனைவரும் மது அருந்துவதில்லை என்ற ஒரு நிலைமை நிச்சயமாக, மக்களுக்குத் தெரிந்தால், முன்னுதாரணமாக அமையும் என்ற எண்ணத்துடன்தான் நான் கூறினேன்.

இதற்கு முன்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன தேவை என்பதை விரிவாக எனக்கு முன்பாகப் பேசியவர்கள் கூறினார்கள், அதைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய அத்தியாவசியமான தேவைகளை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கோரி, இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 12 நாட்களில் காலை யிலும், மாலையிலும் நடைபெற்ற சட்டமன்ற கூட்டங்களில் அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களாலும், ஏனைய அமைச்சர் பெருமக்களாலும் 55 மானியக் கோரிக்கைகள் இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்டு, அவையினரால் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இன்று 7 மானியக் கோரிக்கைகள் இந்தப்பேரவையின் பேராதரவையும், ஒப்புதலையும் எதிர்பார்த்து பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. இன்று மட்டும் மொத்தமாக ரூ. 9,54,42,00,000-க்குப் பேரவை தன்னுடைய ஒப்புதலை வழங்க வேண்டும் என்று கோரியிருக்கிறோம். அந்த வகையில் இந்தப் பேரவை நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டிய நிலையிலே இருக்கிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆகவே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மிக்க மகிழ்ச்சியோடு இந்த நாளைக் கடத்துகின்ற அளவிற்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறீர்கள் என்பதிலே எனக்குப் பெருமகிழ்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள். ஊரிலே ஒரு பழமொழி உண்டு. யாராவது ஒருவரைப் பிடித்து தலையில் முண்டாசைக் கட்டிவிட்டு, அவருடைய காதிலே பூவைச் சொருகி விட்டு விடுவார்கள். அவர் மற்றவர்களுக்காக ஆடுவார். (பலத்த சிரிப்பு)

பிற்பகல் 12.35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் சொல்வது போல யாரும் எனக்கு 'பூ சூட்டி, காதிலே பூ வைத்து,

நீங்கள் பேச வேண்டும்' என்று பணிக்கவில்லை. ஆனால் என்னுடைய ஏழ்மை நிலையை, நான் இருக்கின்ற சூழ்நிலையை, நான் ஒரு சாதாரண தொண்டன் என்ற அடிப்படையில் எனக்கு என்ன வாழ்வு அளிக்கப் போகிறீர்கள்? எனக்கு என்ன காரணம் சொல்லப் போகிறீர்கள்? என்னைத்தத்து எடுத்துக் கொள்ளுங்கள் என்றுதான் கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப் போல இந்த சட்டமன்றத்தில் அனைத்து சாதாரண ஏழைத் தொண்டர்கள் மன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி, தானைத் தலைவி, அம்மா அவர்கள் கருணை கூர்ந்து இந்த ஏழைத் தொண்டர்களைக் காப்பாற்ற (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நீங்கள் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உதாரணம் சொன்னேனே தவிர, சிங்காரத்துக்கு 'பூ சூட்டி விட்டார்கள்' என்று சொல்ல வில்லை; மாண்புமிகு உறுப்பினருக்கு என்று சொல்லவில்லை. ஏனென்றால், இவ்வளவையும் நான் ஏன் சொல்கிறேன் என்றால் அவர் தான் சொன்னார், 'எல்லோரும் கேட்கச் சொன்னார்கள்' என்றும் சொன்னார். 'மிச்சம் மீதியை நான் மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வத்திடத்திலே விட்டுவிட்டேன்' என்றும் அவர் தான் சொன்னாரே தவிர, அதற்குப் பிறகுதான் நான் இதைச் சொல்ல வேண்டிய அவசியம் வந்தது.

அதுமட்டுமல்லாமல் மற்ற மாண்புமிகு பேரவை உறுப்பினர்களும் பெரும் தியாகம் செய்து எல்லா மானியக் கோரிக்கைகளிலும் நான் பேசியே தீரவேண்டும், நான் பேசியே தீரவேண்டும் என்று சொல்கிறவர்களும்கூட, இன்றைக்கு எங்களுடைய நேரத்தையும் சேர்த்து மாண்புமிகு உறுப்பினர் சிங்காரமே எடுத்துக் கொள்ளட்டும் என்று சொல்லும்போது அதற்குப் பெயர் 'பூ சூட்டாமல் வேறு என்ன சூட்டுகிறார்கள்?' என்பது எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களும் இந்த அவையை இன்றைக்கு பெருமகிழ்ச்சிக்கு ஆளாக்கி இருக்கிறார்கள் என்பதிலே நான் அவர்களுக்கு நன்றி சொல்லவும் கடமைப்பட்டு இருக்கிறேன். நான் கூட இங்கே நிதி ஒதுக்கீடு செய்து கொண்டு வந்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வமே உங்களை 'ஆமாம்' என்று சொல்லச் சொல்லி (சிரிப்பொலி) அவரே



கோரிக்கைகளை வைத்து அவரே நிறைவேற்றிவிட்டதன் காரணமாக, நான் ஒன்றும் இனிமேல் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை (சிரிப்பொலி) என்ற முடிவுக்கு வரவேண்டிய கட்டத்திலேயே நான் நிற்கிறேன். (சிரிப்பொலி/மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால் இங்கே மிக மிக ஏழையாக இருக்கிறோம் என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இங்கே ஏழைகளும் உண்டு; எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். வாய்ப்பு உடையவர்களும் வசதி படைத்தவர்களும் உண்டு; வாய்ப்பு உடையவர்களும் உண்டு. அது அவரவர்களுடைய நிலைமையைப் பொறுத்து இருக்கிறது. சிங்காரத்தைப் பார்த்து நான் அப்படி நினைக்கவே இல்லை. அவர் சிங்கார வாழ்விலேயே இருக்கிறார் என்கிற அளவுக்கு அந்தத் தொகுதி வாழ் மக்கள் மிகச் சிறப்பாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள் கூட கமழுகின்ற அளவுக்குத்தான் செல்வம் உடையவராக, 'பன்னீர்' செல்வமாகவேதான் அவரும் திகழ்கிறார் என்று நமக்குத் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொன்னது தவறு என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களை எல்லாம் சொல்ல வேண்டியது தான். அதை அதிகாரிகளும் மற்றவர்களும் ஆராயத்தான் செய்வார்கள். இருக்கிற நிதி வசதியைக் கொண்டு, எது செய்ய முடியுமோ அவ்வளவுதான் செய்ய முடியும். கேட்கக் கூடாது என்று நாங்கள் யாரையும் தடுக்கவும் இல்லை. கேட்க வேண்டியது எல்லாம் ஆண்டுதோறும் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டியதுதான். ஆனால் இருக்கின்ற நிதி வசதிகளுக்கு ஏற்ப எதை எதைச் செய்ய இயலுமோ அதை இந்த அரசு செய்யும் என்பதையும், நடந்து முடிந்த மானியக் கோரிக்கைகளில் எல்லாம் நாட்டு மக்களும் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர் பெருமக்களும் எதிர்பார்த்ததைவிட இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே பல விதத்திலே நாம் சமாளிக்க முடியாத அளவுக்கு பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு வந்திருக்கிற நிலையிலேயும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுவது என்பது மட்டு மல்லாமல் நாட்டினுடைய எண்ணங்களை அறிந்து தேவைகளை அறிந்து கூடுதலாக ஒதுக்கீடு தந்து இருக்கிறார்கள் என்பதும், அதன் காரணமாக மேற்கொண்டும் கூடுதலாகச் செலவு ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

ஆக, இந்த அரசினுடைய வரவு-செலவுக் கணக்குகள் ஒளிக்க விடத்திலே வைக்கப்பட்டு இருக்கின்றது. வெறும் மேற்போக்காகக் கூட வைக்கவில்லை. கிட்டத்தட்ட 50, 60 புத்தகங்களாகவே

உங்களுக்குத் தந்து, இந்த அரசாங்கத்துக்கு எவ்வளவு வரவு
என்றும் சொல்லி இருக்கிறோம். எவ்வளவு செலவு ஆகிறது
என்றும் சொல்லி இருக்கிறோம். எது எதிலே எப்படி எப்படி
ஏற்பட்டு இருக்கிறது என்றும் எடுத்துச் சொன்னோம். அவை
முழுவதையும் இந்தப் பேரவை முன்னால் வைத்து, பேரவை
யினுடைய ஒப்புதலின் பேரில்தான், நீங்கள் ஒப்புக் கொண்டால்,
அவை நிறைவேற்றுகிற அளவுக்குத்தான் இந்த நிதி ஒதுக்கீடுகளை
இங்கே கொண்டு வந்து வைத்து இருக்கிறோமே தவிர, நாங்க
ளாக எதையும் செய்வதற்கில்லை. நாங்கள், 'ஒதுக்கித் தாருங்கள்,
ஒதுக்கித் தாருங்கள்' என்று உங்களிடத்திலே கேட்டுக் கொண்டு
இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள்
பேசுகின்ற தன்மையை எடுத்துப் பார்த்தால், ஒரு குத்து மதிப்
பாகப் போடுவோமேயானால் இன்றைக்கு ஒதுக்கி இருக்கிற
அவ்வளவு மானியக் கோரிக்கைகளையும் இதற்கு ஒதுக்கிவிட்டு
அந்தந்தத் துறைகளை அப்படி அப்படியே விட்டுவிடுவோமே
யானால் கூட, உள்ளபடியே போதாது என்றுதான் நான் கருது
கிறேன். ஆனால் எனக்கு ஒரு மகிழ்ச்சி என்னவென்று கேட்டால்,
இங்கே மற்றவர்கள் எல்லாம் விரும்புகிறார்கள், கேட்கிறார்கள்
என்று அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம்
பேசினாரே தவிர, என்னிடத்திலே முறைப்படி சட்டப்படி
கொடுத்து இருக்கிற தன்மையிலே என்னவென்று கேட்டால்,
இதற்கு அதிகம் செலவழித்துவிட்டீர்கள் இதை வெட்டு, அதை
வெட்டு என்று 19 வெட்டு போட்டிருக்கிறார். இந்த மானியக்
கோரிக்கையில் குறை குறை என்று எனக்கு சொல்லிவிட்டு,
இங்கே கூட்டு கூட்டு என்று பேசுகிறபோது சொல்லியிருக்
கிறார்கள் என்று சொன்னால்—அவர் ஒருவர் மட்டும் 19
வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார். இவ்வளவு
செலவழிப்பது ஆகாது. இதிலே கொஞ்சம் குறையுங்கள்,
குறையுங்கள் என்று. நாங்கள்தான் உங்களையெல்லாம் கெஞ்சிக்
கேட்டுக்கொண்டு, தயவுசெய்து வெட்டுத் தீர்மானங்களை
திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள், நாங்கள் அதிகமாகவே
செலவழிக்கிறோம் என்று தான் ஒவ்வொரு மானியக் கோரிக்கை
யிலும் கேட்டுக்கொண்டு வருகிறோம்.

பிற்பகல் 12-40

இந்தச் சூழ்நிலையையெல்லாம் காண்கிறபோது, இந்த
மாமன்றத்தினுடைய மதிப்பு, மரியாதை, கௌரவம் ஆகியவை
களையெல்லாம் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தின்
அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை
யெல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நாளுக்கு நாள்
அவற்றை செம்மைப்படுத்துகிற முயற்சியிலே இந்த அரசு
என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ
அவற்றையெல்லாம் நியாயத்தின் அடிப்படையிலும், இருக்கிற





வசதியின் அடிப்படையிலும், நாட்டு மக்களுடைய எண்ணங்களின்
அடிப்படையிலும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. 'தோழமை
யானாலும் ஏழமை பேசேல்' என்பது ஒரு பழமொழி. ஆகவே,
எக்காரணங் கொண்டும் நம்மை நாமே தரம் தாழ்த்திக் கொள்ளக்
கூடாது. இங்கே வேடிக்கை, விளையாட்டாக அதை நாம்
பேசினாலும் கூட, அது எழுத்து வடிவிலே போகிறபோது,
செய்தித்தாள்களில் எல்லாம் போடுகிறபோது, சில பல கருத்துக்கள்
நாட்டு மக்களால் ஆங்காங்கே விமர்சிக்கப்படுகிறபோது நம்
முடைய தரம் உயர்வதற்கு மாறாக கீழே கூட கொண்டு வந்து
சேர்த்து விடும். அப்படிப்பட்ட நிலைமைகளில் மாண்புமிகு
உறுப்பினர்கள் பேசுகிறபோது, தங்களையும் மறக்காமல், இந்த
மன்றத்தினுடைய சிறப்பையும், மற்றவைகளையும் மறக்காமல்
கருத்துக்களை எடுத்து வைக்கவேண்டுமென்று மாண்புமிகு
உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால்
எழுத்து வடிவிலே வருகிறபோது, ஆங்காங்கு இருப்பவர்கள்
அவரவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையில்தான் எடுத்துப்
பேசுவார்கள்.

இந்தக் கோரிக்கையின் முக்கிய நோக்கமே மாண்புமிகு உறுப்பி
னர்களுடைய வசதி, வாய்ப்புகள், மற்றவைகளை காப்பாற்றுவதற்
காக அமைந்தது அல்ல இந்தச் சட்டமன்ற மானியக்கோரிக்கை.
ஆனால், இந்தச் சட்டமன்றத்தை இங்கே செம்மைப்பட,
ஒழுங்குபட நடத்திச் செல்வதற்கு என்னென்ன வாய்ப்புகள்,
கூறுபாடுகள் இருக்கக்கூடும் என்பதையும், எந்தெந்த வகையில்
அரசு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும், அதன் மூலமாக
நோக்கம் நிறைவேறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதையும்
கண்டறிந்து, அதற்கான வகையில் சீரிய கருத்துக்களை எடுத்துச்
சொல்ல வேண்டிய பெரும் பொறுப்பு உடையவர்களாக நாம்
அனைவரும் இருக்கிறோம்.

உலகத்தில் நம்முடைய நாடு ஜனநாயக நாடு. பாராளுமன்ற
ஜனநாயக நாடு. அண்மையில் இந்தியாவின் குடியரசுத் தலைவர்
அவர்கள் பேசுகிறபோதுகூட, இருக்கிற அரசியலமைப்பு
முறையில் மிகச் சிறந்ததாகவும், வரவேற்கத்தக்கதாகவும் எல்லா
மக்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருப்பது பாராளு
மன்ற ஜனநாயகமுறைதான். அந்த முறையை நாம் கடந்த 43,
44 ஆண்டுக்காலமாக கட்டிக் காப்பாற்றி வருகிறோம். உலகத்திலே
மிகப்பெரியஜனநாயகநாட்டை நாம் கட்டிக் காப்பாற்றிக்கொண்டு
வருகிற போது, இதிலே முக்கியமான ஒன்றாக இருப்பது சட்ட
மன்றம்தான். இதனோடு நேரடித் தொடர்பு கொள்ளாமல் தனித்து
இயங்கக்கூடிய தன்மையை கொண்டிருக்கிற நீதித்துறையும்,
தனித்து இயங்கக்கூடிய—ஆனால் சட்டமன்றத்திற்குக் கட்டுப்பட்டு
இயங்கக்கூடிய வகையில் 'எக்சிகியூட்டிவ்' என்று சொல்லப்படுகிற

நிர்வாகத் துறையும் இருக்கிறது. இந்த ஜனநாயகத்தை கட்டிக் காப்பாற்ற இந்த மூன்று கால்கள்தான் முக்கியமான கால்களாக் இருக்கின்றன.

நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கப்படுகிறதென்றாலும், இந்தச் சட்டமன்றத்தில் கூடியிருக்கிற உறுப்பினர் பெருமக்கள் எத்தகைய சட்டங்களை நிறைவேற்றித் தருகிறோமோ அந்தச் சட்டத் திலுடைய அடிப்படையில் தான் அங்கே வீற்றிருக்கிற நீதிபதிகள் தீர்ப்பளிக்க வேண்டும். இந்தச் சட்டமன்றத்திலே என்னென்ன திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோமோ— மக்களுடைய மேம்பாடு கருதி, சிறப்பு கருதி, அவர்களுடைய நல்வாழ்வு கருதி— அந்த சட்டதிட்டங்களை அப்படியே நிறைவேற்று வதற்குத்தான் இங்கே நிர்வாக அமைப்பு, தலைமைச் செயலாளரி லிருந்து கடைசியில் சிற்றூர் அதிகாரிகள் வரையில் அத்தனை பேரும் இருக்கிறார்கள். ஆகவே, இந்த இருசாராருக்கும் இடையே துணையாக இருக்க வேண்டியதும் இந்த மன்றம் தான். ஆகவே, இந்த மன்றத்தினுடைய பொறுப்புகளையும் மற்றவைகளையும் மிகச் சிறப்பாக நடத்துகிறபோது, அவர் களுடைய தேவைகளையெல்லாம் உணர்ந்து செய்கிற கடமை அரசுக்கு இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். அது நாளுக்கு நாள் மெல்ல மெல்ல வளர்ந்தோங்கி வருவதையும் பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கூறுகிறபோதுகூட, தேர்தலில் வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை அளிக்க, சிறப்பாகவும் செம்மையாகவும் அவர்களை ஈடுபடுத்த, அதிலே குற்றங்குறைகள் நிகழாமல் இருப்பதற்கு அடையாளச்சீட்டு வழங்க வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். இந்தியாவினுடைய எலக்ஷன் கமிஷன்— தேர்தல் குழுவே அதுபற்றி ஆராய்ந்துகொண்டு வருகிறது. மத்திய அரசும் ஆராய்ந்து கொண்டு வருகிறது. ஆகவே, ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய நிழற்படம் ஒட்டப்பட்ட அத்தகைய அடையாளச்சீட்டை வழங்க வேண்டுமென்ற முயற்சியை ஓரளவுக்கு எடுத்துக்கொண்டாலும், அதிலே எல்லா மாநில அரசுகளுக்கும் இருக்கிற பெரும் குறை என்னவென்று கேட்டால் நிதித்தட்டுப்பாடுதான்.

பிற்பகல் 12-45

இங்கே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட 4 கோடி வாக்காளர்கள் இருக்கிறார்கள். 4 கோடி வாக்காளர்களுக்கும் இந்த நிழற்படம் ஒட்டுவது என்றால் குறைந்த அளவிற்கு 10 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும், 40 கோடியாகும். 5 ரூபாய் என்ற அளவிற்கு செய்து தருகிறார்கள் என்றாலும்கூட, 20 கோடி அளவிற்கு ஆகும். ஆனால், இப்போது கோவா மாநிலத்திலே மட்டும் சில பல இடங்களிலே அதை நடைமுறைப்படுத்தி, அது சரியாக வருமேயானால், மற்றைய மாநிலங்களுக்கும் நீட்டிக்கலாம் என்ற எண்ணமும், மத்திய அரசுக்கு இருந்து கொண்டிருக்கிறது. அப்படி நீட்டிக்கும்



போது, மாநில அரசு பாதித் தொகையையும், மத்திய அரசு பாதித் தொகையையும் தரவேண்டும் என்று கேட்க நமக்கு நியாயம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே இதைக் கொண்டு வந்தால், நல்லதுதான். அதிலே இருக்கிற ஒரே இடர்பாடு நிதிச் செலவு அதிகம் ஆகிறது என்பதுதான்.

மற்றொன்று, இந்தத் தொகுதிகளை மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணமும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கிறது. நீண்டகாலமாகத் தொகுதிகள் மாற்றம் செய்யப்பட வில்லை என்பது மட்டுமல்லாமல், ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 6 சட்டமன்ற தொகுதிகள் என்று இருக்கிற நிலையையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம், அரசமைப்புச் சட்டத் திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, கி.பி.2000 ஆண்டுக்கு முன்னாலே, மாற்றம் எதையும் செய்யக்கூடாது என்ற ஒரு முடிவை ஏற்படுத்திவிட்டதன் காரணமாகத்தான், 10 ஆண்டுக் காலத்திற்கு முன்பே செய்ய வேண்டிய, இத்தகைய 'டி-லிமிடேஷன்' கமிட்டி போட்டு செய்ய வேண்டிய, இத்தகைய பணிகள் நிறைவேறாமல் இருக்கின்றன.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும், கிட்டத்தட்ட இப்போது அது மாற்றியமைக்கப்படவேண்டும். இப்போது தேர்தல் ஆணைக் குழு கூட மத்திய அரசிடத்திலே ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கி. பி. 2000 ஆண்டு வரை தொகுதிகளை அதிகப்படுத்தக் கூடாது என்றுதான் இருக்கிறதே தவிர, தொகுதி களை மாற்றி அமைக்கக் கூடாது என்று இல்லை. ஒவ்வொரு மக்கள் கணக்கெடுப்பிற்குப் பின்னாலேயும் ஒரு டி-லிமிடேசன் கமிஷன் வரவேண்டும். வழக்கமாக, இந்த 1983–84–லே வந் திருக்க வேண்டும். அதற்காக ஒரு சட்டமுன்வடிவு கூட மக்களவையிலே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அதற்குள்ளாக தேர்தல் வந்துவிட்ட காரணத்தாலே அது கைவிடப்பட்டுவிட்டது. தொகுதிகளை மாற்றி அமைக்கலாம், தவறு இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிகளை மாற்றியமைப்பதும் இந்த டீ-லிமிடேஷன் கமிட்டிதான். அந்த கமிட்டியை அமைக்க வேண்டியது மத்திய அரசு. இப்போது இருக்கிற குறைபாடு அதுவாக இருக்கிற காரணத்தினால்தான் அதைத்தான் நான் சொல்ல வந்தேன். தேர்தல் குழு மத்திய அரசுக்குச் சொல்லி யிருக்கிறது. இந்த எண்ணிக்கையை மாற்ற வேண்டிய அவசியம்

இல்லாவிட்டாலும், இந்தத் தொகுதிகளை மாற்றியமைப்பதற்கு' தனித் தொகுதி, பொதுத் தொகுதியை மாற்றியமைப்பதற்கான அளவிலே, எந்தத் தொகுதியிலே தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக இருக்கிறார்களோ, சதவீத அடிப்படையில் அதைத் தாழ்த்தப்பட்டவர்களுடைய தொகுதியாக மாற்றுகின்ற தன்மைக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று தேர்தல் குழுவே கேட்டு இருக்கிறது. கி. பி. 2000 ஆண்டு வரை வேண்டுமானால், அந்த எண்ணிக்கையை குறைக்காமல் இருக்கலாம். ஆனால் தொகுதியை மாற்றுவதற்கு பெர்மிஷன், அனுமதி வேண்டும் என்றுதான் கேட்டு இருக்கிறார்கள். அது வந்துவிட்டால், நாம் அதையும் செய்யலாம்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இப்போது ஒரு தொகுதியில், கிட்டத்தட்ட 90 ஆயிரம் வாக்காளர்கள் அல்லது 1 லட்சம் வாக்காளர்கள் என்ற நிலைமை எல்லாம் மாறி, இப்போது 2 லட்சம், 2½ லட்சத்திற்கு மேல் போய்விட்டதன் காரணமாக, நம்முடைய மாநிலத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் செம்மையாக பணியாற்றவும் தொகுதிகளிலே சிறந்த முறையில் பணியாற்றவும், ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 6 என்பதை 7 அலலது 8 சட்டமன்றத் தொகுதிகள் என்று மாற்றுகிற அளவிற்கு இந்த டீ-லிமிட்டேசன் கமிட்டி மூலம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வோமேயானால் சிறந்ததாக இருக்கும். நமக்கு ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு 8 சட்டமன்ற இடமாவது இருந்தால் நல்லது. சில பல மாநிலங்களிலே இருக்கிறது. சில மாநிலங்களிலே 7 இடங்கள் இருக்கின்றன. சில மாநிலங்களில் 6 சட்டமன்ற தொகுதிகள் இருக்கின்றன. அந்த நிலை வந்தால், இந்த மன்றத்தையே நாம் மாற்றவேண்டிய அவசியம் வரும். ஆகவே இப்போது 6 பேருக்குதான் இது தாங்குகிறது. 7, 8 என்று வருகிறபோது, வேறு ஒரு மன்றத்தைக் கட்டியதற்குப் பிறகுதான் இதை நாம் செய்ய வேண்டும். ஆகவே அந்த முறையிலே சில பல தன்மைகளை நாம் செய்யலாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும்கூட, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புகளை எல்லாம் செய்யவேண்டும் என்று பல வகைகளிலே எடுத்துச் சொன்னார்கள். இங்கே சொல்லுகின்றபோது, இருக்கின்ற நிலைமைகள் பற்றித்தான் நாம் ஆராய்ந்து செய்யவேண்டும். மெல்லமெல்ல, ஆண்டுக்காண்டு, இருக்கிற நிதி வசதிக்கேற்ப, மற்ற மாநிலங்களையும் ஒப்பிட்டு நோக்கி நோக்கி, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்குச் செய்யவேண்டிய வசதிகளை, வாய்ப்புகளை எல்லாம் செய்து கொண்டு வருகிறார்கள்.



1962-லே நான் முதலிலே இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து. எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது, சம்பளம் 150 ரூபாய் தான். 150 ரூபாய் மட்டுமல்ல. படி வெறும் 15 ரூபாய்தான். நான் அப்போது மாண்புமிகு பெருந்தலைவர் காமராஜ் அவர்களிடம், முதலமைச்சராக இருக்கிறபோது, எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையில், ஒரு உதவியாளரைத் தாருங்கள் என்று நான் கேட்டேன். அப்போது திரு. பக்தவச்சலம் நிதியமைச்சராக இருந்தார்கள். அவர், மற்ற மாநிலங்களை எல்லாம் எழுதிக் கேட்டு, எதிர்க்கட்சித் தலைவருக்கு உதவியாளர் உண்டா என்று கேட்டு, அங்கே எல்லாம் இல்லை என்று வந்தவுடன், எனக்கும் சொன்னார்கள் இல்லை என்று. ஆக 150 ரூபாய் சம்பளமும் 15 ரூபாய் படியும் இருந்தது. அது மெல்ல மெல்ல வளர்ந்து இந்த அளவுக்கு வந்திருக்கிறது என்பதற்காக நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அது ஆண்டுக்காண்டு வளர்ந்து இன்றைய நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிற தன்மையைப் பார்ப்போமேயானால், 1964-லே 250 ரூபாயாக இருந்தது. படிப்படியாக வளர்ந்து 1980-லே 80 ரூபாய்க்கு வந்தது. 1984-லே எல்லாம் சேர்ந்து 1,250 ரூபாய்க்கு வந்தது.

பிற்பகல் 12.50

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 1-6-1989-லே 1750 ரூபாயாக இருந்தது. இப்போது உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம், படி எல்லாம் சேர்ந்து 2,5 0 ரூபாய் என்று வருகிறது. 1,750 ரூபாயிலிருந்து 2.500 ரூபாய்க்கு நகர்ந்ததே போன வருடம்தான். இப்போதுதான் நகர்த்தி இருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லுகின்றபோது மற்ற மாநிலங்களை எல்லாம் சுட்டிக் காட்டி, அங்கே அதிகமாக இருக்கிறது, இங்கே அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதை நானும் சுட்டிக்காட்டத்தான் வேண்டும் அவர்களுக்குச் சாதகமான சிலவற்றை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எனக்குச் சாதகமானவற்றை நானும் எடுத்துச் சொல்கிறேன்.

ஆந்திரப்பிரதேசம் என்று எடுத்துக்கொண்டால் அங்கே 1,000 ரூபாய் சம்பளம் தருகிறார்கள். ஆந்திரப்பிரதேசம் நம்மைவிட வசதியான இடம்தான்; அதிகமான விளைச்சல் கொண்ட இடம்தான். அங்கே 1,000 ரூபாய்தான் தருகிறார்கள். ஆனால் மற்றவைகள் கொஞ்சம் கூடுதலாகத் தருகிறார்கள்.

கேரளாவைப் பொறுத்தவரையில் அங்கே சம்பளம் 300 ரூபாய்தான். மொத்தப்படி 400 ரூபாய். தொலைபேசிப்படி 500 ரூபாய். ஆக, எல்லாம் சேர்ந்து 2,450 ரூபாய்தான் வருகிறது. நமக்கு 2,500 ரூபாய் வருகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 செப்டம்பர் 27

குஜராத்தை எடுத்துக்கொண்டால் சம்பளம் 500 ரூபாய் தான். மொத்தப்படி 500 ரூபாய். தொலைபேசிப்படி 400 ரூபாய். அஞ்சல் செலவுப்படி 200 ரூபாய். உதவியாளர் படி 150 ரூபாய். அவர்களுக்கு மொத்தம் 1,750 ரூபாய் மட்டுமே வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் சொல்லும் போது சம்பளத்தை மட்டும் சொல்லி, இந்தப் படிகளை எல்லாம் காட்டாமலேயே விட்டுவிட்டார் ரொம்ப சாமர்த்திய மாக. ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று சொல்லி, அங்கே கூட்டி னால் 4,000 ரூபாய், 3,000 ரூபாய், 7,000 ரூபாய் வருகிறது என்று சொன்னார். 7,000 ரூபாய் எங்கேயும் போகவே இல்லை.

பஞ்சாப் மாநிலத்தை எடுத்துக்கொண்டால், மொத்தமே 2,000 ரூபாய்தான். அங்கே சம்பளம் தரவில்லை யாருக்கும். ஈட்டுப்படி 900 ரூபாய்; இதர படி 1,100 ரூபாய் தருகிறார்கள்

அதைப்போன்று மேற்கு வங்கத்திலே சம்பளம் 350 ரூபாய். அங்கே ஈட்டுப்படி 300 ரூபாய்; தொகுதிப்படி 500 ரூபாய்; தொலைபேசிப்படி 150 ரூபாய்; மொத்தமே 1,300 ரூபாய்தான் வருகிறது.

ஒரிசாவைப் பொறுத்தவரையில் எல்லாம் சேர்ந்து 1,950 ரூபாய் வருகிறது. மற்ற சில இடங்களிலே நாலாயிரத்துச் சில்லரைக்குமேல் வருகிறது ஒரே ஒரு இடம்தான்—இராஜஸ் தானத்தில் ரூபாய் ஐயாயிரத்துச் சில்லரை வருகிறது. எல்லாம் சேர்ந்து. கொடுக்கக்கூடாது என்ற எண்ணம் எங்கள் யாருக்கும் கிடையாது. கொடுக்க வேண்டுமென்பதுதான் எங்கள் எண்ணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள பட்டியலைப் படிக்கிறார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் எல்லாம் சேர்ந்து 4,050 ரூபாய்தான் கிடைக் கிறது. சம்பளம் 850 ரூபாய்தான். மற்றைய படி எல்லாம் சேர்ந்து 4.050 ரூபாய் வருகிறது; 4,000 அல்ல.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி 10,000 ரூபாய் வரையில் கூடப் போகலாம். அது வரையில் எங்களுடைய வர் வினத்தை நீங்கள் எல்லாம் கொஞ்சம் பெருக்கிவிட்டு, போகிற வழியைக் கொஞ்சம் அடைத்துக் கொடுத்தீர்களானால், அந்த அளவுக்குக் கூடிப் போகலாம்; போகின்ற எண்ணம் படைக்கவர்



1991 செப்டம்பர் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கள்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சராக வீற்றிருக் கிறார்கள் என்பதை மற்றைய மானியக் கோரிக்கைகளின்போது நீங்கள் நன்றாகக் கண்டிருப்பீர்கள். ஆக, அந்தவகையிலே சொல்லும்போது இன்னும் பல்வேறு வகைகளிலே நாம் காண லாம்.

அதே மாதிரி இங்கேதான் உறுப்பினர்களுக்கு நாள் படி குறைவு என்றார்கள். இங்கேதான் என்பது அல்ல. ஒரே ஒரு இடம்-மகாராஷ்டிரத்திலே 150 ரூபாய் தருகிறார்கள். தமிழ் நாட்டில் 100 ரூபாய் தருகிறோம். ஒரு நாள் படி. கர்நாடகத் திலே 75 ரூபாய்தான் தருகிறார்கள். உத்திரப்பிரதேசத்திலே 85 ரூபாய். ஆந்திரப்பிரதேசத்தில் 60 ரூபாய். மேற்குவங் காளத்தில் 49 ரூபாய். மத்தியப்பிரதேசத்தில் 75 ரூபாய். குஜராத்தில் 70 ரூபாய். கேரளத்தில் 70 ரூபாய். இராஜஸ் தானத்தில் 100 ரூபாய். ஒரிசாவில் 75 ரூபாய். அஸ்ஸாமில் 50 ரூபாய். அரியானாவில் 100 ரூபாய். ஜம்மு—காஷ்மீரில் 100 ரூபாய். பீகாரில் 100 ரூபாய், ஆக, அந்த வகையிலே நாம் பின்னடைந்து இருக்கவில்லை என்பதை எடுத்துக்கூற விரும்பு கிறேன்.

இங்கே வேறுபல சூழ்நிலைகளையும் மற்றவைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே உறுப்பினர்களுக்கு ஒரு நாளுக்கு 100 ரூபாய் தரப்படுகிறது. மாநிலத்தை விட்டு வெளியே வெளிமாநிலங்களுக்குப் போனால் நாள் ஒன்றுக்கு 250 ரூபாய் தரப்படுகிறது. இதுதான் 'லேட்டெஸ்ட்' நிலவரம்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் சென்ற ஆண்டு கணக்கைத்தான் சொல்கிறேன் (சிரிப்பு). கணக்கு என்னிடமா இருக்கிறது? தருகிற கணக்கைச் சொல் கிறேன். ஆனால் போன ஆண்டு இருந்த நிலையை எடுத்துச் சொல்லி இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆக இங்கே கொடுத்திருக்கிற கணக்கில் இதிலே சிலது சரியாக இருக்கும். சிலது இப்போது இந்த ஆண்டு மாற்றி இருக்கலாம். ஏனென்றால், நாம் செப்டம்பரில் நிற்கின்றோம். மார்ச் மாதம் நடைபெற்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் கொஞ்சம் மாறுதல் செய்திருக்கக் கூடும். ஆனால் போன ஆண்டு இருந்த நிலையை எடுத்துச் சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். சிலது எல்லாவற்றையுமா அறிவித்தார்கள்

என்று நான் சொல்ல முடியாது. ஆக இருக்கிற நிலையை
சொன்னேனே தவிர, இந்த நிலைமைகளுக்கு நாம செய்திருப்
பது, அந்த வகையிலே குறைபாடு உடையது அல்ல என்பதை
சுட்டிக்காட்டுவதற்காகத்தான், அதை நான் குறிப்பிட்டு எடுத்துச்
சொன்னேன். இப்படி பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி
மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்து தெரிவித்திருந்தாலும்
கூட, இங்கே வேறு பல வசதிகள்—கட்டிடம் வேண்டும்,
விடுதிகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்வார்கள். விடுதி
களைப் பற்றி நமது மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் சட்ட
மன்றப் பேரவை உறுப்பினர்களுக்குப் போதுமான அளவிற்கு
தகுதிபடைத்ததாக அமையவில்லை என்பதை நாம் ஒப்புக்
கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால், வேறு பல மாநிலங்
களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தந்திருக்கிற வசதி
வாய்ப்பினைனுடைய அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும்
'பிளாக், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்டியிருப்பதைப்
போன்று, தனி வீடுகளாக, 6, 6 வீடுகள் கொண்ட பிளாக்கு
களாக கட்டுகின்ற அந்த முயற்சியும் எடுத்து, ஒவ்வொருவருக்
கும் அவ்வப்போது வாடகை என்றில்லாமல் ஒவ்வொருவருக்கும்
அவர்கள் இந்தச் சட்டமன்றப் பேரவை உறுப்பினாரக
இருக்கிற காலம் வரையிலும் அந்த வீட்டில் அவர்கள் இருக்க
லாம் என்கின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்ற
எண்ணம்தான் அரசுக்கு இருக்கிறது. அதற்கான இடவசதி
மற்றவைகள் எல்லாம் வருகின்றபோது ஒவ்வொருவருக்கும்
தனியாக ஒரு வீடு, சட்டமன்ற உறுப்பினர் பதவிக் காலம்
இருக்கிற வரையில் தருதல் வேண்டும் என்கின்ற எண்ணத்தைத்
அரசு கொண்டிருந்தாலும் கூட, அதற்குப் பெரும் செலவு
ஏற்படுகிறது என்கின்ற காரணத்தினாலே தான் அதற்கான
அளவிற்கே நிதி வசதி இல்லை என்ற காரணத்தினாலே அதைச்
செய்துகொடுக்கமுடியவில்லை. அதற்கான காலம் வருகின்றபோது
கட்டாயம் இந்த வசதி வாய்ப்பினை நாம் செய்துதான் தீர
வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கார் வசதி எல்லாம் சொன்னார்கள்.
கடன் வசதி எல்லாம் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மணி 12-56.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கார் வசதி எல்லாம்
செய்யவேண்டுமானாலும் கூட, இப்போதே நான் இங்கே கணக்கு
வைத்திருக்கிறேன். இதையெல்லாம் எடுத்துச்சொல்வதற்கு
நேரமில்லை. கிட்டத்தட்ட 180 பேருக்கு மேல் இங்கே
டெலிபோன் சார்ஜே கட்டவில்லை. ஏற்கெனவே இருக்கின்ற
உறுப்பினர்களும், மற்றவர்களும் பல வகைகளில் கட்டவில்லை.
ஆகவே ரூ. 1 இலட்சம், ரூ. 2 இலட்சம் காருக்குக் கொடுத்து
விட்டு, வாங்குவது என்பது கடினம். (குறுக்கீடுகள்) அந்



நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்கிறேன். இருக்கிற நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்கிறேன். ஆகவேதான் அவைகளை எல்லாம் பார்த்திருக்கிற சூழ்நிலையிலிருந்து ரூ. 565 கோடிக்கு மேல் நாம் துண்டு விழுவதை எப்படி சரிக் கட்டுவது என்பதை ஒரு பக்கம் யோசித்துக் கொண்டே இருக்கும்போது, அதற்கான சூழ்நிலைகளையொட்டி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியின் பேரிலே அவர் களின் ஒப்புதலின் பேரிலே இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பெறுகிற சம்பளத்தை நான் முதலிலே சொன்னேன்.

ஆகவே மாதச் சம்பளம் ரூ. 1,000 ஆகவும், அஞ்சல் படி ஈட்டுப்படி ரூ. 800 தனியாகவும், தொலைபேசிப்படி ரூ. 700 ஆக மொத்தம் ரூ. 2,500 ஆக இருப்பது இனிமேல் தொகுதிப்படி என்ற அளவிற்கு ரூ. 250-ஐ கூட்டிக் கொடுக்கலாம் என்கின்ற அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஆக, இந்தத் தொகையோடு ரூ. 250. அமைச்சர்களுக்கு ரூ. 3,000 என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அமைச்சர் சம்பளத்தை எந்த வகையிலும் இப்போது கூட்டவில்லை. வேறு பல மாநிலங் களில் ஒப்பிட்டிருக்கின்ற போது இப்போது தாங்கக் கூடியது இவ்வளவு தான். மாநிலத்தில் இருக்கிற பல்வேறு வகைக்கு நாம் மறுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றபோது இதை மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த நேரத்திற்கேற்றபடி ரூ. 250-ஐ தொகுதிப்படி என்ற அளவில் கூட்டிக் கொடுக்கப்படும்.

இரயில்வே பயணத்திற்கு ஒருகிலோ மீட்டருக்கு 4 காசு என்று இருப்பதை மாற்றி; இப்போது 10 காசு என்று ஆக்கப்படுகிறது. அதைப்போல பஸ் மூலம் பயணம் செய்கிறவர்களுக்கு 12 காசு என்பதை மாற்றி 25 காசு என்று நிர்ணயிக்கப்படுகின்றது. அதைப்போல பஸ் இல்லாத இடங்களுக்கு என்று கொடுக்கப்படு கின்ற 23 காசு என்பது 50 காசாக மாற்றியமைக்கப்படுகின்றது.

ஒவ்வொரு கூட்டத் தொடரின் போதும் உறுப்பினர்கள் தமது துணைவியாரையோ அல்லது துணைவரையோ மட்டும் ஒரு தடவை ரயில் மூலம் சென்னைக்கு அழைத்து வந்து போக, உரிய ரயில் கட்டணத்தை இனிமேல் ஏற்றுக்கொள்வது என்கின்ற அளவிற்கும் அரசு முடிவு செய்திருக்கிறது.

சட்டமன்றப் பேரவை கூடும் நாட்களில் மட்டும் காலையி லிருந்து இரவு வரை கூடுதல் நேரம் பணிபுரியும் சட்டமன்றப் பேரவையின் இன்றியமையா அலுவலர்களுக்கு அளிக்கப்படும் செலவீட்டுப்படி பற்றிய முடிவுகளைப் பற்றி சார்புச் செயலாளர், மாண்புமிகு பேரவைத் தலைவருடைய தனிச் செயலாளர் ஆகியவர்களுக்கு இதுவரையில் உணவுப்படி ரூ. 15 ஆக கொடுக் கப்பட்டு வருவது, இனி உணவுப்படி ரூ. 20 ஆகவும் அவர்களுக்கு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 செப்டம்பர் 27

கூடுதலாக பயணப்படி என்கிற அளவிற்கு காலையில் வந்து மாலையில் செல்ல வேண்டியிருப்பதன் காரணமாகவும் பயணப் படியாக ரூ. 7.50-ம் சேர்த்து வழங்கப்படும் என்று கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

பிரிவு அலுவலர்கள், நிருபர்கள், செயலாளரின் தனிச் செயலாளர் மற்றும் பிரிவு அலுவலர்களின் பதவிக்கு சமமானவர் கள் ஆகியவர்களுக்கு உணவுப்படி ரூ.13, ரூ.18 ஆகவும் மற்றைய படி ரூ. 7.50-ம் சேர்த்துத் தரப்படுகின்றது.

உதவிப் பிரிவு அலுவலர்கள், சார்ஜன்ட், சுருக்கெழுத்து தட்டச்சர், தட்டச்சர் மற்றும் உதவி பிரிவு அலுவலர் பதவிக்கு சமமானவர்களுக்கு உணவு படி ரூ.11கொடுப்பது 16 ஆகவும் அவர் களுக்கு கூடுதலாக படி ரூ. 7½-ம் வழங்கப்படும். பதிவறைக் காப்பாளர், பதிவுறுஎழுத்தர், ரோட்டா படி எடுப்பு இயக்குபவர், பதிவு உதவியாளர், அலுவலக உதவியாளர் ஆகியோர்களுக்கு ரூ. 9 கொடுத்தது ரூ. 14 ஆகவும் ரூ. 7½ கூடுதலாகவும் தரப் படுகிறது. சார்பு ஆய்வாளர் மற்றும் உதவியாளர்களுக்கு பாதுகாப்பிற்காக இருக்கின்ற காவலர்களுக்கு 7½ ரூபாய் ஒரு நாளைக்கு கொடுக்கப்படுகிற படி 15 ரூபாயாக தரப்படும். தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கு 6 ரூபாய் கொடுப் பது 12 ஆக கொடுக்கப்படும். இந்த அறிவிப்பு 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் நாளிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும் என்று எடுத்துச் சொல்லி பெரிய வெட்டு விழுந்ததன் காரணமாக இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 1—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பிற்பகல் 1 மணி. கில்லட்டின் நேரம். எனவே விவாதம் முடிவுற்றது. மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 9— மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமை யிடப் பணியாளர்கள் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படு படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மெ. ஆண்டி அம்பலம்.



1991 செப்டம்பர் 27]

திரு. மெ. ஆண்டி அம்பலம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர். திரு. மெ. ஆண்டி அம்பலம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விருப்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே.குமாரதாஸ். இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர். டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியிடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஜி.பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 45,29,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்னும் நிதியமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண்.7—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 7 மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். டாக்டர். தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக்கொள்ள பெற்றது திரு ஜி. பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுருத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகின்றேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு .ஜி பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறறுக்கொள்ளபெற்றது.

மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,89,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் நிதியமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்

ஏற்போரே அதிகம் என்றும் கருதுகிறேன். ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெற்றது.

இ. கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை என் 8 தேர்தல்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஆர் சிங்கரம் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது டாக்டர் தே. குமாரதாஸ். தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்

டாக்டர் தே. குமரதாஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே .குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது திரு ஜி. பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறே

திரு ஜி. பழனிசாமி: இல்லை.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ 11,98,74,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்னும் நிதியமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 42, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு சோ. இராசாராமன்.

திரு. சோ. இராஜாராமன்; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. சோ. இராசராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது. திரு ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டு தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் பற்றிய 42 ஆம் எண். மானியக்கோரிக்கையின் கீழ் ரூ 342,13,31,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(உ.) கோரிக்கை எண் 43 பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மானியக் கோரிக்கை எண். 43 பல்வகை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ள பெற்றது டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட் தீர்மானத்தை வலியுருத்த விரும்புகிறா என்று அறிய விரும்புகிறேன்

டாக்டர் தே. குமாரதாஸ்; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தேகுமாரதாஸ். அவர்களுடையவெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

பிற்பகல் 1.05

திரு ஜி. பழனிசாமி. தன்னுடை வெட்டு தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு ஜி. பழனிசாமி; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஜி பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

பல்வகை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 183,24,24, 000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற்ற வேண்டுமென்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஊ.) கோரிக்கை எண்.61—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 61-பல்வகை மூலதனச் செலவு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு ஆர். சிங்காரம்.



திரு. ஆர். சிங்காரம்; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர் சிங்காரம அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 22,43,60,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டுமென்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(எ). கோரிக்கை எண் 62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண். 62–மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஆர் சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது. திரு. ஜி. பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறியவிரும்புகிறேன்

திரு ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுகொள்ளப் பெற்றது

மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 346,43,03,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டு மென்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி.)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## 5. அறிவிப்புகள்.

### (அ). நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு—1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்." 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார் மாண்புமிகு நிதி அமைச்சர்.

## 5. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்

### நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிகள் ஆய்வு செய்தல்.

1991—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு** சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1991) (ஆய்வுக்கு எடுத்துக்) கொள்ளப் பெறவேண்டும்."
என கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி உங்களுடைய கருத்துக்களை அடுத்த சட்ட முன்வடிவின் மீதும் சேர்த்தே சொல்லலாம்.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி இதுபோன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்ந்து இந்த அவையிலே தேர்தலை நடத்தவேண்டும் என்பதற்காக சட்டங்களை கொண்டுவந்தபோது—இன்றைய தினத்திலே உள்ளாட்சி அமைப்புகள் இருப்பதன் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளுடைய நிர்வாகத்தை ஒழுங்காகச் செய்யமுடியும். அநேகமாக உறுதியாக நாங்கள் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கூட – இன்றைக்கு அரசாங்கம் தேர்தலை நடத்துவதிலே தயங்குவது என்பது சரியில்லை. காரணம் தேர்தலின் மூலம் தான் மக்களுடைய . . . .

**1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம்தேதியிட்ட தமிழ்நாடு தப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அரசு தேர்தலை நடத்துவதற்கு தயங்கு
கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்தப் பேரவையில்
ஒன்றை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய
இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி
அவர்கள் மக்களைச் சந்திப்பதற்கோ தேர்தலைச் சந்திப்ப
தற்கோ எந்த காலகட்டத்திலும் தயங்கியது இல்லை (மேசை
யைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

திரு. ஜி. பழனிசாமி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று தான்
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி. ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி
அவர்களுக்கு உங்கள் வாயிலாக ஒரு உண்மையை சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். நினைவுபடுத்த விரும்புகிறேன். முதலில் உள்
ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல்கள் நடைபெறும் என்று ஆட்சிப்
பொறுப்பு ஏற்ற உடனே இந்த அரசு அறிவித்த போது அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர
வேறு எந்த அரசியல் கட்சியும் அதை வரவேற்கவில்லை. அப்
போது எல்லா அரசியல் கட்சிகளும், அந்தக் கட்சிகளின் தலை
வர்களும் தேர்தலை ஒத்தி போட வேண்டும் ஒத்தி போட
வேண்டும் என்று தான் அறிவிப்புக் கொடுத்தார்கள். உங்கள்
கட்சியைச் சேர்ந்தவர்களும், உங்கள் கட்சித் தலைவர்களும், அத்
தகைய அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதெல்லாம்
பிரஸ் கிளிப்பிங்ஸில், பைலில் நிச்சயமாக இருக்கின்றன. (மேசை
யைத் தட்டும் ஒலி) அதன் பிறகு சட்ட மன்றக் கூட்டத் தொடர்
வந்து விட்டது. எனவே சட்ட மன்றக் கூட்டத் தொடர் நடை
பெற்றுக் கொண்டிருக்கும் போது உள்ளாட்சி மன்றத் தேர்தல்
களை எவ்வாறு நடத்த முடியும் என்று எங்களுக்குப் புரியவில்லை.
ஆகவே, நிச்சயமாக இந்த அரசு உள்ளாட்சி மன்றத் தேர்தல்
களை நடத்த தயங்கவில்லை; தயங்காது; உரிய நேரத்தில் இந்
தத் தேர்தல்கள் நடைபெற்றே தீரும். (மேசையைத் தட்டும்
ஒலி).

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதை நான்
ஏற்றுக் கொள்கிறேன். காரணம் எங்கள் கட்சி கருத்து சொன்ன
போது சட்டமன்ற நாடாளுமன்றத்தேர்தல்களைச் சந்தித்ததற்கு
பின்னால் ஒரு மாதத்திற்குள் இடைத் தேர்தலையும் உள்ளாட்சி
மன்றத் தேர்தல்களையும் சந்திப்பதிலே மக்களுக்கு ஒரு சில சங்
கடங்கள், சிரமங்கள் ஏற்படும் என்று சொல்லித்தான் எங்க
ளுடைய கட்சி கருத்துக்களைத் தெரிவித்தது.



அதே போல் இடைத் தேர்தல்கள் தமிழகத்திலே 4 தொகுதி
களில் நடைபெறுவதன் மூலமாக தேர்தல் பிரச்சாரங்களில் வரக்
கூடிய சட்டச் சிக்கல்களை அனுசரித்து தேர்தல் அதிகாரிகள் மறு
பரிசிலனை செய்ய வேண்டும், அரசாங்கம் மறுபரிசிலனை செய்ய
வேண்டும் என்று சொல்லி எங்களுடைய கட்சிகள் சார்பாக கருத்
துக்களை வெளியிட்டு இருந்தோம். இருந்தபோதிலும்கூட மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய தமிழக அரசும் தேர்
தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்ற கட்டாயத்தினை
நீங்கள் அறிவித்ததை இன்றைக்கு நாங்கள் ஏற்றுக் கொள்கின்
றோம். யாரும் மறுக்கவில்லை. இருந்த போதிலும் கூட காவிரி
நதி நீர் பிரச்சினையின் காரணமாக ஒத்திவைத்து, அது மிகப்
பெரிய, தமிழகத்தில் இருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினை
யாக ஏற்றுக் கொண்டீர்கள். நாங்கள் அனைவரும் அதை வர
வேற்றோம். இருந்த போதிலும் கூட சட்டமன்றக் கூட்டத்தில்
கூட மக்களுடைய நலத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி
யிருந்த போதிலும் கூட வரக்கூடிய இந்தக் காலங்களில் இடை
யிலே உடனடியாக உங்களுடைய நலத் திட்டங்கள், தமிழக
அரசு எடுத்து இருக்கக்கூடிய நலத் திட்டங்கள் முழுமையாக
மக்களுக்குப் போய்ச் சேரும்படி செய்யவேண்டுமென்றுசொன்னால்
இந்த உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தல்களை கண்டிப்பாக
நடத்த வேண்டும். மக்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியின் மூலமாக நிச்சயமாக அந்தத் தேர்
தல்கள் நடைபெறும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.
காரணம் நான் இப்போது சொல்லவில்லை, நான் பலபேர்களை
சந்திக்கின்ற போது பல மக்களைச் சந்திக்கின்ற போது மக்கள்
சொல்லுவது எல்லாம் திரும்பவும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்
தால் தேர்தலை நிச்சயமாக நடத்த மாட்டார்கள் என்ற ஒரு
கருத்தை, பல இடங்களிலிருந்து பேசக் கூடிய கருத்துக்களை
நான் உங்களிடத்திலே வெளிப்படுத்துகிறேன். ஆகவே உடனடி
யாக இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்களை நீங்கள்
நடத்த வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்
கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தேர்தல்கள் தள்ளிப்போடப்பட்டு இருக்கிறது.
உடனடியாக நடத்த வேண்டும் என்று இங்கே நம்முடைய
கம்யூனிஸ்டு கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறி
னார்கள். அவர்கள் ஒன்றை அறிந்து இருக்கவில்லை என்று
கருதுகிறேன். தேர்தல்களை தள்ளிவைத்ததற்கு அரசு மட்டும்
காரணம் இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. தேர்தல்
களை தள்ளிப்போடவேண்டும் என்று [illegible] பெற்றிருக்
கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.
தேர்தல்களில் இட ஒதுக்கீடு வேண்டும் என்று [illegible] சென்னை
உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கு [illegible] அங்கே உயர்

நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்கள் தேர்தல்களை தள்ளி வைக்கவேண்டுமென்று தடையாணை பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற அந்தத் தீர்மானம். ஏன் அவசரமாக ஒரு தேர்தல் நடத்துவதற்கான அனுபவம் நமக்கு கிடைத்திருக் கிறது என்று சொன்னால், கடந்த காலங்களிலே தேர்தல் நடைபெறாமல் தனி அதிகாரிகளால் நிர்வாகம் நடத்தப் பட்டது. அப்படி நடத்துகிறபோது அரசு எவ்வளவு திட்டங்களை அறிவித்தாலும் அந்தத் திட்டங்களை நிறைவேற்று வதற்காக ஒன்றியங்களுக்கு ஆணை பிறப்பித்திருந்தாலும், அந்தத் திட்டங்கள் முழுமையும் வெற்றிபெறாத ஒரு சூழ்நிலைமை இருந்த காரணமும் அதனால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஏற்பட்டு இருக்கக்கூடிய கடன்களும் கடன் சுமையும் அதிகரித்து இன்றைய தினம் கூட பஞ்சாயத்துக்களுக்கும் மக்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன; தகராறுகள் இருக்கின்றன என்று சொன்னால், அதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால் கடன் சுமைதான் பஞ்சாயத்திலே செலவழித்ததாக தனி அதிகாரிகள் காலத்திலே கடன் எழுதப்பட்டு இப்போதுகூட பஞ்சாயத்துகளுக்கு வரக்கூடிய சட்டு மானியங்களையெல்லாம் அந்தக் கடனிலே வரவு வைத்துக்கொள்கிறார்கள். அதனுடைய விளைவாகக் குடிநீர் வழங்கலை சீரமைக்க முடியவில்லை. லைட் போட முடிய வில்லை. சுகாதார ஏற்பாடுகள் செய்ய முடியவில்லை; இந்தக் கடன் முழுமையும் ஒன்றியத்திலே, முன்னால் செலவழித்ததாக எழுதப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைத்துக்கொள்கிற காரணத் தாலேதான் இன்னமும் பஞ்சாயத்துகள் செயல்பட முடியாத ஒரு செயலற்ற சூழ்நிலையும் பஞ்சாயத்துக்கும் வாக்களித்த மக்களுக்கும் ஒரு கடுமையான பிரச்சினை உருவாகியிருப்பதையும் அனுபவமாக நாம் பார்க்கிறோம். எனவேதான் இந்தக் காலம் என்பது நீட்டிக்கப்படுவதினுடைய விளைவாக மேலும் மேலும் ஒரு சிக்கல் ஏற்படும் என்ற காரணத்தாலேதான் முன்னாலே எவ்வளவு சிரமங்கள், இடையூறுகள் இருந்தால்கூட எதிர் காலத்திலே தேர்தலை விரைவாக நடத்தி, ஜனநாயக முறைப்படி அரசு அறிவிக்கிற திட்டங்கள் கீழே இருக்கக்கூடிய அந்த ஊராட்சி ஒன்றிய மக்களுக்கு நேரடியாக கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகளுக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவது மிகமிக அவசிய மானதும் அவசரமானதும் ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இந்தச் சட்டமுன்வடிவில் குறிப்பிட்டுச் சொல்லுகையில் சட்டமன்றப் பணிகள் வந்து குறுக்கிட்டதனால் தேர்தல்களை நடத்த முடியாமல் போய்விட்டது என்று குறிப் பிட்டார்கள். சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிய இருக்கிறது. ஒருவேளை மழைக்காலம் என்று, இந்த இரு மாதங்களைக் கடத்தலாம். ஆனால் ஏழையெளிய மக்கள் எளிதில் சென்று சந்தித்து உள்ளாட்சி மன்றங்களின் மூலம் காரியங்களை ஆற்றிக் கொள்வதற்கு நிச்சயமாக உள்ளாட்சி மன்றங்களுக்கு தலைவர்கள் தேர்ந்தெடுக்கபபடுவதே நல்லது. ஆகையினாலே வருகிற டிசம்பரிலோ, ஏன் என்றால் அதற்கு அடுத்த ஆண்டு மறுபடியும் சட்டமன்றக் கூட்டத்தொடர் வந்து விடும். அல்லது எவ்வளவு கூடிய விரைவாக தேர்தல்களை நடத்துகிறார்களோ அவ்வளவு விரைவாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியத்தின் மீது பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன் னார்கள். உள்ளாட்சி மன்றங்கள் பொதுவாக நிர்வாக அமைப்பு களுக்கு கொள்கை ரீதியிலே சட்டம் இயற்றுகின்ற வேலை கிடை யாது. ஆகையினால் உள்ளாட்சி மன்றங்களில் அரசியல் தேவை யில்லை என்று அறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால் தொடர்ந்து ஒவ்வொரு இடத்திலேயும் அது அரசியல் கட்சிகளினுடைய போர்க்களமாக இப்போது ஆகிவிட்டது. அரசியல் ரீதியாக நடத்த வேண்டுமென்றாலும் எங்களைப் பொறுத்தவரையிலே நாங்கள் அதை வரவேற்கிறோம். அரசியல் அதில் கலக்க வேண்டாம். பொதுவாக நடத்தவேண்டும் என்கின்ற ஒரு யோசனையையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு எஸ். ஆர். பாலசுப்பரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, ஒன்றியங்களில் தனி அதிகாரிகளுடைய நியமன காலத்தை நீட்டிக்கின்ற சட்ட முன்வடிவுகள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. தேர்தல்களை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதை நாமெல்லாம் அறிவோம். இடையிலே நடத்தி இருக்க முடியாதா என்று கேட் டார்கள். சட்டமன்றக் கூட்டத்தொடரை எக்காரணத்தைக் கொண்டும் தள்ளி வைக்க முடியாத நிலை இருந்தது. இப்போதே கூட... மிகவும் காலம் கடந்த இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் கூட்டப்பட்டதோ என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் நமக்கு, விவாதிப்பதற்குப் போதிய நேரம் கிடைக்க வில்லை: அவகாசம் கிடைக்கவில்லை. இரண்டு வேளையும்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பரமணியன்] [1991 செப்டம்பர் 27

உட்காரவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வு என்பதே கிடையாது. படிப்பதற்கு நேரமில்லை என்று புகார் கூறுபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். எனவேதான் தள்ளி வைக்கப்பட்டது. அதற்கிடையிலே உயர்நீதிமன்றத்திலே தொடரப்பட்ட வழக்கிலே ஒரு தடையாணையும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்தத் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொன்னால் இட ஒதுக்கீடுகளைச் செய்து அதன் அடிப்படையிலே தான் தேர்தல் நடத்த வேண்டுமென்று உயர்நீதி மன்றம் ஒரு தடையாணையைப் பிறப்பித்திருக்கிறது. இன்னும் அந்த வழக்கு அப்படியே இருக்கிறது. ஆக, தேர்தல் நடத்த வேண்டுமென்றால் முதலிலே ஏற்கெனவே இருந்த சட்டத்தை வைத்துக் கொண்டே நடத்த முடியுமா? அல்லது புதிதாக இங்கே சட்ட முன்வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு அது நிறைவேற்றப்பட வேண்டுமா என்ற ஒரு சட்டச் சிக்கல் இருக்கிறது.

பிற்பகல் 1-20

அதுபோக, அந்தச் சட்டமே-ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அப்படியே உயிர்ப்பித்துக் கொள்ளலாம் என்றாலும் கூட அந்தச் சட்டத்தின் அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப் பட்டாக வேண்டும், பெண்களுக்கு என்று தனியாக, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு-ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட்ட் ரைப்ஸ்-க்குத் தனியாக என்று ஒதுக்கப்பட்டாக வேண்டும். அந்த வேலைகளை யெல்லாம் அரசாங்கம் விரைவிலே செய்யவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமுன்வடிவு அவசியப்படும் என்றுதான் நான்கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டப்பேரவையிலே மீண்டும் சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்றே நான் கருது கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களில் இருக்கின்ற குறை களையும் தவறுகளையும் நிவர்த்தி செய்து, அனைத்துத் தரப்பி னருக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரைவிலே இந்தச் சட்டப்பேரவையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதோடு, தேர்தலை எவ்வளவு விரைவிலே நடத்த முடியுமோ அவ்வளவு விரைவிலே நடத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம், நீண்ட நெடு நாட்களுக்கு உள்ளாட்சிகளிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல், தனி அதிகாரி களைக் கொண்டு அங்கே நிர்வாகம் நடத்துவது முறையாக இருக்காது. ஏனென்றால், இப்பொழுது அவர்களிடத்திலே போக முடிவதில்லை. தனி அதிகாரிகளிடத்திலே சென்று, அவர் களிடத்திலே தங்களுடைய குறைகளை மக்கள் சொல்ல முடியாத காரணத்தால் நம்மிடத்திலே வருகிறார்கள்-மக்கள் பிரதிநிதி களிடத்தில் வருகிறார்கள்- எம்.எல்.ஏ.க்களிடத்திலே வருகிறார் கள்; எம்.பி.க்களிடத்திலே வருகிறார்கள். எம்.எல்.ஏ.க்களும்,



1991 செப்டம்பர் 27] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

எம்.பி.க்களும், எந்தத் தெருவிலே எந்த விளக்கு எரியவில்லை, எந்தத் தெருவிலே இருக்கிற குழாயிலே தண்ணீர் வரவில்லை என்று தினசரி பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பெரிய அளவில் இருக்கும் தொகுதியில் திரு. சிங்காரம் அவர்கள் இங்கே சொன்னதைப்போல, என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 350 கிராமங்கள் இருக்கின்றன. இரண்டு மாவட்டங்களிலே என்னுடைய தொகுதி இடம் பெற்றி ருக்கிறது; மூன்று தாலுக்காக்களிலே என்னுடைய தொகுதி இடம் பெற்றிருக்கிறது; 350 கிராமங்களுக்கு என்னாலே முழுமை யாகப் பணியாற்ற முடியுமா உள்ளாட்சி நிர்வாகத்தைப்பொறுத்த வரையில் என்றால் அது சிரமம். எனவே, விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும்.

அதேநேரத்திலே, சட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற நேரத்தில், இந்தக் குறைகளையெல்லாம் போக்குவதோடு அல்லாமல், முழுமையான கிராம ராஜ்யமாகவும், நகரங்களிலே முழுமையான ஜனநாயகம் உள்ள ஒரு நிர்வாகம் நடப்பதற்கு ஏற்றவகையிலே விரைவிலே சட்டங்களை நிறைவேற்றி, தேர்தல் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர் கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனி அதிகாரிகளை வைத்துக் கொண்டு, ஸ்பெஷல் ஆபீசர்ஸை வைத்துக் கொண்டு உள்ளாட்சி நிர்வாகத்தை வெகுநாட்கள் நடத்துவது நல்லது அல்ல என்பது இந்த அரசுக்கு நன்றாகப் புரிந்த ஓர் உண்மையாகும். தனி அதிகாரிகளை வைத்துக் கொண்டே நீண்ட காலம் உள்ளாட்சி நிர்வாகத்தை நடத்துகிற எண்ணமும் இந்த அரசுக்குக் கிடையாது. ஆனால், மீண்டும் ஒன்றை அனைவருக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த மாதம் ஆகஸ்ட் 30-ஆம் தேதி இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும் என்று இந்த அரசு அறிவித்த போது எல்லாக் கட்சிகளுமே எதிர்க்கட்சிகளுமே இது too early, too early, தள்ளிப் போடுங்கள், தள்ளிப்போடுங்கள் என்று அனைவரும் எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். இன்று அதற்குப் பின்னர் ஒரு மாதம் கூட இன்னும் ஆகவில்லை. இன்று என்ன? இன்றைக்கு செப்டம்பர் 27. அவ்வளவுதான். இன்னும் அந்தத் தேதிக்குப் பிறகு 30 நாட்கள் கூட முடியவில்லை. அதற்குள் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் நீங்கள் தாமதப் படுத்துகிறீர்கள், தேர்தல்களை நடத்த இந்த அரசு தயங்குகிறது பன்ற குற்றச்சாட்டுக்களை எழுப்பினால் இந்தக் குற்றச்சாட்டுக் களின் இத்தகைய வாதங்களில் எத்தகைய நியாயம் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, ஏற்கனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்களும் சுட்டிக்காட்டியது போல, உயர்நீதிமன்றத்தில் ஒரு தடை ஆணை இருக்கிறது. எனவே, இந்தத் தடை ஆணையை வெக்கேட் செய்வதற்கோ அல்லது வேறு புதிய சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கோ இந்த அரசு பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கைகளை எடுத்து, கூடிய விரைவில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவை தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகராட்சி மன்றங்கள் மற்றும் நகராட்சி மன்றக் குழுக்களுக்கு அம்பத்தூர் நீங்கலாக 98 நகராட்சி மன்றங்களுக்கும் 3-3-1991 முதல் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இந்தத் தனி அலுவலர்கள் பதவிக்காலம் 30-9-1991 வரை ஏற்கெனவே நீடிக்கப்பட்டிருந்தது. நகராட்சி நகரியமாக இருந்து 1-11-1990 முதல் நகராட்சி மன்றமாக அமைக்கப்பட்டுள்ள அம்பத்தூர் நகராட்சி மன்றத்திற்குத் தனி அலுவலர் நியமிக்கப்பட்டார். இந்தத் தனி அலுவலர்களின் பதவிக்காலம் ஏற்கெனவே 30-9-1991 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 மாநகராட்சிகளுக்கு முறையே 30-11-1973, 29-7-1984 மற்றும் 1-5-1981 முதல் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்தத் தனி அலுவலர்களின் பதவிக்காலம் ஏற்கெனவே 30-9-1991 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் அனைத்து 99 நகராட்சிகளுக்கும், மற்றும் சென்னை மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளுக்கும் 30-8-1991 அன்று தேர்தல்களை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்ய உத்தரவிட்டிருந்தார்கள். ஆனால், காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக கவலை அளிக்கும் வகையில் திருப்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, தமிழக மக்கள் அனைவரும் ஒரு கொதிப்பான மன நிலையில் இருந்தார்கள். எனவே, 31-7-1991 அன்று தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதால், அனைத்து 99 நகராட்சிகளுக்கும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளுக்கும், தற்போது பணிபுரியும் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 31-3-1992 வரை நீட்டிப்பதற்கு, இச்சட்டத்தை தக்கவாறு திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

பிற்பகல் 1-25

31-3-1992 வரை தனி அலுவலர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டாலும், அதற்கு முன்பே தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவி ஏற்கும் காலம்வரை, தனி அலுவலர்களின் பதவிக் காலம் இருக்கு



மென்று வழிவகை செய்யப்பட்டது. ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் ஆகியவற்றுக்கு 3-3-1991 முதல் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இந்தத் தனி அலுவலர்களின் பதவிக் காலம் 30-9-1991 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 30-8-1991 அன்று ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். இதற்காகத் தேர்தல் அறிக்கையும் 24-7-1991 அன்று வெளியிட்டிருந்தது. ஆனால், காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக, கவலை கொள்கிற திருப்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, தமிழக மக்கள் ஒரு கொதிப்பான மன நிலையில் இருந்தார்கள். எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் 30-7-1991 அன்று ஒத்திவைக்கப்பட்டன.

இதற்கிடையில், திரு. கந்தசாமி என்பவர் 15 விழுக்காடு பட்டியல் சார்ந்த மற்றும் பட்டியல் மலைவாழ் மக்களுக்கு ஊராட்சிமன்றத்தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் பதவிகளுக்கு இட ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கோரி, வழக்கு தொடுத்துள்ளார்கள். இந்த வழக்கில் உயர்நீதிமன்றத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்த இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. இந்த வழக்குக்கு எதிராக, இடைக்காலத் தடையை நீக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது. எனவே, இச்சட்டத் திருத்தங்களினால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்களே நடைபெறாது என்ற சந்தேகம் எழத் தேவையில்லை எனக்கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் மக்களைச் சந்திப்பதற்கும், தேர்தல்களை நடத்துவதற்கும் எந்தக் காலகட்டத்திலும் பின்வாங்க மாட்டார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இந்தச் சட்டமுன்வடிவுகளை பேரவையில் தீர்மானங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

[பேரவைத் தலைவர்]

[1991 செப்டம்பர் 27

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்''

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.



1991 செப்டம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 29/1991). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிற்பகல் 1-30

பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

**1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்று உள்ளது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு) (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1991) நிறைவேற்றப் பெறவேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழு—செனட் மற்றும் நிர்வாகக் குழு — போர்டு ஆப் மேனேஜ்மென்ட் ஆகியவற்றுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டுமென்று கோரிக்கைகள் வந்துள்ளன.

(1) தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.



(2) தமிழ்நாடு அரசின் அனாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள் குழுவின் நிர்வாகக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு இப்பதவியின் காலம் முடிவு அடையும்.

வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 28-9-1991 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 30-9-1991 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1-10-1991 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3-10-1991 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் 'குழுக்கள் கூடும் அறையில்' வாக்கெடுப்பு நடைபெறும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 28-9-1991 காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

116. 1989-90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948-ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

117. 1989-90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் பதின்மூன்றாம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

121. பாசனம் மற்றும் நிலத்தடி நீர் பற்றிய சாதனைத் திட்டம், 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

122. பாசனம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

123. தமிழ்நாட்டில் 1990-91-ஆம் ஆண்டு சாலை மேம்பாட்டுத் திட்டம் பற்றிய ஆய்வும், 1991-92-ஆம் ஆண்டுத் திட்டமும் (தமிழ், ஆங்கிலம்).

124. 1990-91 ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை பற்றிய வரவு-செலவுத் திட்டச் சாதனை (தமிழ், ஆங்கிலம்).

125. கோரிக்கை எண் 8-தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

126. கோரிக்கை எண் 42-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

127. கோரிக்கை எண் 43-பல்வகை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

128. கோரிக்கை எண் 61-பல்வகை மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

129. கோரிக்கை எண் 62-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

130. கோரிக்கை எண் 42-ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

131. அகதிகள், தாயகம் திரும்பியோர், குடிபெயர்ந்தோர் துயர்தணிப்பும் மறுவாழ்வும் பற்றிய கொள்கைக்குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

132. மறுவாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு-1.

(48-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 8 – தேர்தல்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண் 8. தேர்தல்கள் என்பதன் கீழ் 1991-92-ஆம் ஆண்டு நிதியாண்டின் செலவுகளுக்காக ரூபாய் பதினோரு கோடியே, தொண்ணூற்றெட்டு இலட்சத்து, எழுபத்தி நான்காயிரம் (ரூ. 11,98,74,000) அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்படும் நிதி, பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பால் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் பயணப்படி செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தின் சீரான நடைமுறைக்காகவும் இவ்வாண்டு ஜூன் திங்களில் நடைபெற்ற நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல் செலவினத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

2. நாடாளுமன்றத்திற்கும் தமிழக சட்டமன்றப் பேரவைக்குமான பொதுத்தேர்தல் ஒரே நாளில் 15-6-1991அன்று நடைபெற்றது. நாடாளுமன்றத்திற்கும், தமிழக சட்டமன்றப் பேரவைக்கும் இவ்வாண்டு பொதுத்தேர்தல்கள் நடைபெற்றதால் இவ்விரு அவைகளுக்கும் அடுத்த பொதுத்தேர்தல்கள் 1996-ஆம் ஆண்டுவாக்கில்தான் நடைபெற வேண்டும். தற்சமயம் நம் மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கும் மாநிலங்களவைக்கும் தேர்ந்தெடுப்பதற்கு காலியிடம் ஏதும் இல்லை. அவ்வாறே சட்டமன்ற பேரவையிலும் காலியிடம் ஏதும் இல்லை.

3. மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 27

## 1991–92-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்-கோரிக்கை எண் 8 கொள்கை விளக்கக் குறிப்பு-தேர்தல்கள்.

"மானியக் கோரிக்கை எண் 8–தேர்தல்கள்" என்பதன்கீழ் 1991-92-ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப் படும் தொகை ரூ. 11,98,74,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது ஆகும்).

| | | ரூபாய். |
|---|---|---|
| 2015. | தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது) : | |
| 102. | தேர்தல் அதிகாரிகள் : | |
| | ஏஏ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் .. | 1,36,70,000 |
| | ஏபி. மேலவைத் தொகுதிகள் | 10,000 (அடையாள ஒதுக்கீடு) |
| 103. | வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல். | |
| | ஏஏ. சட்டமன்றப்பேரவைத் தொகுதிகள். .. | 32,86,000 |
| | ஏசி. மேலவைத் தொகுதிகள். | 2,000 (அடையாள ஒதுக்கீடு) |
| 104. | நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் மாநிலச் சட்டமன்றப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கானச் செலவுகள் .. | 10,06,96,000 |
| 105. | நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள். | |
| | ஏஏ. இடைத் தேர்தல்கள் .. | 11,000 |
| | ஏபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல். .. | 14,000 (அடையாள ஒதுக்கீடு) |
| 106. | மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள். | |
| | ஏஏ. மாநில சட்டமன்றப் பேரவை .. | 1,32,000 |
| | ஏபி. சட்டமன்றப் பேரவை .. | 12,000 (அடையாள ஒதுக்கீடு) |



1991 செப்டம்பர் 27]

| | | |
|---|---|---|
| 800. | ஏனைய செலவு (திட்டத்தில் சேராதது) | |
| | ஏபி. அகவிலைப்படி, ஏனைய எதிர் பாராச் செலவிற்கான மொத்த நிதி ஒதுக்கம். .. | 14,52,000 |
| | ஏசி. தனி ஊதியக்கொடை/சிறப்பு தனி ஊதியக் கொடை வழங்கு வதற்கான மொத்த நிதி ஒதுக்கம். .. | 4,80,000 |
| கூட்டுக–திருப்பி வசூலிப்பவை | .. | 1,07,000 |
| | மொத்தம் .. | 11,99,74,000 |

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாக கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது :—

102. தேர்தல் அதிகாரிகள் :

ஏஏ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் :

மதிப்பீடு : ரூ. 1,36,70,000

மாநில தலைமையகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்குத் தலைமைத் தேர்தல் அதிகாரியும், சார்புச் செய லாளரும் அலுவலகப் பணியில் உதவி புரிகின்றனர். மேலும் தலைமைச் செயலகத்தில், பொதுத் (தேர்தல்) துறையில் நிலை யான ஆறு பிரிவுகள் உள்ளன.

2. வெளியூர் பகுதிகளில், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் (சென்னை நீங்கலாக) தேர்தல் பதிவு அதிகாரிகளாக பொறுப்பு வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரி களின் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், கோயம் புத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் மற்றும் சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் களின் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில், ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவல கத்தில் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் இருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், பதிவேடு எழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் ஊதியச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகளும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள், எதிர்பாராத செலவினங்கள் தபால், தந்தி, தொலைப்பேசிக் கட்டணங்கள், தேர்தல் சார்பாக சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின்கீழ் அடங்கும். இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்கிறது.

102. தேர்தல் அதிகாரிகள் :

எபி. மேலவைத் தொகுதிகள் :

மதிப்பீடு : ரூ. 10,000 அடையாள (ஒதுக்கீடு)

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைக்கும் பணிக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் போன்றவை இத்தலைப் பின்கீழ் அடங்கும். மேலவையை மீண்டும் அமைக்க அரசு, முடிவெடுக்குமானால் அதற்கென இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினையும் ஏற்றுக்கொள்ளுகிறது.

103. வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல் :

எஎ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் :

மதிப்பீடு : ரூ. 32,86,000

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப் படும். இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள் பணியாளர்களின் ஊதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

சென்னை ஆவணக்காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களை காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காகவும் இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1.1.92-ஐ அடிப்படையாக வைத்து வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான சுருக்கத் திருத்தம் விரைவில் செய்யப்பட இருக்கிறது. எனவே, இத்தலைப்பின் கீழ் மேலே குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிப்பாதியாக பகிர்ந்து கொள்கின்றன.



103. வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல் ;
எபி. மேலவைத் தொகுதிகள் :

மதிப்பீடு : ரூ. 22,000 (அடையாள ஒதுக்கீடு)

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகள் மட்டும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். மேலவையை மீண்டும் அமைக்க அரசு முடிவெடுக்குமானால், அதற்கென, இத்தலைப்பின் கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. மாநில அரசே மொத்த செலவினம் ஏற்றுக் கொள்கிறது.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்ற பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற்கான செலவுகள் :

மதிப்பீடு : ரூ. 10,06,96,000

நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன் கீழ் அடங்கும். இவ்வாண்டு ஜுன் திங்களில் சட்டமன்றப் பேரவைக்கும், நாடாளுமன்றத்திற்கும் பொதுத் தேர்தல்கள் ஒரே சமயத்தில் செவ்வனே நடைபெற்றன. மாவட்டங்களில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான காவலாளர்களின் சம்பளம், வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், மற்றும் இத்துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்களும் இதன்கீழ் அடங்கும். நாடாளுமன்றம், மார்ச் திங்கள் 13-ம் நாள் கலைக்கப்பட்டு விட்டதால், தமிழக சட்டமன்ற தேர்தலுடன் நாடாளுமன்ற தேர்தலும் உடன் நடைபெற இருந்ததால், தமிழக சட்டமன்ற தேர்தலுக்காக அத்தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 10 கோடி இத்தலைப்பின்கீழ் அரசாணை எண் 444, நிதி(பட்ஜெட்-பொது—1) பிரிவு, நாள் 19-4-1991-ல் மாற்றம் செய்யப்பட்டது. மேற்கூறிய செலவினங்களுக்காக இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் :
எஎ. இடைத் தேர்தல்கள் :

மதிப்பீடு : ரூ. 11,000 (அடையாள ஒதுக்கீடு)

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றால், அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத் தலைப்பின்கீழ் அடங்கும். தற்சமயம் இம்மாநிலத்தைச் சேர்ந்த எந்த நாடாளுமன்றத் தொகுதியும் காலியாகவில்லை. இத் தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இடைத் தேர்தல் எதுவும் நடத் தப்பட்டால் இச்செலவினங்கள் முழுவதையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

105. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்கள் :

மதிப்பீடு : ரூ. 14,000 (அடையாள ஒதுக்கீடு)

நாடாளுமன்றத்திற்கு தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதிவுபெற்று பின்னர் மைய அரசினால் திருப்பித்தரப்படும்.

நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்ற தேர்தலுடன் சேர்ந்து இவ்வாண்டு ஜூன் திங்களில் நடைபெற்றது. எனவே, நாடாளுமன்றத்திற்கான அடுத்த பொதுத்தேர்தல், 1996-ம் ஆண்டு வாக்கில்தான் நடைபெற வேண்டும். இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச் செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற் கான செலவுகள் :

எஏ. மாநிலச் சட்டமன்றப் பேரவை :

மதிப்பீடு : ரூ. 1,33,000

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கு பொதுத் தேர்தலோ அல்லது இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன் கீழ் அடங்கும்.

நாடாளுமன்றத்திற்கும் தமிழக சட்டமன்றத்திற்கும் பொதுத்தேர்தல்கள் இவ்வாண்டு ஜூன் திங்களில் ஒருங்கிணைந்து நடைபெற்றது. மேலும் காங்கேயம் மற்றும் துறைமுகம் சட்ட மன்ற தொகுதிகளுக்கு இடைத்தேர்தலும், எழும்பூர் மற்றும் முசிறி சட்டமன்ற தொகுதிகளில் ஒத்தி வைக்கப்பட்ட தேர்தல்கள் ஆகஸ்ட் திங்கள் 24-ஆம் நாள் நடைபெற்றது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்ளுகிறது.



106. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :

எபி. சட்டமன்ற மேலவை :

மதிப்பீடு : ரூ. 13,000.

மேலவைத் தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ் கணக் கிடப்படுகின்றன.

மேலவையை மீண்டும் அமைக்க அரசு, முடிவெடுக்கு மானால் அதற்கென இத்தலைப்பின் கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசே இதன் மொத்தச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளுகிறது.

800. ஏனைய செலவு (திட்டத்தில் சேராதது) :

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| எபி. | அகவிலைப்படி, ஏனைய எதிர்பாராச் செலவிற்கான மொத்த நிதி ஒதுக்கம் | .. | 14,52,000 |
| எசி. | தனி ஊதியக் கொடை/சிறப்பு தனி ஊதிய கொடை வழங்குவதற்கான மொத்த நிதி ஒதுக்கம். | .. | 4,80,000 |
| கூட்டுக- திருப்பி வசூலிப்பவை | | .. | 1,07,000 |

இத்துறையை சார்ந்த அலுவலர் மற்றும் ஊழியர்களுக்கு அகவிலைப்படி, ஏனைய எதிர்பாரா செலவினத்திற்கும் மற்றும் தனி ஊதியக் கொடை/சிறப்பு தனி ஊதியக் கொடை வழங்கு வதற்காகவும் ரூ.19,32,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு-2.

(48 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92.

இக்கோரிக்கையில், அரசுப் பணியாளர்கள், மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், உள்ளாட்சி மன்ற பணியாளர்கள் உள்ளாட்சி தொடர்பாகவும் மற்றும் அவர் தம் குடும்பத்தினர் தொடர்பாகவும், முக்கியமாக, ஓய்வூதியம் வழங்குதல், பணிக்கொடை வழங்குதல், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்கி வழங்குதல், வருங்கால வைப்பு நிதித் தொகைகள், குடும்ப ஓய்வூதியம் வழங்குதல் முதலான வகையில் ஏற்படும் செலவினங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இன்றைய நிலவரப்படி, 2,29,928 பேர் ஓய்வூதியங்களையும், குடும்ப ஓய்வூதியங்களையும் மாநில அரசிடமிருந்து பெறுகின்றனர். அதன் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1. மாநில அரசு ஓய்வூதியம் பெறும் பணியாளர்கள். .. .. .. | 95,894 |
| 2. ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் .. | 46,368 |
| 3. ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்கள் . | 8,261 |
| 4. அரசுப் பணியாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் .. .. | 55,263 |
| 5. ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் .. | 24,142 |
| மொத்தம் .. | 2,29,928 |

2. ஓய்வூதிய நன்மைகளை வழங்குவதைப் பொறுத்தவரை, மத்திய அரசு அதன் பணியாளர்களுக்குப் பின்பற்றும் அதே நடைமுறைகளை மாநில அரசு பின்பற்றுகிறது. மத்திய அரசு நடைமுறைக்கேற்ப, இறப்பு ஓய்வூதியப் பணிக்கொடையின் உயரளவு தொகையை அரசு உயர்த்தியுள்ளது. மற்றும் ஓய்வூதியம், ஆற்றிய பணிக்கான பணிக்கொடை, இறப்பு பணிக்கொடை ஆகியவற்றைக் கணக்கிடும் நடைமுறை போன்ற பல்வேறு ஓய்வுக்கால நன்மைகளை மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றி திருத்தியமைத்துள்ளது.





3. இக்கோரிக்கையில் கீழ்க்காணும் இரு பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:—

| | ரூ. |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 3,38,75,35,000 |
| 2235. சமூகப் பாதுகாப்பு நலன்—இ. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள். | 3,37,96,000 |
| | 3,42,13,31,000 |

4. ஓய்வூதியம் :

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவார். ஓய்வுபெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 33 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப் பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் குறைக்கப்படும். குறைந்த அளவு ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ. 375 ஆகும். உயரளவு ஓய்வூதியத்திற்கு உச்சவரம்பு ஏதுமில்லை.

(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை :

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக ஓய்வூதியத் தகுதிபெறும் பணிபுரிந்தவர்களுக்கு ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறு மாதப் பணிகளும் ½ மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டுமொத்தத் தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வூதிய ஓய்வுக்காலப் பணிக்கொடைக்கும் கூடுதலாக இத்தொகை வழங்கப்படுகிறது. இதற்குக் குறைந்த அளவு அல்லது உயரளவு வரம்பு ஏதுமில்லை.

(ii) இறப்புப் பணிக்கொடை :

பணியில் இருக்கும்போது மரணமடைகின்றவர்கள் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

| பணிக்காலம். | பணிக்கொடையின் அளவு. |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக .. | மாத ஊதியத்தின் இருமடங்கு. |
| 2. ஓராண்டு அல்லது இதற்கு அதிகமாக ஆனால், ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக. .. | மாத ஊதியத்தின் ஆறு மடங்கு. |

| பணிக்காலம். | பணிக்கொடையின் அளவு. |
|---|---|
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக ஆனால், இருபதாண்டுகளுக்குக் குறைவாக. | — மாத ஊதியத்தின் பன்னிரண்டு மடங்கு. |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக. | . . உயரளவு 33 மடங்கு மாத ஊதியத்திற்குட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத்தின் தகுதிப்பணிக்கும் அரை மாதச் சம்பளம்; ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்பு பணிக்கொடை எந்த நேரத்திலும் ரூ. 1 இலட்சத்திற்கும் மேற்படக்கூடாது. |

(iii) ஓய்வு காலப் பணிக்கொடை :

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஓய்வு ஊதியத் தகுதி பெறும்பணியை முடித்திருந்தால் அவர் ஓய்வு பெறும்போது, மாத ஊதியத்தில் 16½ மடங்கு என்ற அதிக அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப்பணிக்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வுக்காலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. உயரளவு ஓய்வுக்கால பணிக்கொடையில் உச்சவரம்பை அரசு ரூ. 1 இலட்சம் ஆக திருத்தியுள்ளது.

5. குடும்ப ஓய்வூதியம் :

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். அவர் பணியிலிருக்கும் போது இறந்தால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர், தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே, பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது; ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து, அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருக்க



வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது, அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

ஒருவர் இறக்கும்போது, அல்லது ஓய்வு பெறும்போது, கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 30 சதவீதத் தொகை என்ற ஒரே சீரான விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. ஒருவர் 7 ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றிய பிறகு பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு, அவர் இறந்துவிட்ட பிறகு ஏழாண்டு கால அளவிற்கு, அல்லது 65 வயது வரை என்பதில் எது முந்தியதோ அந்தக் காலம் வரையில் அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவிகிதம் என்ற அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அதன்பிறகு கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 30 சதவீதம் என்ற வழக்கமான வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் ரூ. 375, அதிக அளவு குடும்ப ஓய்வூதியம் ரூ. 1,250.

விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுமணம் செய்துகொள்ளும்வரை, அல்லது இறக்கும்வரை என்பதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, இந்த குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய உரிய வயதடையாத குழந்தைகளுக்கு, அதாவது, அவர்களுடைய மகன்கள் அல்லது திருமணமாகாத மகள்களுக்கு 25 வயது ஆகும்வரை அல்லது அவர்கள் வேலை வாய்ப்பு பெறும்வரை இதில் எது முந்தையதோ அதுவரை அளிக்கப்படுகிறது. ஆனால், அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலக்குறைவு அல்லது மனநலமின்மையுடையவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டும்.

6. கருணைத் தொகை வழங்குதல் :

1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற/பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட, உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு (இவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் அல்ல.) 31-12-1990 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 150 கருணைத் தொகையும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 65 அகவிலைப் படியையும் அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

7. ஒய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக அளித்தல் :

ஓய்வூதியத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை ஒட்டுமொத்தமாகப் பெற ஓய்வூதியம் வழங்குபவர்கள் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவப் பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு 3-வது, 4-வது, 5-வது சம்பளக் குழுக்களின் பரிந்துறைகளின் அடிப்படையில் ஓய்வூதியத் தொகை அளவு திருத்தியமைக்கப்பட்டதையடுத்து ஓய்வூதியத் தொகையில் ஏற்படும் உயர்வில் 3-ல் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெறவும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஓய்வு பெறும் நாளும், ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக்கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின், அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அல்லது ஓய்வுபெற்ற பிறகு இரண்டாவது மாதமோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு முழு பகுதியை மொத்தமாக்கிப்பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வூதியத்தில் குறைபட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதியளித்துள்ளது.

8. ஏனைய ஓய்வு கால நன்மைகள் :

(i) மத்திய அரசு பின்பற்றும் நடைமுறைக்கேற்ப (அதாவது, ஆண்டில் இருமுறை, ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் அகவிலைப்படி வழங்கப்படுகிறது) பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே, ஓய்வூதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படித் தவணைத் தொகை பெறுகிறார்கள்.

(ii) ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மருத்துவச் செலவுத் தொகையைத் திரும்பப் பெறும் திட்டத்திற்குப் பதிலாக, திங்கள் ஒன்றுக்கு ரூ. 15 என்ற வீதத்தில் மருத்துவப்படி பெறுவதுடன், அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது/பணியில் இருக்கையில் இறந்தபோது பெறுவதற்கு தகுதியுடையவர்களாக இருந்த அதே மருத்துவச் சலுகைகளையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.



(iii) ஓய்வுபெறும்போது, கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு உயரளவு 240 நாட்கள் ஈட்டிய விடுப்பிற்கு மட்டுமே தொகை பெற இயலும்.

(iv) ஓய்வுபெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது, தாம் சென்று வசிக்க விழையும் ஊருக்குச் செல்வதற்கான பணிமாற்ற பயணப் படி பெற அனுமதிக்கப்படுவர்.

(v) 1–6–1988 ஆம் நாளில் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வு காலப் பயன்களைக் கணக்கிடும் போது, சம்பள வீத்தைப் பொறுத்து அடிப்படை சம்பளத்தில் 13 சதவீதத்தை/ 9 சதவீதத்தை/ 8 சதவீதத்தை அகவிலைச் சம்பளமாக கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்ற சலுகையை அரசு வழங்கியுள்ளது.

(vi) திங்களொன்றுக்கு ரூ. 750 வரை ஓய்வூதியம் பெறுபவர், ஒரு திங்களுக்கான ஓய்வூதியத்தொகை அல்லது ரூ. 300 இவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகையைப் பண்டிகை முன் பணமாக பெறத் தகுதியுடையவராவார்.

(vii) திங்களொன்றுக்கு ரூ. 400-க்கு மிகாமல் ஓய்வூதியத் தொகை/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அத்தொகை அரசு செலவில் பணவிடை மூலமாக அனுப்பிவைக்கப்படுகிறது.

(viii) ரூ. 400-க்கும் அதிகமாக ஓய்வூதியம் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர் ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின்படி, தனியார் வங்கிகள் உட்பட ஏதேனும் ஒரு வங்கியின் மூலமாக, அல்லது, பொதுத் துறை வங்கித் திட்டத்தின்படி ஏதேனும் ஒரு பொதுத் துறை வங்கியின் மூலமாக அத்தொகையைப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(ix) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(x) அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் ஏனைய ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசாக ரூ. 100 வழங்கப்பட்டுள்ளது.

9. உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள் உட்பட, தனியார் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்தியமும் :

தனியார் கல்வி நிறுவனங்களில் (அரசு மானியம் பெறும், கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள்) பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களும், மாநில அரசுப் பணியாளர்களுக்குரிய அனைத்து ஓய்வூதியப் பயன்களையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

10. ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகள்/குறைகளைக் களைய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் :

ஓய்வூதியதாரர்களின் குறைகளைக் கவனிக்க பணியாளர்–நிருவாகச் சீர்திருத்தத் துறையில் ஓய்வூதியதாரர்கள் குறைதீர்ப்புப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.





## இணைப்பு—3

(4[illegible]-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை 43—பல்வகை.

### 1991–92–ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு.

இது ஒரு கூட்டு மானியக் கோரிக்கையாகும். இந்த மானியக் கோரிக்கையில் பொதுவாக, முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படும் மானியம், உள்ளாட்சி நிறுவனங்கள், சிறு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ஆகியவை தொடர்பான செலவு சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்பட்டோருக்கு புது வாழ்வு அளிப்பதற்கான செலவும், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட ஒரு மானியக் கோரிக்கையில் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை இனங்களும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் பெருந்தலைப்பு வாரியாக வருமாறு :—

| கணக்குத் தலைப்பு. | 1990–91 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1990–91 திருத்த மதிப்பீடு. | 1991–92 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. 2047. ஏனைய வரி விதிப்புப் பணிகள். | 80 | 8.15 | 10.54 |
| 2. 2049. வட்டித் தொகை கொடுத்தல். | 1 | 1 | 1 |
| 3. 2070. ஏனைய நிருவாகப் பணிகள். | 27 | 32 | 38 |
| 4. 2075. பல்வகை, பொதுவான பணிகள். | 1,09,68 | 44.71 | 1,[illegible],95 |

| கணக்குத் தலைப்பு (1) | 1991–92 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1991–92 திருத்த மதிப்பீடு. (3) | 1991–92 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 5. 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும். | 18,64 | 50,50 | 40,58 |
| 6. 2250. ஏனைய சமூகப் பணிகள். | 29 | 29 | 22 |
| 7. 2515. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டம். | .. | .. | 2,66 |
| 8. 2801. மின் சக்தி. | .. | 85 | .. |
| 9. 3053. சிவில் விமானப் போக்குவரத்து. | 8 | 1 | .. |

மேற்சொன்ன மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள், அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் ஆகிய விவரங்கள் வருமாறு :—

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் :

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 15–8–1968 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் வரையில் இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் இத்திட்டம் மீண்டும் கொண்டு வரப்பட்டு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்குதல், ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், ஊரக சுகாதார வசதி செய்து கொடுத்தல், முன்னாள் இராணுவ வீரர்கள் முதலானோருக்கான நலத் திட்டங்கள் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



தொடக்கத்தில் மாதத்திற்கு ஒரு முறை குலுக்கல் நடத்தப் பட்டது. ஆனால், பிறகு, 1981 மே திங்களிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறையும், 1982 மார்ச்சிலிருந்து மாதத்திற்கு மூன்று முறையும் குலுக்கல் நடைபெற்றது. பரிசுச் சீட்டுக்களின் தேவை அதிகரித்ததால், 1985 பிப்ரவரியிலிருந்து வாரந்தரக் குலுக்கலும், 1986-ம் ஆண்டு மே திங்கள் 21ம் நாளிலிருந்து வாரத்திற்கு இருமுறை குலுக்கலும் 1986-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 22-ஆம் நாளிலிருந்து வாரத்திற்கு மும்முறையும் குலுக்கல் நடைபெற்றது.

வழக்கமாக நடைபெறும் இக்குலுக்கலுடன், திருமகள் என்ற பெயரில் பம்பர் குலுக்கல்களையும், மாவட்ட சூப்பர் பம்பர் குலுக்கல்களையும் விழாக்கால பம்பர் ரொக்கங்களையும் இத் துறை நடத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டை அதிக அளவில் விற்பனை செய்வதற்காக, முகவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கும் நோக்குடன், அவர்களுக்கு வழங்கப்படும் தரகுத் தொகை 20 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. பரிசுச் சீட்டு முகவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கு டனும், அனைத்துச் சிறப்புக் குலுக்கல்களிலும் விற்பனை செய்யப்படும் 500 பரிசுச் சீட்டுகளுக்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் என்ற வீதத்தில் முகவர்களுக்கு இலவச பரிசுக் கூப்பன்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

தனியார் பரிசுச் சீட்டுகளுக்குத் தடை :

அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த பரிசுச் சீட்டுகளும் விற்பனை செய்யப்படும் ஒரு முக்கியச் சந்தையாகத் தமிழ்நாடு விளங்குகிறது. ஆண்டொன்றுக்கு பரிசுச் சீட்டுகளின் விற்பனை மூலம் கிடைக்கும் ரூபாய் 150 கோடி மொத்த விற்பனைத் தொகையில், தமிழ்நாடு பரிசுச் சீட்டுகளின் விற்பனை அளவு 13 சதவீதம் மட்டுமே ஆகும். இதற்கு முன் எப்போதும் இருந்திராத அளவுக்கும் முறைப்படுத்தப்படாத அளவிற்கும் தமிழ்நாட்டில் தனியார் பரிசுச் சீட்டுக்களின் விற்பனை அதிகரித்து இருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். தனியார் பரிசுச் சீட்டுகளிலும், அங்கீகாரம் பெற்ற பரிசுச் சீட்டுகளிலும் முறைகேடுகள் நடை பெறுவது குறித்து பல புகார்கள் அரசுக்கு வரப்பெற்றன. எனவே, தமிழ்நாட்டில் தனியார் பரிசுச் சீட்டுக்களின் விற் பனையை தடை செய்து 1989 அக்டோபரில் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டன. உச்சநீதிமன்றத்தின் ஆணைகளின்படி, ஏனைய மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வரும் பரிசுச் சீட்டுகள் மட்டுமே இம்மாநிலத்தில் விற்பனை செய்ய அனுமதியளிக்கப்படுகிறது.

**குலுக்கல் நடத்துதலும் பரிசுகள் வழங்குதலும் :**

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு திட்டம் குறித்து மாநிலத்தின் தொலைதூரப் பகுதிகளிலும் வாழும் மக்கள் தெரிந்து கொள்வ
தற்கு இயலும் வகையில் இதுகாறும் மாவட்டத் தலைமை
யிடங்களில் நடத்தப்பட்டு வந்த பம்பர் குலுக்கல்கள் தற்போது
வட்டத் தலைமையிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன
ஏனைய பரிசுச் சீட்டுக்களைப் போல் அல்லாமல், பம்பர் குலுக்கல்
நடைபெறும்போது ஏற்பாடு செய்யப்படும் பொது விழாவில்
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னிலையில் பம்பர் குலுக்கலுக்
கான முதல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இக்குலுக்கல்கள்
நியாயமான முறையில் நடத்தப்படுகின்றன. எனவே தமிழ்நாடு
அரசு பரிசுச் சீட்டு மக்களிடையே பெரிதும் நம்பகத் தன்மை
யுடையது என்கிற பெரும் நம்பிக்கையையும் மதிப்பையும்
பெற்றுள்ளது.

**பரிசுச் சீட்டுகளை அச்சிடுதல் :**

தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகள் 'ஆப்செட்' அச்சு
முறையில், கண்கவர் வண்ணங்களில் அச்சிடப்பட்டு வருகின்றன.
பகிரங்க ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் இப்பரிசுச் சீட்டுகளை
அச்சிடும் பணி தனியார் அச்சகங்களுக்கு ஒப்படைக்கப்
பட்டுள்ளது.

**பரிசுச் சீட்டு விற்பனை வகையில் கிடைக்கும் வருவாய் :**

பரிசுச் சீட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து 1989-90
வரையில் சுமார் ரூபாய் 47.35 கோடி நிகர வருவாயை இத்துறை
ஈட்டியுள்ளது. இதில் ரூபாய் 35.33 கோடி தமிழ்நாடு சிறப்பு
நல நிதிக்கு மாற்றப்பட்டு உள்ளது.

அதேபோல, 1989 டிசம்பரில் நடத்தப்பட்ட ஒரு குலுக்கலில்
இருந்து கிடைத்த தொகை ரூபாய் 9,20,910 உள்பட,
1983-84 லிருந்து ரூபாய் 13.11 இலட்சம் முன்னாள் இராணுவ
வீரர் நல நிதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

1990-91-ல், தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின்
கீழ் கிடைத்த மொத்த வருவாய் ரூபாய் 20.97 கோடியாகும்.
விற்பனை வரி செலுத்திய பிறகு கிடைத்த நிகர வருவாய்
ரூபாய் 3.67 கோடியாகும்.

1986-87-லிருந்து 1990-91 வரையிலான ஆண்டுகளில்
பரிசுச் சீட்டு விற்பனையின் பேரில் விற்பனை வரிக்காக இந்த
துறை சுமார் ரூபாய் 6.83 கோடி கொடுத்துள்ளது.



**சிறு சேமிப்பு.**

**முன்னுரை ;**

மத்திய அரசால் வகுக்கப்படுகின்ற சிறு சேமிப்புத் திட்டங்கள் மாநில அரசின், சிறு சேமிபபு இயக்ககத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. நிகர வசூலில் 75 சதவீதம் தொகையை 13.5 சதவீத வட்டி வீதத்தில் ஐந்தாண்டு கடன் தவணைக் கால நீட்டிப்புடனும் 20 ஆண்டு காலத்தில் திருப்பிச் செலுத்த தக்கதாகவும் நீண்ட காலக் கடனாக மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்குகிறது. இக்கடன்கள், திட்டப் பணிகளுக்கு நிதி அளிப்பதற்கு மாநில அரசுகளுக்கு முக்கியமான நிதியாதாரமாக இருப்பதால், இதற்கு இயன்ற அளவு முக்கியத்துவம் அளிக்கபபட்டு, சிறு சேமிப்பு வசூலை அதிக அளவில் திரட்டப் பெரும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**சிறு சேமிப்புத் திட்டங்கள் :**

ஊதியம் ஈட்டுவோர், மாதச் சம்பளம் பெறுவோர், வருமான வரி செலுத்துவோர், அரசுப் பணியாளர் போன்ற பொது மக்களில் பல்வேறு பிரிவினருக்கும் ஏற்ற வெவ்வேறு வகையான சிறு சேமிப்புத் திட்டங்கள் இருக்கின்றன.

இத்திட்டங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம் :—

(அ) வரி செலுத்துவதிலிருந்து பாதுகாப்பளிக்கும் சேமிப்புத் திட்டங்கள் :

(i) 1987 ஆம் ஆண்டு தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு.

(ii) தேசிய சேமிப்புச் சான்றிதழ் 8 ஆவது வெளியீடு.

(iii) 15 ஆண்டு பொது வருங்கால வைப்புநிதிக் கணக்கு.

(iv) ஓய்வு பெறும் அரசுப் பணியாளர் பொதுத் துறைப் பணியாளர்களுக்கான வைப்பீட்டுத் திட்டம்.

(ஆ) உயரளவு வருவாய் ஈட்டித் தரும் நோக்கிலமைந்த திட்டங்கள் :

(i) இந்திரா விகாஸ் பத்திரம்.

(ii) கிசான் விகாஸ் பத்திரம்.

(இ) முறையாக வருவாய் ஈட்டும் திட்டங்கள் :

அஞ்சல் அலுவலக மாதாந்திர வருவாய்த் திட்டம்.

(ஈ) ஏனையவை :

(i) அஞ்சல் அலுவலக குறித்த கால வைப்பீடு.

(ii) ஐந்தாண்டு அஞ்சல் அலுவலகத் தொடர் வைப்பீடு.

(iii) அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கிக் கணக்கு.

திட்டச் சாதனையும் இலக்கும் :

தமிழ்நாட்டில் சென்ற மூன்றாண்டுகளில் சிறு சேமிப்புத் திட்டங்களின்கீழ் கிடைத்த வசூல் குறித்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | | இலக்கு. | மொத்த வசூல். | நிகர வசூல்: |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1988–89 | .. | 225.00 | 518.18 | 183.60 |
| 1989–90 | .. | 400.00 | 713.91 | 345.32 |
| 1990–91 | .. | 450.00 | 849.24 | 398.29 |

1991–92 ஆம் ஆண்டில் சிறு சேமிப்புத் திட்ட நிகர வசூல் இலக்கு உயர்த்தப்பட்டு ரூபாய் 550 கோடி என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

1991–92 ஆம் நிதியாண்டில் சிறுசேமிப்பில் முதலீடு செய்பவர் களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசு பின்வரும் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது :—

(அ) மாவட்ட அளவிலான பரிசு வழங்கப் பெறும் சிறு சேமிப்பு நிதி திரட்டும் திட்டம்.

(ஆ) வட்டார அளவிலான பரிசு வழங்கப்பெறும் (அடுக்குக் குடியிருப்பு பெறுதல்) சிறு சேமிப்பு நிதி திரட்டும் திட்டம்.

மாவட்ட அளவிலான பரிசு வழங்கப்பெறும் சிறு சேமிப்பு நிதி திரட்டும் திட்டத்தின்கீழ் பொது மக்கள் முதலீடு செய்யும் ஒவ்வொரு 500 ரூபாய்க்கும் இலவச பரிசுக் கூப்பன் ஒன்று வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வரிசைக்கும் 352 கவர்ச்சிகரமான பரிசுகளும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வரிசையிலும் ஒரு இலட்சம் கூப்பன்கள் வெளியிட்டு முடிந்ததும், ஒவ்வொரு மாவட்டத்திலும் குலுக்கல் நடைபெறுகிறது. ஒவ்வொரு தொடருக்கும் திரட்டப்படும் மொத்த தொகை ஐந்து கோடி ரூபாயாகும்.

வட்டார அளவிலான பரிசு வழங்கப்பெறும் (அடுக்குக் குடியிருப்பு பெறுதல்) சிறு சேமிப்பு நிதி திரட்டும் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களும் ஆறு வட்டாரங் களாகத் தொகுக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கென ஒதுக்கப்பட்ட வரிசைகளிலிருந்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கு மான பரிசுக் கூப்பன் வழங்கப்படுகின்றது, ரூபாய் 2,000 முதலீடு செய்யும் ஒவ்வொருவருக்கும் ஒரு பரிசுக் கூப்பன் வழங்கப் படுகிறது. வட்டார அளவிலான பரிசுக் கூப்பன் திட்டத்தின்



ஒவ்வொரு வரிசையின் கீழும், ஏனைய பரிசுகளுடன், நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீடு ஒன்று, குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீடு ஒன்று ஆகியவற்றுடன் மொத்தம் 682 பரிசுகள் வழங்கப்படுகின்றன.

பரிசுத் திட்டங்களுடன், இத்திட்டத்தின்கீழ் மேலும் மேலும் தொகை முதலீடு செய்யத் தூண்டும் வகையில், முதலீட்டாளர் களுக்கு ஒரு சதவீத ரொக்க ஊக்கத் தொகையும், முகவர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. பல்வேறு துறைத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் 1991–92 ஆம் நிதியாண்டில் ரூபாய் 550 கோடி நிகரத் தொகையை திரட்ட முடியும் என சிறு சேமிப்பு இயக்ககம் நம்புகிறது.

ஏனைய பொதுவான பணிகள் :

இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதம மந்திரி, அமைச்சர் பெருமக்கள், ஏனைய சீர் மக்கள் போன்ற மிக முக்கியமான பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வரும் போது ஆகும் செலவு இந்த மானியக் கோரிக்கையில் காட்டப் பட்டுள்ளது. ஆளுநர், அமைச்சர்கள் ஆகியோரின் பதவியேற்பு விழா தொடர்பான செலவும், அரசின் ஏனைய விழாக்கள் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் கணக்கு எழுதப்படுகிறது. தேசிய அளவிலும், உலக நாடுகளின் அளவிலு மான விழாக் கொண்டாட்டங்கள், சிறப்பு நாட்களின் கொண் டாட்டங்கள் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக் கையில் காட்டப்படுகிறது. மக்களுக்குப் பணிபுரிகின்ற வகையில் திட்டப்பணிகளைச் செயற்படுத்தி வரும் பொதுத் துறை நிறு வனங்கள் இந்த ஆண்டில், விலைவாசி உயர்வு காரணமாக முன் கூட்டியுணர்வியலாத, இடையூறுகளுக்கு உள்ளாக நேரிடலாம்; அத்தகைய நிறுவனங்களுக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சமூகப் பாதுகாப்பும் நலனும் :

மேற்சொன்ன தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ள முக்கியச் செலவினங்கள் வருமாறு :—

1. முஸ்லீம் கோஷா மகளிர் நிதியுதவிச் சங்கத்திற்கு உதவி (ரூபாய் 0.40 இலட்சம்).

2. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்திற்கு நிதியுதவி (ரூபாய் 26.80 இலட்சம்).

3. மாவட்ட முப்படை வீரர் நல வாரியம் (ரூபாய் 90.54 இலட்சம்).

4. போர்க்களத்தில் குறிப்பிடத் தகுந்த வீரச் செயல்கள் புரிந்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானியம் (ரூபாய் 2.64 இலட்சம்).

5. முன்னாள் படைவீரர் நல நிதி (ரூபாய் 2.00 இலட்சம்).

6. இறந்து விட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத்திற்குக் கருணைத் தொகை (ரூபாய் 10.57 கோடி).

7. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்புநிதி-பணிக்கொடைத் திட்டம் (ரூபாய் 5.00 கோடி).

8. மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்புநிதி-பணிக்கொடைத்திட்டம் (ரூபாய் 1.15 கோடி).

9. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்ட முன்பணம்-சிறப்பு நலத் திட்டங்கள் (ரூபாய் 12.00 இலட்சம்).

10. கிராம அலுவலர்கள் சிறப்பு வருங்கால வைப்புநிதி (ரூபாய் 24.00 இலட்சம்).

11. வறுமை வாய்ப்பட்ட சில வகைத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் (ரூபாய் 1.00 கோடி).



## இணைப்பு-4

(48 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க)

### கொள்கைக்குறிப்பு.

1991-92ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம்—பல்வகை அயல்நாடுகளிலுள்ள இந்தியர் மற்றும் ஸ்ரீலங்கா அகதிகள்.

தாயகம் திரும்பியோர் :

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் வேலை தேடும் பொருட்டும் வியாபாரம் செய்யும் பொருட்டும் சில இந்திய மக்கள் பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றனர். இது போன்று அந்த நாடுகளுக்கு சென்றவர்களில் பெரும்பாலோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். பர்மாவில் வியாபாரத்தைத் தேசிய மயமாக்கப் பட்ட தருணத்தில் வியாபாரம் செய்து பிழைத்து வந்த இந்திய மக்கள் இந்தியாவுக்கு திரும்ப வேண்டியதாயிற்று. இதன்படி 1963-ஆம் ஆண்டு முதல் தாயகம் திரும்பும் நிலை ஏற்பட்டது. இதுவரை பர்மாவிலிருந்து 1,44,445 நபர்கள் தாயகம் திரும்பி உள்ளனர். 1944 ஆம் ஆண்டுக்குப் பிறகு விமானம் மார்க்கமாக ஒரு சிலரே வந்திருக்கின்றனர். 1964 மற்றும் 1974-ஆம் ஆண்டு இந்தியா-ஸ்ரீலங்கா ஒப்பந்தங்களின்படி, ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வந்த இந்திய மக்களின் வழி வந்தவர்களில் நாடற்றவர்களாக விளங்கிய 9.75 இலட்சம் நபர்களில் 6 இலட்சம் நபர்களை இந்தியா எடுத்துக்கொள்வதென ஒப்புக் கொள்ளப்பட்டது 1983-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக, ஸ்ரீ லங்கா அரசு இந்தியாவுடன் 1986-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி ஸ்ரீலங்கா அரசு, கூடுதல் 94.000 நபர்களுக்கு குடியுரிமை அளிக்க ஒப்புக் கொண்டது. இதனால் தாயகத்திற்கு திரும்புவர்களாகிய 6 இலட்சம் நபர்கள் 5.06 இலட்சம் நபர்களாகக் குறைந்து இந்திய அரசின் சிரமம் சற்று குறைந்தது. இதுவரை கணக்கில் அடங்கிய 3.35 இலட்சம் நபர்களைக் கொண்ட 1.16 இலட்சம் குடும்பங்கள் மற்றும் அவர்களின் இயற்கை அதிகரிப்பாக 1.15 இலட்சம் நபர்களும் ஆக மொத்தம் 4.60 இலட்சம் நபர்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு திரும்பியுள்ளனர். மேலும் 1.62 இலட்சம் நபர்களும் அவர்களின் இயற்கை அதிகரிப்பு நபர்களும் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கு இன்னமும் திரும்பி அனுப்பப் பட உள்ளனர். 1984-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தலை மன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்குக் கப்பற் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டதால், மீதமுள்ள இந்திய வம்சா வழியின் மக்களை ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கு திரும்ப அனுப்புவது இயலாமற் போனது.

2. ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் அதிக அளவில் அகதிகள் இந்தியாவுக்கு வரத் தொடங்கினர். இந்த அகதிகளின் வருகை 1983–ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 24 ஆம் நாள் முதல் ஆரம்பமாயிற்று. இதுவரை 1,34,053 ஸ்ரீலங்கா அகதிகள் வந்துள்ளனர். இவர்களில் ஆதரவற்ற நிலையில் இருந்த 9,918 நபர்கள் இடைதங்கல் முகாம்களில் அனுமதிக்கப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டனர். மீதமுள்ள ஆதரவு தேவைப்படாத 94.135 நபர்கள் முகாம்களுக்கு வெளியில் தங்கினர். 1987 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 29 ஆம் தேதி இந்தியஸ்ரீலங்கா சமாதான உடன்படிக்கையின்படி 1987 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24 ஆம் நாள் முதல் 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்ட 50 கப்பல் போக்கு வரத்துகளில் முகாம்களில் தங்கியிருந்த 19,986 அகதிகள் ஸ்ரீலங்காவிற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். முகாம்களுக்கு வெளியே தங்கியிருந்த அகதிகளில் 17,131 நபர்கள் அடங்கிய 9,790 குடும்பங்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தங்களைப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 5,599 நபர்கள் மேற் சொன்ன கப்பல் போக்குவரத்தில் சேர்த்து ஸ்ரீலங்காவுக்கு திரும்ப அனுப்பப்பட்டனர். இதன்படி ஸ்ரீலங்காவுக்கு திரும்ப அனுப்பப் பட்ட அகதிகள் மொத்த நபர்கள் 25,585 ஆகும். முகாம்களில் தங்கியிருந்த குடும்பங்கள் இந்திய பயண ஆவணங்கள் வைத்திருந்தால் அவர்களை தாயகம் திரும்பியவர்களாக கருதப் பட்டு இந்தியாவில் நிரந்தரமாக குடியமர குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. 1983 முதல் 1987 வரை வந்த அகதிகளில் 520 நபர்கள் ஸ்ரீலங்காவுக்கு திரும்ப அனுப்பப்பட வேண்டுமா ? அல்லது இந்தியாவில் குடியமர்த்தப்பட வேண்டுமா ? என்பது குறித்து மைய அரசின் முடிவை எதிர்நோக்கி இன்னமும் முகாம்களில் தங்கியுள்ளனர். இந்த நிலையில் ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக 1989–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25-ஆம் நாள் முதல் மற்றும் ஒரு அகதிகளின் வருகை ஆரம்பமாயிற்று. 1990–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் தேதிப்படி 3,347 அகதிகள் வந்துள்ளனர். 15–7–1990 மீண்டும் 1–7–1990 முதல் பெருமளவு அகதிகள் வருகை காரணமாக 35,894 குடும்பங்களைச் சார்ந்த 1,22,076 நபர்கள் அகதிகளாக வந்துள்ளனர். தேதிய நிலவரப்படி 29,331 குடும்பங்களைச் சார்ந்த 1,12,100 நபர்கள் முகாம்களில் தங்கியுள்ளனர். ஆதரவற்ற நிலையில் உள்ள வர்க்ள் இடைத்தங்கல் முகாம்களில் அனுமதிக்கப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றனர். அதே நேரத்தில் ஸ்ரீலங்காவி ருந்து வரும் அகதிகளுக்கு தமிழக அரசு தேவையான உதவிகளை அளித்து வருகின்றது. ஸ்ரீலங்காவிலிருந்து அகதிகளாக வந்தவர் களுக்கு அளிக்கப்படும் மறுவாழ்வு மற்றும் நிவாரண உதவிகளின் விவரங்கள் மட்டுமே கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புகின்றவர்கள், தங்களுக்குச் சொந்தமாக உடைமைகள், சொந்த நகைகள் ஆகியவற்றை சுங்கவரி கட்டாமல் தங்களுடன் கொண்டுவர அனுமதிக்கப்படு கின்றனர். அவர்கள் இராமேஸ்வரத்துக்கு வந்து சேர்ந்தவுடன் சாப்பாடும், தேநீரும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இராமேஸ் துறைமுகத்தில் மறுவாழ்வுதுறை பணியாளர்கள் அவர்களைக் குறித்த புள்ளி விவரக் கணக்குகளை எடுக்கின்றனர். சுங்கப் பரிசோதனை முடிந்த பின்னர், குடும்பங்கள் மண்டபத்தில் அமைந்துள்ள இடைதங்கல் முகாமுக்குச் செல்லலாம். அங்கிருந்து அவர்கள் பல்வேறு திட்டங்களில் சேருவதற்கு அனுப்பி வைக்கப் படுவர். அல்லது கண்டியிலுள்ள உதவி தூதரகத்தில் முதன்மை செயலாளர் அவர்களுடைய குடும்ப அட்டைகளில் பரிந் துரை செய்துள்ளவாறு வணிகக்கடன் அவர்களுக்கு வழங்கப்படும். ரூ. 10,000-க்கு குறைவாகக் கொண்டு வருகின்ற குடும்பங்களுக்கு அவர்கள் மண்டபம் இடைத்தங்கல் முகாமில் சேர்க்கப்பட்டதும் அதிகபட்சம் மூன்று மாத காலத்திற்கு ரொக்க உதவித் தொகை வழங்கப்படும். மேலும் ஒரு கிலோ அரிசி 57 பைசா வீதம் விலை குறைப்புச் செய்த பங்கீட்டு அரிசியும் நாளொன்றுக்கு பெரியவர் களுக்கு 400 கிராம் சிறுவர்களுக்கு 200 கிராம் வீதமும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கேயுள்ள 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையில், அவர்களுக்கு மருத்துவ வசதியும் இலவச தங்குமிடம், தண்ணீர் வசதி, மின் வசதியும் அளிக்கப் படுகிறது. குடும்பங்களுக்கு பணக்கொடை அரைத் திங்களுக்கு ஒரு முறையும் மலிவு விலை அரிசி வாரத்திற்கு ஒரு முறையும் முகாமிலேயே வழங்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை வரப் பெற்ற மொத்தம் 1.16 இலட்சம் குடும்பங்களில் இதுவரையிலும் 96.515 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், அந்தமான்-நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்டுப் புதுவாழ்வு அளிக்கப் பட்டுள்ளனர். அவர்களில் தமிழ்நாட்டில் 91,713 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

**வணிகக்கடன் :**

ஸ்ரீலங்காவிலிருந்து திரும்புவோரில் பெரும்பான்மையினர் மலைத் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா திரும்புவோர் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வருவாயைத் தேடிக் கொள்ள சிறு அளவில் வணிகத்தை மேற் கொள்ளவும் நடத்தவும் அவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு ரூ 7,500 அல்லது அதற்கு குறைவாகக் கடனாக வழங்கப் படுகிறது. இது இரண்டு தவணைகளில் அதாவது முதல் தவணையில் ரூ. 5,000மும், இரண்டாவது தவணையில் ரூ. 2,500 வழங்கப்படுகிறது. இதுவரையில் 76.124 ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**விட்டு வசதி அளிப்பதற்கான திட்டம் :**

இந்தியா திரும்பியவர்களுக்குச் சொந்தமாக வீடு இல்லையெனில் அவர்களுக்கு வணிகக் கடன் கொடுக்கப்பட்டிருப்பினும் விவசாய கடன் கொடுக்கப்பட்டிருப்பினும் வேலை வாய்ப்பளிக்கப் பட்டிருப்பினும் அவர்களுக்கு வீட்டு வசதிஅளிக்கப்பட்டு வருகிறது. வீடுகளைக் கட்டிக்கொள்ள எங்கெங்கு அரசு நிலங்கள் காலியாக உள்ளவவோ அவை அங்கு இலவசமாக வழங்கப் படுகின்றன. அத்தகைய குடும்பங்களுக்கு நகர்ப்புற பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு ரூ. 10,000 கடனும், கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு ரூ 6,000 கடனும் வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளுக்காக வழங்கப்பட்ட ரூ. 6,000 மான்யம் நகர்ப்பகுதிகளில் வீடு கட்டுபவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இதுவரை 44,803 குடும்பங்களுக்கு வீட்டுக் வசதி கடன் வழங்கப் பட்டுள்ளது.

**வேளாண்மை நிலக் குடியேற்றத் திட்டம் :**

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா திரும்பும் குடும்பங்களில், உரிய வயது வந்த உடல் வன்மையுள்ள இரண்டு பேர் இருந்து அவர்கள் வேளாண்மைத் தொழிலில் அனுபவம் உடையவர்களாகவும் இருப்பின், அவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லாமல் இருந்தால், அக்குடும்பங்கள் வேளாண்மை நிலக்குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 ஏக்கர் புன்செய் நிலம் கொடுக்கப்படுகிறது. அரசு நிலங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. நிலங்களை பயன்படுத்தவும், பாசனக் கிணறுகள் தோண்டவும் எருதுகள், விதைகள், கருவிகள் முதலியன வாங்கவும் பயிரிடவும் ஒவ்வொரு குடும்பமும் வீட்டு வசதிக் கடனும் மாட்டு வண்டி வைத்து வாடகைக்கு ஓட்டுதல், கோழி இன வளர்ப்பு கரய்கறித் தோட்டம் வைத்தல் பேன்ற துணைத் தொழிலுக்காக கடனும் பெறத் தகுதியுடையவர் ஆவார்கள்.

தவிர ,ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்கள் அவர் கள் எடுத்து வந்த சொத்தின் மதிப்பு ரூ. 20,000-க்கு மேற்படாமல் இருந்து அவர்களுக்கென்று சொந்தமாக நிலங்கள் இல்லாமலிருந்து வேளான்மைத் தொழிலை மேற்கொள்ள விரும்பினால், 3 ஏக்கர் வரை நிலங்களை வாங்குவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2,000த் துக்கு மேற்படாத வீதத்தில் தனியார் வேளாண்மை நிலங்களை வாங்குவதற்குக் கடன் பெறவும் தகுதியுடையவர் ஆவார்கள்.

**வேலைவாய்ப்பு வசதிகள் :**

வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக மாநில அரசுப் பணியில் நியமனம் பெறுவதற்காக தாயகம் திரும்பியவர்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அவசியம் ஏற்படும் போது முறையாக பதவிகளில் நியமிக்கப்படுவதற்காகக் கல்வித் தகுதிகள்



குறித்த விதிகள் தளர்த்தப்பட்டு வருகின்றது. மாநிலப்பணி சார்நிலைப் பணிகளுக்கு ஆள் தெரிந்தெடுப்பதற்காக தேர்வுக் கட்டணங்கள், விண்ணப்பக் கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தாயகம் திரும்பியோர் சிறுவர்களுக்கு இலவச கல்வி அளிக்கப் படுகிறது. மாணவர் இல்லங்களில் தங்கியுள்ளவர்களுக்கு ரூ. 60 விருந்து ரூ 90 வரையில் மாதாந்திர உதவித் தொகை வழங்கப் படுகிறது. படிக்கும் வகுப்பிற்கேற்ப ரூ. 15—லிருந்து ரூ. 150 வரையில் ஆண்டு புத்தக மானியம் வழங்கப்படுகிறது. அரசு நடத்தும் தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் உள்ள இடங்களில் 5 சதவீதம் தாயகம் திரும்பியோருக்காக ஒதுக்கப்படுகிறது. அரசு நடத்தும் ஒவ்வொரு பாலிடெக்னிகுகளிலும் ஒரு இடம் தாயகம் திரும்பியோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் பட்டப்படிப்பு வகுப்புகளில் தாயகம் திரும்பியோருக்காக இரண்டு இடங்கள் ஒதுக்கப் படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள மருத்துவ, பொறியியல், சட்டம் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கீழே குறிப்பிட்டவாறு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன :—

| | |
|---|---|
| மருத்துவம் .. .. .. | 6 |
| பொறியியல் .. .. .. .. | 2 |
| சட்டம் .. .. .. .. | 4 |
| கால்நடை மருத்துவம் .. .. .. | 3 |

**பயிற்சியும் வேலை வாய்ப்பும் :**

வேலை வாய்ப்பிற்குத் தகுந்தவர்களாகச் செய்யும் வகையில் பல்வேறு வணிகத்திலும், தொழில்களிலும் தாயகம் திரும்பி யோருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் போது, அந்த குடும்பத்திற்கு 6 மாத கால அளவிற்குப் பராமரிப்புப்படியும் உதவித் தொகையும் கொடுக்கப்படுகிறது. சிறுவர்களுக்கும், சிறுமியர் களுக்கும் வேலை கிடைக்க இயலும் வகையிலும் அல்லது சொந்த தொழிலில் ஈடுபட இயலும வகையிலும் பல்வேறு பாட முறைகளி லும்தொழில்களிலும்அவர்களுக்குப்பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாணவர் இல்லத்தில் இட வசதி செய்து கொடுத்தால் மாணவர் இல்லக் கட்டணம், மாணவர் இல்லத்தில் அவர்களுக்கு இடவசதி கொடுக்கப்படாவிட்டால் அறை வாடகை, புத்தக மானியம், காப்பு முன் பண வைப்ப தொகை முதலியன கொடுக்கப்படுகின்றன- பயிற்சியை முடித்த பின்னர் பல்வேறு நிறுவனங்களில், கம்பனிகளில் அவர்கள் வேலையில் அமர்த்தப்படுகின்றனர் அல்லது சொதத்தில் வேலைத் தேடிக்கொள்கின்றனர்.

மலைத் தோட்டத் திட்டங்கள்:

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்ப வந்தோர்களில் பெரும்பாலோர் மலைத் தோட்டத் தொழிலாளர்களே ஆவர். அவர்களை மலைத் தோட்டங்களில் குடியமர்த்தப்படுவதற்காக தனியாகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மலைத் தோட்டங்களில் அவர்களுக்கு இலவசமாக இடவசதி அளிக்கப்பட்டு தொழிலாளர்களாக வேலைக்கமர்த்தப்படுகின்றனர். ஏனைய எல்லா வசதிகளும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இரண்டு பேர் முறையாக பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி :

இந்தியா திரும்பி வந்தோர் வியாபாரம் செய்வதற்கும், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இயலும் வண்ணம் அவர்களுக்கு கடன் வழங்குவதற்காக மத்திய அரசும், தென் மாநில அரசுகள் நான்கும், பங்குத் தொகை செலுத்தியதன் மூலம் சென்னையில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வங்கி திட்டங்களின் கீழ் தாயகம் திரும்பி வந்தோருக்கு பல்வேறு தொழிற் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இதுவரையில் 96.593 ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்கள் கீழ்க்கண்ட மறுவாழவுத் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் :—

| | திட்டங்களின் பெயர். | குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் |
|---|---|---|
| | (1) | (2) |
| 1. | தேயிலை—மலைத்தோட்டம் .. .. | 2,442 |
| 2. | இரப்பர் மலைத்தோட்டம் .. .. .. | 285 |
| 3. | சிங்கோனா மலத்தோட்டம் .. .. | 125 |
| 4. | மாநிலப் பண்ணைக் கழகம் .. .. .. | 2,161 |
| 5. | நிலக்காலனித் திட்டம் .. .. | 791 |
| 6. | விவசாய நிலம் வாங்கிக் கடன் .. .. .. | 149 |
| 7. | கூக்கல் விவசாயத் திட்டம் (திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்). .. | 177 |
| 8. | கூட்டுறவு நூற்பாலையில் வேலை .. .. | 3,[illegible] |



| | திட்டங்களின் பெயர். | குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள். |
|---|---|---|
| | (1) | (2) |
| 9 | தாயகம் திரும்பியோர் வங்கி திட்டம் மூலம் வேலை. .. .. | 4,918 |
| 10. | வணிகக் கடன் .. .. .. .. | 76,195 |
| 11. | சுயவேலை வாய்ப்புக் கடன் திட்டம் .. | 526 |
| 1., | வெளி மாநிலங்களில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள். | 4,880 |
| | | 96,593 |

இலங்கை அகதிகள் :

1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களைத் தொடர்ந்து, ஒப்பந்தங்களின் கீழ் இந்தியா வம்சாவழியினர் தாயகம் திரும்புவது நிறுத்தப்பட்டது; எனினும் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட அகதிகள் 24–7–1983 முதல் 25–8–1989 முடிய தொடர்ந்து வந்த வண்ணமிருந்தார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் மொத்தம் 1,34,053 அகதிகள் இந்தியா வந்துள்ளனர். இதில் மொத்தம் 39,918 ஆதரவற்ற அகதிகள் தமிழ்நாட்டிலுள்ள முகாம்களில் அனுமதிக்கப்பட்டனர். எஞ்சியோர் அவரவரது உற்றார் உறவினர்களுடன் முகாம்களுக்கு வெளியே தங்கியிருந்தனர். இலங்கையில் நிலைமை சற்று சீரடைந்தவுடன் 24–12–1987 முதல் 31–12–1989 முடிய உள்ள காலத்தில் கப்பல் மூலம் 25,585 அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எஞ்சியவர்கள் சிலர் முகாம்களை விட்டு தன்னிச்சையாக வெளியேறினர். சிலர் அரசு உதவி இல்லாமல் இலங்கைக்குத் திரும்பிச் சென்றனர். இன்னும் சிலர் இந்தியாவிலிருந்த நண்பர்கள் உறவினர்கள் இல்லங்களில் தங்கினர் இலங்கையில் மீண்டும் இனக்கலவரம் ஏற்பட்டதால் 25–8–1989 முதல் அகதிகள் புதிதாக வரத்துவங்கினர். 30–6–1990 முடிய அகதிகளாக வந்தர்களின் எண்ணிக்கை 4,575 மட்டுமே இருந்தது. ஆனால் 1–7–1990 முதல் அகதிகள் பெருமளவில் வரத்துவங்கினர். 15–7–1991 முடிய இலங்கையிலிருந்து 1,22,098 அகதிகள் இந்தியா வந்துள்ளனர். இவர்களில் 1,12,105 நபர்கள் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக உள்ள பிற மாவட்டங்களில் பல்வேறு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

[1991 செப்டம்பர் 27

இலங்கையிலிருந்து கள்ளத் தோணிகள் மூலம் வரும் அகதிகள் பெரும்பாலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரத்திலும், சில சமயங்களில் தனுஷ்கோடியிலும் வந்திறங்கினார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யத்திற்கும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் சிறுசிறு குழுவினராக வந்து சேருகிறார்கள். இராமேஸ்வரம் வந்து சேரும் அகதிகள் பதிவு செய்யப்படுவதற்காக இராமேஸ்வரத்திலுள்ள வரவேற்பு மையத்திற்கு கொண்டு வரப்படுகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம், நாகப்பட்டினம் வரும் அகதிகள் பதிவு செய்யப்பட்டு, அம்மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அகதிகள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தவுடன் அகதிகள் முகாம்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவதற்கு முன், இராமேஸ்வரத்தில் உள்ள வரவேற்பு மையத்தில் அவர்களுக்குச் சிற்றுண்டியும் உணவும் வழங்கப்படுகின்றன. வரவேற்பு மையத்தில் மறுவாழ்வுத் துறை, துறைமுகக் குடியுரிமைத் துறை, சுங்கம் மற்றும் பொது சுகாதார துறையைச் சார்ந்த அலுவலர்கள் அகதிகள் கொண்டு வந்த பொருட்களைச் சோதனை செய்கிறார்கள். இது முடிந்தவுடன். துறைமுகப் பதிவு அதிகாரி அகதிகள் வைத்திருக்கும் சான்றிதழ்களைச் சரிபார்ப்பதன் மூலமும், நேரடி விசாரணை மூலமும் அகதிகளைச் சோதனை செய்கிறார்கள். இதில் அவர்கள் ஆதரவற்ற அகதிகள்தான் என்று தெரிந்தவுடன் மறுவாழ்வுத்துறை அதிகாரிகளால் அகதிகளாகப் பதிவு செய்யப்படுகிறார்கள்.

அகதிகள் வரவேற்பு மையத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு, பல்வேறு முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இவை அனைத்தும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் பார்வையில் நடைபெறுகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு ஆகிய இரண்டு நிரந்தர முகாம்களைத் தவிர, கூடுதலாக 336 அகதிகள் முகாம்கள் அகதிகளைத் தங்க வைக்கும் பொருட்டு அமைக்கப்பட்டன. இன்றைய தேதியில் மொத்தம் 208 முகாம்கள் உள்ளன. மதுரை மாவட்டத்தில் விளாங்குடி என்ற இடத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து 792 வீடுகள் பழுது பார்க்கப்பட்டு அவற்றில் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஆவடியிலுள்ள இராணுவத் தளவாட கிடங்கிலிருந்து 530 இராணுவ கூடார சாதனங்கள் பெறப்பட்டு, மதுரை மாவட்டத்தில் தோப்பூர் என்ற இடத்திலும் செங்கல்பட்டு எம்.ஜி.யார் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி மற்றும் புழல் ஆகிய இடங்களிலும் தற்காலிகத் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டு, அங்கு அகதிகள் தங்க வைக்கப்பட்டனர்.



1991 செப்டம்பர் 27]

அகதிகளைத் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்காகப் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள பொதுக்கட்டிடங்கள், புயல் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் சேவை நிறுவனங்களைச் சேர்ந்த கட்டடங்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. அகதி முகாம்கள் அமைப்பதற்குத் தகுந்த தனியார் கட்டடங்களும் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 30-6-1991 நிலவரப்படி மொத்தம் 208 முகாம்களில் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அகதிகள் வருகை இடைவிடாமல் தொடர்ந்து இருப்பதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,000 குடிசைகள் வீதம் மொத்தம் 20,000 தற்காலிகமாக குடிசைகள் அமைக்க அரசு உத்திரவிட்டுள்ளது. 30-6-1991 தேதிய நிலவரப்படி மொத்தம் 18,309 குடிசைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவசியம் ஏற்படும்போது குடிசை கட்டும் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு வசதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலும் 500 குடிசைகள் அமைக்கத் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்குமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

அகதிகள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டவுடன் அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு மாதாந்திர ரொக்கப்பணம் வழங்கப்படுகிறது.

| | | ரூபாய். |
|---|---|---|
| 1 | ஒரு நபர் குடும்பம் | 150.00 |
| 2. | இருவர் அடங்கிய குடும்பம் (இரு வயது வந்தோர்) | 270.00 |
| 3. | மூவர் அடங்கிய குடும்பம் (இரண்டு வயது வந்தவர் மற்றும் ஒரு குழந்தை) | 345.00 |
| 4. | நான்கு நபர்கள் அடங்கிய குடும்பம் (இரு வயது வந்தவர் மற்றும் இரண்டு குழந்தைகள்) | 382.50 |
| 5. | ஐந்து நபர்கள் அடங்கிய குடும்பம் (மூன்று வயது வந்தவர்கள் மற்றும் இரண்டு குழந்தைகள்) | 502.50 |

முகாம்களில் அனுமதிக்கப்பட்டதும், அவர்களுக்கு அத்தியாவசியப்பண்டங்கள் வாங்கிக்கொள்ள குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. மலிவு விலையில் அரிசி கிலோ 57 பைசா வீதம் நாளொன்றுக்குப் பெரியவர்களுக்கு 400 கிராம் அளவிலும், சிறுவர்களுக்கு 200 கிராம் அளவிலும் வழங்கப்படுகின்றன. இதர அத்தியாவசியப் பொருட்களாக சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இவை தவிர இரண்டு ஜோடி உடைகளும், சமையல் செய்வதற்குத் தேவையான பாத்திரங்களும் மற்றும் பாய், படுக்கை விரிப்புகள் முதலியனவையும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

எல்லா முகாம்களிலும் குடிநீர், மின்சாரம் மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் முடிந்தவரை செய்து தரப்பட்டுள்ளன. அவர்களுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் பயனடையும் வகையில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி நகைக்கடன் வழங்கும் திட்டத்தினைத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தங்கள் நகைகளைத் தற்காலிகமாக அடகு வைத்துக் கடன் பெற விரும்பும் அகதிகள் மண்டபம் முகாம், இராமேஸ்வரம், விளாங்குடி மற்றும் கொட்டப்பட்டு முகாம்களில் துவக்கப்பட்டுள்ள தற்காலிக வங்கிக் கிளைகளை அணுகலாம். இவ்வங்கியின் பணியாளர்கள் மற்ற முகாம்களிலும் செயலாற்றுவர். இததிட்டத்தின் மூலம் பல்வேறு முகாம்களில் இதுவரை 1,408 அகதிகளுக்கு ரூ. 9.52 இலட்சம் வரை நகைக் கடன் பெற்றுள்ளனர்.

அரசின் தற்போதைய கொள்கைப்படி பதிவு செய்யத் தவறிய 1,52 இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்பியோர் கைது செய்யப்பட்டு அவர்களில் 994 பேர்கள் தகுந்த ஆவணங்களை தகுதி சான்றாக நிருபிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். தற்சமயம் 529 பேர்கள் சிறப்பு முகாம்களில் உள்ளனர்.

இலங்கை அகதிகளை திரும்ப அனுப்புவது குறித்து மைய அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட இலங்கை அரசினால் கேட்கப்பட்ட சில விவரங்களை மைய அரசு இவ்வரசினை விவரம் கேட்டுள்ளது. இது குறித்தான விவரங்களை மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மைய அரசின் முடிவினை எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு நிதி ஆண்டு 1990-91 இல் இலங்கை அகதிகளுக்கு நிவாரண நிதி உதவிகள் வழங்கிடவும் குடிசைகள் கட்டவும் கட்டிடங்களை பழுதுபார்க்கவும், தண்ணீர் வசதி, சுகாதார வசதி இன்னும் பிற வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு இதுவரை ரூ. 22.98 கோடி செலவு செய்துள்ளது. மைய அரசு இதுவரை மாநில அரசுக்கு ரூ. 21.25 கோடி முன் பணமாக வழங்கியுள்ளது.



## இணைப்பு—5

(48ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை—61.

### பல்வகை மூலதனச் செலவு—1991-92 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு.

இது ஒரு கூட்டு மானியக் கோரிக்கையாகும். எழுது பொருள் அச்சுத் துறை, குடிநீர் வழங்கல்—துப்புரவு, வீட்டு வசதி, செய்தி-விளம்பரம், ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலம், சமூகப் பாதுகாப்பும்-நலனும், ஏனைய சமூகப் பணிகள், கால் நடை வளர்ப்பு, பால் பண்ணை வளர்ச்சி, மீனளம், உணவு சேமிப்பு-கிடங்கு வசதி, கூட்டுறவு, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் மின்சக்தித் திட்டங்கள், சாலைகள்-பாலங்கள், சுற்றுலா ஆகியவை குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுப் பத்திரங்களின் பேரில் தொகை வழங்குதல், எஸ்டேட்டுகள், (நீக்குதல், ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்குதல், பொதுத் துறை, ஏனைய நிறுவனங்கள் முதலியவற்றில் முதலீடு செய்தல் போன்ற வேறு எந்தவொரு குறிப்பிட்ட மானியக் கோரிக்கையின் கீழும் சேர்க்க முடியாத பல்வகை இனங்களுக்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மானியக் கோரிக்கையில், பின்வரும் பெருங்கணக்குத் தலைப்புகளுக்கு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| கணக்குத் தலைப்பு. (1) | 1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1990-91 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. (3) | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 4058. எழுதுபொருள்-அச்சுத்துறை குறித்த மூலதனச் செலவு .. | 1,31 | 1,29 | 12 |
| 4216. வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு .. | .. | .. | 3,01 |
| 4225. ஆதி திராவிடர், பழங்குடியினர்/ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு. .. | 7,79 | 7,16 | 7,45 |
| 4235. சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு. .. | 10 | 10 | 12 |
| 4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. .. | 3,21 | 2,40 | 4,61 |
| 4403. கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு. | .. | 35 | 10 |
| 4404. பால் வளம் குறித்த மூலதனச் செலவு .. | 3 | 3 | 5 |
| 4405. மீன்வளம் குறித்த மூலதனச் செலவு .. | 81 | 1,30 | 1,15 |
| 4408. உணவு சேமிப்பு-கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு. ... | 50 | 50 | 50 |
| 4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு .. | 1,60 | 1,74 | (—)96 |
| 4711. வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. .. | 1,00 | 53 | 1,08 |
| 4801. மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. .. | .. | .. | 1,00 |
| 5054. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. .. | 1 | 17 | .. |
| 5452. சுற்றுலா குறித்த மூலதனச் செலவு .. | 45 | 58 | 48 |
| 5465. பொதுநிதி வர்த்தக நிறுவனத்தில் முதலீடு .. | ... | .. | 1,00 |
| 5475. ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள். ... | (—)1 | | 1 |

சில முக்கியத் திட்டங்களும் அவற்றிற்கு இம்மானியக் கோரிக்கையின் கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கங்களும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

எழுதுபொருள்-அச்சுத்துறை :

சென்னை அரசு மைய அச்சகத்தையும், மதுரை அரசினர் வட்டார அச்சகத்தையும் நவீனப்படுத்துவதற்கான இயந்திரங்களை வாங்குவதற்கு ரூபாய் 11.75 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதி-திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்.

1. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் :

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம், ஏனைய வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் கட்டும் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக 1991-92 ஆம் ஆண்டு ரூபாய் 1,65 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1991–92ஆம் ஆண்டில் தங்கிப் பயிலுவதற்கான விடுதியுடன் கூடிய அரசு பழங்குடியினர் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 21.27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. மாணவர் இல்லங்கள் கட்டுதல் :

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறை நடத்தி வரும் 862 அரசினர் மாணவர் இல்லங்களில் ஆதி-திராவிட மாணவர்களுக்கு 839 இல்லங்கள், பழங்குடி மாணவர்களுக்கு 23 இல்லங்கள்) 369 மாணவர் இல்லங்கள் (ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் 351, பழங்குடி மாணவர் இல்லங்கள் 18) அரசுக் கட்டிடங்களில் அமைந்திருக்கின்றன. ஆதிதிராவிடர்-பழங்குடி மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டும் பணியை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது. 1991-92ஆம் ஆண்டு, ஆதி திராவிட மாணவர்-மாணவியர் இல்லங்களைக் கட்டுவதற்கு ரூபாய் 229.96 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களோடு, மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பள்ளிகள், மாணவர் இல்லங்கள் முதலியவற்றைக் கட்டுவதற்கு ரூபாய் 229.96 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களோடு, மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிகள், மாணவர் இல்லங்கள் முதளியவற்றைக் கட்டுவதற்கு ரூபாய் 21.32 இலட்சமும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாணவர் இல்லங்கள், பள்ளிகளைக் கட்டுவதற்கு ரூபாய் 7 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.





(3) தமிழ்நாடு ஆதி–திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குப் பங்கு மூலதன முதலீடு.

1991-92 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தில், பங்கு மூலதன முதலீட்டிற்காக ரூபாய் 200 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன உதவித் தொகை.

புதிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்காக இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குக் கூடுதல் பங்கு மூலதன உதவித் தொகைக்காக ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கழகம், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கிராமக் குடிசைத் தொழிலுக்கும் தொடக்க நிதியுதவி அளிக்கும் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது. இதுவரை 41 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடக்க நிதியுதவி முன்பணமாக ரூபாய் 13.2 இலட்சம் வழங்கியுள்ளது. இதனால் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 2,152 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

சமூகப் பாதுகாப்பும் நலனும்.

மதுரை, தல்லாகுளம் அரசினர் கண்பார்வை அற்றோருக்கான பள்ளிக்கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 3 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய சமூகப் பணிகள்

1991-92 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பகங்களுக்காக கட்டிடங்கள் கட்டுவதற்காக, ரூ.25.00 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு தொழில் பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 5.00 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(2) உலக வங்கியின் நிதியுதவி பெறும் தொழில் திறமை மேம்பாட்டுத் திட்டம்.

1991-92 ஆம் ஆண்டில் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ரூபாய் 430.00 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. சாதனங்களை நவீன மயமாக்குதல் . | 220.00 |
| 2. சாதனம்-பராமரிப்புப் பிரிவுகளை ஏற்படுத்தல். ... .. .. | 25.00 |

(ரூபாய் இலட்சத்தில்.)

3. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் ஒலி-
ஒளிச் சாதனங்களுக்கு வகை
செய்தல். .. ..
4. தொழிற் பயிற்சி நிறுவனங்களை விரிவு .. 20.00
படுத்தல். .. ..
5. அடிப்படை பயிற்சி நிலையங்களையும் .. 50.00
அவற்றோடு தொடர்புடைய பயிற்சி
6. நிலையங்களையும் ஏற்படுத்தல்
வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் .. 40.00
திட்டத்தை விரிவுபடுத்தல்
7. மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனங் .. 25.00
களைத் தொடங்குதல் .. .. 50.00

மொத்தம் 430.00

மேற்சொன்ன செலவை மாநில அரசும், மத்திய அரசும் சமமாகப் பங்கீட்டுக் கொள்கின்றன.

### மீனளம்.

(1) உள்நாட்டு மீனளம் :—

உள்நாட்டு மீனள மேம்பாட்டுக்கான மூலதனப் பணிகளுக்
காக ரூபாய் 35.94 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.
பவுமுத்தாறில் 10 எக்டேரில் மீன் பண்ணை அமைக்கும் பணியை
முடிப்பதற்கு இந்த நிதியொதுக்கம் பயன்படுத்தப்படும். மேலும்
இந்த ஆண்டில் நீலகிரி மாவட்டத்திலுள்ள ஏரிகளின் மேம்பாட்
டுப் பணி முதலானவையும் முடிக்கப்படும்.

(2) கடல் மீனளம்

1991-92 ஆம் ஆண்டில், கடல் மீனள மேம்பாட்டுப் பணி
களுக்கான மூலதனச் செலவுக்காக வரவு—செலவுத் திட்டத்தில்
ரூபாய் 4.47 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏர்
வாடியில் மீன் பிடிப்பதற்கான அடிப்படை வசதிகளையும்
தொண்டியில் கரையோர வசதிகளையும் செய்து கொடுக்கும்
பணிகளை முடிப்பதற்காக இந்நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்
ளது.

(3) மீன் பிடித் துறைமுகம், பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்
கான வசதிகளும்;—

சின்ன முட்டத்தில் மீன் பிடித் துறைமுகம்-தோணித் துறை
கட்டுவது தொடர்பாக வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 50
இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



### உணவுப் பொருள் சேமிப்பும், கிடங்கு வசதியும் ;

இருபத்தைந்து நேரடிக் கொள்முதல் நிலையங்களையும்,
5 கிடங்குகளையும் கட்டுவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள்
வாணிபக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக
ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுறவு.

இம்மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், உழவர்
கள் பயிர் சாகுபடியை மேற்கொள்ளக் குறுகிய காலக் கடன்
களையும், வேளாண்மை துணைத் தொழில்களை மேற்கொள்ள
நடுத்தர காலக் கடனையும் வழங்குகின்றன. தொடக்கக் கூட்
டுறவு வங்கிகள், அவை இணைந்துள்ள மத்திய கூட்டுறவு வங்கி
கள் ஆகியவை, அவற்றின் சொந்த நிதி வாயில்களை பெருக்கிக்
கொள்வதற்காக அரசு, தேசிய ஊரகக் கடன் (நீண்ட காலக்
கடன்) நிதியிலிருந்து தேசிய வேளாண்மை-ஊரக வளர்ச்சி
வங்கியின் (Nabard) கடன் வசதியைப் பயன்படுத்தி, அந்நிறுவ
னங்களின் பங்கு மூலதனத்திற்கு தொகை வழங்குகிறது.
"நபார்டு" வழங்கும் கடனுதவியைப் பயன்படுத்துவதற்கும்,
கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகளின் பங்குகளில் முதலீடு
செய்வதற்கும் 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட
மதிப்பீட்டில் ரூபாய் 50 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

2. கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களில் ஊரகக் கிடங்கு
களையும், மண்டி எனப்படும் சந்தைகளில் விற்பனைக் கிடங்கு
களையும் கட்டுகின்றன. இன்றியமையாப் பொருள்களை வழங்
கும் பணியில் ஈடுபட்டுள்ள தலைமைச் சங்கங்கள் நுகர் பொருள்
கிடங்குகளைக் கட்டுகின்றன. உலக வங்கி கூட்டுறவு கிடங்கு
வசதித் திட்டம் III-ன் கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறு
வனம் வரையறுத்துள்ள நிதியுதவி முறையின்படி, கிடங்கு
கள் கட்டுவதற்கான நிதியுதவி 50 சதவீதம் கடன் என்ற
வரையிலும் 45 சதவீதம் பங்கு மூலதனமாகவும் வழங்கப்படு
கிறது. இதில் எஞ்சிய 5 சதவீதத்தை கூட்டுறவு சங்கம் ஏற்
கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் செலவில் 50 சத
வீதத்தை தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்
குக் கடனாக வழங்குகிறது. அத்தொகையைத் தலைமைக்
கூட்டுறவு வங்கி கூட்டுறவு சங்கங்களுக்கு கடனாக வழங்க
வேண்டும். தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் செலவுத்
தொகையில் 25 சதவீதத்தை மாநில அரசிற்குக் கடனாக
வழங்குகிறது. அதற்குப் பதிலாக மாநில அரசு, கிடங்குகளைக்
கட்டும் பணியை மேற்கொள்ளுவதற்குச் செலவில் 45 சத
வீதத்தை கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பங்கு மூலதனமாக
வழங்குகிறது. 1991-92 ஆம் ஆண்டில் ஊரகக் கிடங்குகள்
50-ம், விற்பனைக் கிடங்கு ஒன்றும் கட்டுவதற்காக கூட்டுறவுத்

[1991 செப்டம்பர் 27

சங்கங்களுக்கு நிதியுதவி வழங்க கருதப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியில் பங்கு மூலதனத் தொகையாக 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூபாய் 49.74 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. இச்சமுதாயத்திலுள்ள பழங்குடியினர் நலனுக்காக பேரளவுப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 18 ஏற்படுத்தப் பட்டுள்ளன. அவற்றில் 16 பழங்குடியினர் பகுதிகளிலும் 2 ஏனைய மக்கள் வாழ்கின்ற பிற பகுதிகளிலும் உள்ளன. இச்சங்கங்களுக்கு அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்குகிறது.

4. நாட்டிலுள்ள தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திட்டமொன்றை தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் வகுத்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் காமராஜர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. உழவுத் தொழிலிலும், தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் பிடித்தல் முதலியவை போன்ற உழவுத் தொழில் சார்ந்த துறைகளிலும், கைத்தறிகள் ஊரகத் தொழில்கள், கைவினைஞர்கள் போன்ற பண்ணை சாராத் துறைகளிலும் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியைப் பலதிறப்படுத்துவதும்' அவை ஆற்றும் பணிகளின் அளவை அதிகரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். கூட்டுறவுச் சங்கம் எண்ணிக்கை அடிப்படையில் வளர்ச்சி அடைவதை விட அது பணி புரியும் பரந்துபட்ட பல்வகை நடவடிக்கையின் அடிப்படையில் வளர்ச்சி அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் காமராஜர் மாவட்டத்தில் ரூபாய் 862.51 இலட்சம் மொத்தச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை காமராஜர் மாவட்டத்தில் செயல்படுத்துவதற்கான பங்கு மூலதனம் தொடர்பாக 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. பொதுவாக, கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு செய்யப்படும் பங்கு மூலதனத் தொகைகள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு திருப்பிக் கொடுக்கப்படும் தொகைகள் ''கழிக்கவும்-மூலதனக் கணக்கில் வரவுகளும் திருப்பி வசூலிக்கப் படுபவைகளும்'' என்று காட்டப்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டில், முதலீடு செய்த பங்கு மூலதனத் தொகையில் ரூ. 269.44 இலட்சம் திருப்பிக் கொடுக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

6. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 27]

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்.

கடல் அரிப்பு பாதிப்புள்ள மீனவர் குப்பங்களில் கடல் அரிப்பைத் தடுக்கும் வண்ணம் பாறாங்கற்களைக் கொண்டு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 107.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின்சக்தி.

புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்வதற்காக, புதிதாக மின் உற்பத்திக் கழகம் ஒன்றை ஏற்படுத்த பங்கு மூலதன நிதியுதவி தொடர்பாக 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக புதிதாக ஏற்படுத்தப்பட்ட மின் உற்பத்தி நிதியுதவி அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன நிதியுதவி தொடர்பாக ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா.

இவ்வாண்டில் பூம்புகாரில் உள்ள சுற்றுலா மையத்தை மேம்படுத்த ரூபாய் 10 இலட்சமும், மாவட்ட சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக ரூ. 12.00 இலட்சமும், மத்திய நிதியுதவி பெறும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 17.20 இலட்சமும் 1991-92 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இணைப்பு 7.

(....ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 62.

### மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண் 62-ல், மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள். முன்பணம் ஆகியவை குறித்த நிதியொதுக்கங்கள் அடங்கும். பல்வேறு துறைகளின் நிதிச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை அளிக்கும்போது பல்வேறு துறைகளுக்காக நிதியுதவி வழங்குவதற்குப் பின்னணியில் உள்ள பொதுவான கொள்கை விளக்கப்பட்டுள்ளது. இந்த மானியக் கோரிக்கையில் பல்வேறு துறைகள், அவற்றின் நடவடிக்கைகள் குறித்த முழு விவரத்தையும் அளிக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள முக்கியமான நிதியொதுக்கங்கள் மட்டுமே இக் குறிப்பில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. துறை வாரியான தனித்தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;—

| வளர்ச்சித் தலைப்பு. (1) | 1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1990-91 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு (3) | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| வேளாண்மை, சிறு பாசனம், வேளாண்மை நிதியுதவி நிறுவனங்கள், மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள். | 6,37,13 | 22,21.30 | 18,25.63 |
| மீனளம் .. | 0.01 | .. | .. |
| கால்நடை வளர்ப்பு. | .. | 9.98 | 9.98 |
| உணவு, சேமிப்பு கிடங்கு வசதி. | 14,60.02 | 0.03 | 0,02 |



| வளர்ச்சித் தலைப்பு. (1) | 1990-91 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1990-91 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. (3) | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| மலைப்பகுதி மேம்பாடு. | 30.00 | 2,03.36 | 1,93.65 |
| கூட்டுறவு | 9,26.62 | 1,88.21 | 1,03.34 |
| தொழில்கள் | 22,51.85 | 29,96.18 | 35,25.09 |
| வீட்டு வசதி | 8,00.24 | 17,80.07 | 21,00.24 |
| நகர்ப்பகுதி வளர்ச்சி. | 17,50.01 | 17,50.02 | 25,03.01 |
| மருத்துவம்-மக்கள் நல் வாழ்வு. | 3.10 | 3.50 | 3.50 |
| குடிநீர் வழங்கல்-துப்புரவு. | 58,23.41 | 53.73.68 | 52,98.21 |
| மின் சக்தி | 2,25,00.00 | 1,50,00.00 | 1,48,00.00 |
| பொதுக் கல்வி, கலை, பண்பாடு. | 25.01 | 30.01 | 30.01 |
| தொழில் நுட்பக் கல்வி. | 0.51 | 0.38 | 0.39 |
| ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன். | 91.30 | 99.80 | 91.08 |
| இலங்கை, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறு வாழ்வு. | 1,66.05 | 1,66.18 | 1,15.88 |
| சாலைகளும் பாலங்களும். | 93.16 | 1,03.15 | 55.05 |

| வளர்ச்சித் தலைப்பு. (1) | 1990-91 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | 1990-91 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. (3) | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| சாலைப் போக்கு வரத்து-சுற்றுலா. | 0.45 | 3,00.31 | 0.38 |
| அரசு ஊழியர்களுக்கு கடன்கள். | 34,21.42 | 35,72.42 | 39,10.02 |
| ஏனைய கடன்கள் | 2,08.64 | 32,00.21 | 77.64 |
| மொத்தம் .. | 4,01,88.93 | 3,69,98.79 | 3,46,43.03 |

### மின் சக்தி.

2. 1991-92 ஆம் ஆண்டிற்கான இந்த மானியக் கோரிக்கையில், முக்கியமான முதலீடு, மின்வாரியத்தின் மின்சக்தித் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மின்சக்தி நிதியுதவி-அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கும் நிதியுதவி அளிப்பதும் ஆகும் இந்நோக்கத்திற்காக ரூபாய் 1,48.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கல்-துப்புரவு.

3. குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டங்களுக்காக 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 52,98.21 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பின்வரும் திட்டங்களுக்காக முக்கிய நிதியொதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன;—

| | | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள்: | | |
| (i) குடிநீர் வழங்கல் திட்டங்கள். | 30,23.98 | 32,99.21 |
| (ii) வடிகால் திட்டங்கள் | 2,75.23 | |



| | | 1991-92ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2 சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் : | | |
| (i) குடிநீர் வழங்கு திட்டங்கள். | 12,15.00 | 19,91.50 |
| (ii) கழிவு நீரகற்று திட்டங்கள். | 7,76.50 | |
| 3. பேரூராட்சிகளில் பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கான கடன்கள் .. | | 7.50 |
| மொத்தம் (1) முதல் (3) வரை .. | | 52,98.21 |

4. குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்று திட்டங்களை நிறை வேற்றுவதில் பெருமளவு மூலதன முதலீடுகள் செய்ய வேண்டி யுள்ளது. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு வழங்கும் வரவு-செலவுத் திட்ட நிதி ஆதாரங்களுடன், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது. இத் திட்டங்களுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கீழ்க்கண்ட முறையில் நிதியுதவி அளிக்கிறது;—

| | ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பங்கு. |
|---|---|
| 1. ரூபாய் ஒரு கோடி வரையில் செலவாகும் திட்டப் பணிகளுக்காக .. | செலவில் 2/3 பங்கு. |
| 2. ரூபாய் ஒரு கோடிக்கு மேல் செலவாகும் திட்டப் பணிகளுக்காக— | |
| திட்டச் செலவில் முதல் ரூபாய் ஒரு கோடிக்கு .. | செலவில் 2/3 பங்கு. |
| திட்டச் செலவில் அடுத்த பகுதி ஒரு கோடிக்கு .. | செலவில் 50 சதவீதம் |

| | | |
|---|---|---|
| திட்டச் செலவில் அடுத்த ரூபாய் 3 கோடிக்கு | .. | செலவில் 40 சதவிதம். |
| ரூபாய் 5 கோடிக்கும் அதிகமான செலவிற்கு | .. | ரூபாய் 5 கோடிக்கும் அதிகமாக ஆகும் செலவில் 25 சதவிதம் |

5. மேற்சொன்ன நிதியுதவி வழங்கும் முறை நகர்ப் பகுதி குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுத் திட்டங்களுக்குப் பொருந்தும் ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவாக செலவாகும் வரகத் திட்டங்களுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் அளிக்கும் நிதியுதவி, செலவில் 50 சதவிதம் என்ற அளவில் இருக்கும். ரூபாய் ஒரு கோடிக்கு அதிகமாகச் செலவாகும் திட்டங் களுக்கு ஆயுள் ஈட்டுறுதி கழகம் அளிக்கும் நிதியுதவி, முதல் ரூபாய் ஒரு கோடிக்குச் செலவில் 50 சதவிதமாகவும், எஞ்சியச் செலவிற்கு மேலே நகர்ப் பகுதித் திட்டங்களுக்கு குறிப்பிடப்பட்ட நிதியுதவி அளிக்கும் முறையிலும் இருக்கும்.

6. எஞ்சிய செலவை உள்ளாட்சி மன்றங்கள், அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தோ, மாநில அரசு வழங்கும் மானியம் அல்லது கடனிலிருந்தோ செய்ய வேண்டும்.

7. குறைந்த அளவு தேவைகள் திட்டம், விரைவுபடுத்தப் பட்ட கிராம குடிநீர் வழங்கல் திட்டம், உலக வங்கியின் உதவி யுடன் நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்குவதை அதிகரிக்கும் திட்டம் (தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—துப்புரவுத் திட்டம்) ஆகியவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றி வரும் சில முக்கிய திட்டங்களாகும்.

8. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் பல்வேறு பெருந் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த வாரியம் நிறைவேற்றி வரும் சில முக்கிய திட்டங்களில் எம்.டி.டி.டி.எஸ். கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டம், உலகவங்கி திட்டம் (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம்) ஆகியவை அடங்கும். இத்திட்டங்களுக்கு, வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தொழில்.

9. தொழில் துறைக்கு மொத்தம் ரூபாய் 35,25,09 இலட்சம் நிதி ஒதுக்கீடு மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இத் துறைக்காக செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகள் வருமாறு:—

(i) வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கும் (I.F.S.T. Loan) திட்டத்தையும், (ஆ) குறித்தகாலக் கடன் வழங்கும் திட்டத்தையும் செயற்படுத்துவதற்கு, தமிழ்நாடு மாநில தொழில்



மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூபாய் 10,00,00 இலட்சம் கடன் வழங்குதல். (ii) மூலதனத்திற்குப் பதிலாக மாற்றத்தக்கக் கடனாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு ரூபாய் 6,00,00 இலட்சம் வழங்குதல் (iii) மாவட்ட தொழில் மையங் கள் மூலம் சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன்களை வழங்குவதற்கு ரூபாய் 2,00,00 இலட்சம் வழங்குதல். (iv) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூபாய் 10,00,00 இலட்சம் கடன்.

### வீட்டு வசதி—நகர்ப்பகுதி வளர்ச்சி

10. வீட்டுவசதி—நகர்ப் பகுதி வளர்ச்சிக்காக 1991-92 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 46,03,25 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான ரூபாய் 7,00,00, இலட்சம். நிதி யொதுக்கீடும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்குரிய வீடுகள் கட்டுவதற்கான ரூபாய் 1,00,00 இலட்சம் ஒதுக்கீடும், நகர நாட்டுப்புற அமைப்புத்திட்ட வாரியத்திற்குக் கடனாக ரூபாய் 2,00,00 இலட்சமும். தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ்நில மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்து வதற்கான ரூபாய் 9,00,00 இலட்சமும் இதில் அடங்கும்.

### அரசுப் பணியாளர்களும், ஏனைய பணியாளர்களும்.

11. அரசுப் பணியாளர்களுக்கான பல்வேறு வகைப்பட்ட முன் பணத்திற்காக வரவு—செலவுத் திட்டத்தில் ரூபாய் 39,10,02 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முன்பணம் வழங்கு வதற்காக நிதியொதுக்கீட்டில் பெரும்பகுதி, அதாவது, ரூபாய் 16,36,00 இலட்சத்திலிருந்து ரூபாய் 18,66,60 இலட்சமாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் ஆகியோருக்குப் பல்வேறு வகைப்பட்ட முன் பணத்தை வழங்குவதற்காகவும் ரூபாய் 9,50 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிப் பணியாளர்கள் வீடுகள் கட்டுவதற்கு முன் பணம் அனுமதிப்பதற்காகவும். 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 50.00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கடன்களைத் திரும்ப வசூலித்தல்

13. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டு, வசூலிக்கப்பட வேண்டிய தொகைகள் 1991—92 ஆம் ஆண்டில் ரூபாய் 97,53,82 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

14. முக்கியமான நிதியொதுக்கீடுகள் குறித்த பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

(செலவினங்கள்)

| | 1991–92 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. வேளாண்மை | |
| மண் வளப் பாதுகாப்பு .. .. | 3,06,00 |
| 2. தொழில்கள் | |
| தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்). | 10,00.00 |
| மாவட்டத் தொழில் மையங்கள் (தொடக்க உதவித் தொகை வழங்குவதற்காக). | 65,00 |
| தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 6,00.00 |
| அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் | 4,00,00 |
| தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்குக் கடன்கள். | 10,00.00 |
| 3. கைத்தறி | |
| கைத்தறிகளை நவீனப்படுத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 33.00 |
| 4. வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி | |
| தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டங்கள். | 7,00.00 |
| தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிலமேம்பாடும் குடிசை மேம்பாடும். | 9,00.00 |
| ஒட்டு மொத்தமாக நிலம் கையகப் படுத்தல், நில மேம்பாட்டுத் திட்டங்கள். | 1,50.00 |
| குறைந்த வருவாய்ப் பிரிவினர் வீட்டு வசதித் திட்டம். | 1,00.00 |
| தமிழ்நாடு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட வாரியத்திற்கு கடன்கள். | 2,00.00 |



| செலவினங்கள்—தொடர்ச்சி. | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 4. வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி—தொடர்ச்சி. | |
| பெருந்து-பார வண்டிகள் நிறுத்துமிடங்கள் கட்டுவதற்குச் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குக் கடன்கள். | 53.00 |
| 5. மின்சக்தி : | |
| தமிழ்நாடு மின்வாரியத்திற்கான ஏனைய கடன்கள். | 50,00.00 |
| தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் (ஆசிய வளர்ச்சி வங்கி) கடன் வழங்க மின்சக்தி நிதி உதவிக் கழகத்திற்கு கடன்கள். | 98,00.00 |
| 6. கல்வி, கலை, பண்பாடு : | |
| தேசியப் படிப்புதவிக் கடன் திட்டம். | 30.00 |
| 7. ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் : | |
| தொழிற்கல்வி, பட்டப்படிப்பு, பயில ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்குக் கடன்கள். | 80.85 |
| 8. மறுவாழ்வுத் திட்டங்கள் : | |
| இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வீட்டு வசதி கடன்கள். | 1,00.00 |
| 9. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்கள் தவிர) | |
| நகராட்சிகள் : | |
| நகராட்சி சாலைகள் ... .. | 30.00 |
| சாலைகள், பாலங்கள் அமைத்தல் .. | 25.00 |

இணைப்புகள்.

| செலவினங்கள்—தொடர்ச்சி. | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| **10. மாநகராட்சிகள்** | |
| சென்னை மாநகராட்சி .. .. | 12.00.00 |
| மதுரை மாநகராட்சி .. .. | 0.01 |
| கோயம்புத்தூர் மாநகராட்சி .. | 0.02 |
| **11. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் :** | |
| தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிக் கடன்கள். | 1,80.00 |
| வேளாண்மை இடுபொருட்களை வாங்கி வழங்க கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 8,00.00 |
| **12. அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள்—** | |
| வீடுகள் கட்டுவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு கடன்கள். | 18,88.60 |
| மோட்டார் வண்டிகள் வாங்குவதற்கான முன்பணம். | 4,00.00 |
| கைத்தறித் துணிகள் வாங்குவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள். | 8,50.00 |
| ஏனைய போக்குவரத்து வாகனங்களை வாங்குவதற்கான முன்பணம். | 1,25.00 |
| திருமண முன் பணம் .. | 1,25.00 |
| கல்லூரி/பல்தொழிற் பயிற்சிப் பயிலகங்களில் மேற்படிப்பிற்கான கடன்கள். | 1,60.00 |
| கம்பளி ஆடைகள் வாங்க முன்பணம். | 42.00 |
| கடன் அடிப்படையில் கதர்த்துணி வாங்குவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள். | 2,75.00 |
| **13. ஏனைய கடன்கள்;** | |
| நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடு கட்ட முன் பணம். | [illegible] |



இணைப்பு-7.

48 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.

## பொது (அரசியல் ஓய்வூதியத்) துறை.

ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் :

2235—சமூகப் பாதுகாப்பு-நலத் திட்டங்கள் 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் 102. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம்—திட்டத்தில் சேராதது—ஏ.எப். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஓய்வூதியம் முதலியன (த.தொ.கு. எண் 2235—60—102 ஏ.எப். 0005).

கொள்கை விளக்கக் குறிப்பு :

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் மாநில அரசாலும், மத்திய அரசாலும் ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன. இந்த இரு திட்டங்கள் செயல்பட்டுவரும் விவரம் பின்வருமாறு:—

1. மாநில அரசு ஓய்வூதியத் திட்டம்.

இந்த திட்டம் 1-10-1966 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(1) ஓய்வூதியம் பெறுவதற்கு முக்கிய நியந்தனையாக மூன்று வாரங்கள் சிறைத் தண்டனை அனுபவித்திருக்க வேண்டும்.

(2) 11-3-1983 முதல் ஓய்வூதியம் வழங்கும் கோரிக்கையை பரிசீலிக்கும்போது மனுதாரரின் வருமானத்தை கணக்கில் கொள்வதில்லை.

(3) அரசின் காலக் கெடுவான 15-6-1982-க்குப் பிறகு பெறப்படும் மனுக்களாயினும், சிறைச் சான்றிதழ் மற்றும் அதிகார பூர்வமான அலுவலகச் சான்றுகள் ஆகியவற்றை சமர்ப்பிப்பவர்களுக்கு கால வரம்பு கிடையாது.

(4) மாநில ஓய்வூதியம் 1-10-1966 முதல் மாதம் ரூ. 50 ஆகவும், 15-8-1972 முதல் மாதம் ரூ. 75 ஆகவும், 1-6-1979 முதல் மாதம் ரூ. 100 ஆகவும், 25-1-1981 முதல் மாதம் ரூ. 150 ஆகவும், 10-6-1986 முதல் மாதம் ரூ. 250 ஆகவும், 1-6-1989 முதல் ரூ. 350 ஆகவும், 1-1-1991 முதல் ரூ. 400 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

(5) மாநில ஓய்வூதியத்துடன் மத்திய ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதம் ரூ. 75 ஆகவும் வழங்கப்பட்ட மாநில ஓய்வூதியம் 25-1-1981 முதல் மாதம் ரூ. 100 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

(6) 1944 ஆம் ஆண்டிற்கும் 1947 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றுள்ள விடுதலைத் தொடர் பான பல்வேறு போராட்டங்கள் மற்றும் கிளர்ச்சிகளில் ஈடுபட் டோர் பணி நீக்கம் செய்யப்பட்டோர் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டோர், தலைமறைவானோர் ஆகியோர்கட்கும் ஓய்வூ தியம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

(7) மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தங்கள் மறைவிற்குப்பின் எவ்வித காலதாமதமின்றி தொடர்ந்து ஓய்வூதியம் பெறுவதற்காக தங்கள் மனைவிமார் களையோ அல்லது கணவன்மார்களையோ வாரிசுதாரர்களாக நியமனம் செய்ய அனுமதி வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(8) தற்பொழுது மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று நிரந்தர மாக தங்கியிருப்பினும் தமிழ்நாட்டிலிருந்து மாநில ஓய்வூதியம் பெற அவர்களுக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

(9) 15–10–1988 அன்று 70 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய மனுதாரர்கள், 16–11–1988 அன்று அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 15 நபர்களில், ஒருவரிடமிருந்து உடனிருப்புச் சான்றிதழைப் பெற்று அனுப்பப்படும் மனுக்களை பரிசீலித்து சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர் ஓய்வூதியம் வழங்கலாம் என்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் 28–8–1990 அன்று ஒரே சிறைச்சாலையில் ஒரே சமயத்தில் மனு தாரரும் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கான உடனிருப்பு சான்றிதழ்களை அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 நபர்களில் இரு வரிடமிருந்து மனுதாரர் பெற்று சுதந்திர போராட்ட விடுதலை வீரர் ஓய்வூதியம் வழங்கக்கோரி மனுக்களை அனுப்ப வேண்டும் என்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

(10) இந்த அரசு மாநில விடுதலைப் போராட்ட வீரர் களுக்கான ஓய்வூதியத்தை 1–8–1989 முதல் மாதம் ரூ. 300 லிருந்து மாதம் ரூ. 350 ஆக உயர்த்தியது. அவ்வாறு உயர்த்திய போது கீழ்க்கண்ட சலுகைகளையும் வழங்கியது; (1) இறந்த விடுதலைப் போராட்ட வீரர்களின் இறுதிச் சடங்குகள் செய்வ தற்கான ரூ. 1,000-த்தினை அவர்கள் நேரடி வாரிசுகளுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இச்சலுகை தமிழ்நாட்டில் மாநில மற்றும் மத்திய ஓய்வூதியம் பெற்றுவரும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் பொருந்தும். இவ்வாறு இறந்த விடுதலைப் போராட்ட வீரருக்கு அரசு மரியாதை செலுத்தும் வகையில் அவர் உடல் மீது வட்டாட்சியர் அந்தஸ்துக்குக் குறையாத அரசு அதிகாரி ஒருவர் அரசு சார்பில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.



(9) விடுதலைப்போராட்ட வீரர்களுக்கு வருமான சான்றிதழ் வழங்கும்போது அவர்களுக்கு வழங்கப்படும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை அன்னாரின் வருமா னத்தில் சேர்த்துக் கணக்கிடக் கூடாது என்று ஆணையிடப் பட்டுள்ளது.

(11) மாநில மற்றும் மத்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறுபவர்கள், இரண்டு ஓய்வூதியங் கள் சேர்த்துப் பெறுபவர்கள் மற்றும் தொடர் ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகிய அனைவருக்கும் மருத்துவப் படியாக மாதம் ரூ. 15, 1–8–1990-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

(12) நாட்டின் விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய கீழே குறிப்பிட்டுள்ள தலைவர்களையும் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களையும் சிறப்பினமாகக் கருதி அரசு கௌரவித்துள்ளது.

(அ) மறைந்த தலைவர் திரு. காமராஜ் அவர்களின் தங்கை திருமதி நாகம்மாள் அவர்களுக்கு மாதம் ரூ. 250 ஆக கொடுக்கப்பட்ட ஓய்வூதியம் 1–7–1978 முதல் மாதம் ரூ. 500 ஆகவும் மீண்டும் 23–1–1984 முதல் மாதம் ரூ. 1,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வந்தது.

(ஆ) தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் துணைவி யார் திருமதி இராமாயி அவர்களுக்கு ரூ. 10,000 வழங்கிய துடன் அவர் பெற்று வந்த மாத ஓய்வூதியம் ரூ. 75-லிருந்து 3–12–1979 முதல் ரூ. 400 ஆக உயர்த்தி வழங்கி வருகிறது.

(இ) தியாகி திரு தூக்கு மேடை இராஜகோபாலன் அவர்களுக்கு 1–11–1980 முதல் மாதம் ரூ. 500 ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஈ) பழம்பெரும் தியாகி யோகி சித்தானந்த பாரதி அவர்களுக்கு 28–12–1981 முதல் மாதம் ரூ. 500 ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

(உ) சிவகங்கை மருதுபாண்டிய சகோதரர்களின் 202 வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியமாக 19–7–1982 முதல் மாதம் ரூ. 150 வழங்கப்பட்டு வருகிறது.

(ஊ) செங்கோட்டை வீரர் வாஞ்சிநாதன் அவர்களின் சகோதரர் திரு. ஆர். கோபாலகிருஷ்ணனுக்கு மாதம் ரூ. 500 ஓய்வூதியமும், அமைச்சர் தரத்தில் இலவச மருத்துவ வசதியும் வழங்கப்பட்டு வருகிறது.

(எ) வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்கள் 16 பேருக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ. 150 வழங்கப்பட்டு வருகின்றது.

(ஏ) மறைந்த சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ. சிதம்பரம்பிள்ளையின் பேத்தி திருமதி எஸ். சேதுலட்சுமிக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 25,000 வழங்கப்பட்டது. மேலும் இவருக்கு 1–8–1989 முதல் அவர் தம் வாழ்நாள் முழுவதும் மாநில ஓய்வூதியமாக ரூ. 350 வழங்கப்பட்டு வருகின்றது.

(ஐ) மதுரை மாவட்டம் போடிநாயக்கனூரைச் சேர்ந்த திரு. பழனிவேல் மணியம் என்பவருக்கு 30–3–1989 அன்று முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 கருணையின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

(ஒ) மறைந்த தியாகி பரலி. சு. நெல்லையப்பரின் மகள் திருமதி பூங்கோதை அம்மாளுக்கு 16–10–1988 முதல் அவர் வாழ்நாள் வரை மாதம் ரூ. 500 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஓ) மறைந்த திரு. வி. ராமசாமி ஐயங்கார் அவர்களின் மனைவி திருமதி புவனேசுவரிக்கு 1–6–1990 முதல் அவர்தம் வாழ்நாள் முழுவதும் மாநில ஓய்வூதியமாக ரூ. 1,000 வழங்கப்பட்டு வருகின்றது.

(ஔ) சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் திரு. ஸ்ரீ பாத சங்கர் என்பவருக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000, 7–11–1990 அன்று வழங்கப்பட்டது.

(13) விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டு வரும் மற்ற சலுகைகள் பின்வருமாறு:—

(அ) மருத்துவ வசதி;

மத்திய அல்லது மாநில அரசுகளின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர் அல்லது அவரைச் சார்ந்தவர் அரசு மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை பெறவும் 'பி' வகுப்பில் படுக்கை வசதி பெறவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கல்விச் சலுகை:

விடுதலைப் போராட்ட வீரர்களின் பிள்ளைகளுக்கு பட்ட மேற்படிப்பு வரையில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பில் ஓர் இடம் 1980–81ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்யவும் இதனை ஆண்டுதோறும் தேவைக்கேற்ப புதுப்பிக்கவும் கல்வித்துறையால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதுபோலவே ஆங்கில மருத்துவக் கல்வி பயில மூன்று இடங்களும் சித்த மருத்துவம் பயில ஒரு இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.



(இ) வீட்டு வசதி:

வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்படும் வீடு/வீட்டு மனை குடியிருப்பு தளங்கள் ஒதுக்கீட்டில் 1 சதவீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) போக்குவரத்து சலுகைகள்

மாநில ஓய்வூதியம் மட்டும் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மாநில மற்றும் மத்திய ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய போக்குவரத்துத் துறையால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஓய்வூதியத் திட்டம்;

இத்திட்டம் 15–8–1972 முதல் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 1–8–1980 முதல் மேலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தளர்த்தப்பட்ட சில சலுகைகளுடன் "சுதந்திரத் தா சைனிக் சம்மன் பென்ஷன் திட்டம்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

(அ) ஓய்வூதியத்திற்கு தகுதி பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ. 5,000, 1–8–1980 முதல் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

(ஆ) தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் மகளிரான விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்த மட்டில் சிறைத்தண்டனை அனுபவித்த காலம் 6 மாதத்திலிருந்து 3 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

(இ) தலைமறைவாக இருந்ததற்குச் சான்றாக அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதோர், 5 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்களின் சான்றிதழ்களைத் தக்க ஆதாரமாக சமர்ப்பிக்கலாம். தற்போது 5 ஆண்டுகால சிறைவாசம் 2 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) முன்பு சிறைத்தண்டனை அனுபவித்ததற்குச் சான்றாக சிறைச் சான்றிதழ் அல்லது தன்னுடன் அதே சிறையில் தண்டனை அனுபவித்த முன்னாள் அல்லது தற்போதைய சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அளித்த "சக கைதிச் சான்றிதழ்" இருந்தால் போதுமென்றிருந்த விதியினைத் தளர்த்தி மத்திய அரசிடமிருந்து தாமிரப் பத்திர விருதும் ஓய்வூதியமும் பெற்று ஓராண்டிற்குக் குறையாமல் சிறைத் தண்டனை அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர் இருவர் தன்னுடன் சிறையில் குறித்த காலத்திற்கு தண்டனை அனுபவித்த மற்றொரு விடுதலை போராட்ட வீரருக்கு அளிக்கும் "சக கைதிச் சான்றிதழ்" ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிப்பு செய்துள்ளது.

(உ) 10 சவுக்கடிகள் அல்லது பிரம்படி தண்டனை வழங்கப் பட்டு ஒருவர் துன்பப்பட்டிருந்தால் ஆறு மாதத்திற்குச் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாக கருதப்படுமென்றும் அறிவிப்பு செய்துள்ளது.

(ஊ) ஓய்வூதியத்தின் அளவு விடுதலைப் போராட்ட வீரராய் இருப்பின் அவருக்கு மாதம் ரூ. 200-லிருந்து மாதம் ரூ. 300 ஆகவும் பின்னர் 1–6–1985 முதல் மாதம் ரூ. 500 ஆகவும், மறைந்த விடுதலைப் போராட்ட வீரரின் மனைவி/கணவராயிருப் பின் அவருக்கு மாதம் ரூ. 100-லிருந்து ரூ. 200 ஆகவும் பின்னர் 1–6–1985 முதல் ரூ. 500 ஆகவும் உயர்த்தித்தரப்படுகிறது. திருமணமாகாத மற்றும் வேலையில்லாத சுதந்திரப் போராட்ட வீரர்களின் மூத்த மகளுக்கு ஓய்வூதியம் மாதம் ரூ. 200 லிருந்து ரூ. 300 ஆகவும் மற்ற இரு மகள்களுக்கு மாதம் ரூ. 50லிருந்து ரூ.100 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இது மொத்தத்தில் மாதம் ரூ. 500க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். 1-6-1985 முதல் மாத ஓய்வூதியம் ரூ.500ஆக உயர்த்தப்பட்டதால் திருமணமாகாத மகளிர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. 14-11-1988 முதல் சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் விதவைகளுக்கு ஓய்வூதியம் மாதம் ரூ. 500-லிருந்து ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டது.

158379
சென்னை-600 008
V211,31 N91
N91.2-2